"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"

(ஆமோஸ் 4 : 12)

தேவ எக்காளம்



(ஜாண் பன்னியன் 1628 – 1688)

"மோட்ச பிரயாணம்" என்ற மிகவும் பிரபல்யமான கிறிஸ்தவ பக்தி பிரபந்தத்தை எழுதிய ஜாண் பன்னியன் என்ற தேவ பக்தன் இங்கிலாந்தில் பெட்போர்ட் நகருக்கு ஒரு மைல் தொலைவிலுள்ள எல்ஸ்டவ் என்ற கிராமத்தில் 1628 ஆம் ஆண்டு பிறந்தார். ஒரு காலத்தில் அவரது முந்தைய தலைமுறையினர் நிலச்சுவான்தார்களாகவும், செல்வந்தர்களாகவும் வாழ்ந்த போதிலும் ஜாண் பன்னியனுடைய நாட்களில் அந்த செழுமையும், செல்வாக்கும் பறந்து போய்விட்டது. ஏழையிலும் ஏழையாக வாழ வேண்டிய சூழ்நிலைக்கு அவர் தள்ளப்பட்டிருந்தார்.

Vol. No. 31 செப்டம்பர் - டிசம்பர் 1999 No. 9 to 12

ஜாண் பன்னியன், தகர டப்பாக்கள், கெட்டில்கள் போன்ற வற்றை செய்யும் தகர வேலைக்காரன் தொழிலையே செய்து வந்தார். அவரது தந்தையும் கூட வெண்கல பாத்திரங்களை உருவாக்கும் ஒரு தொழிலாளிதான். பன்னியன் தனது எல்ஸ்டவ் ஊரில் மிகவும் அற்பமான கல்வியை கற்றுவிட்டு தான் கற்ற அந்த சிறிய படிப்பையும் மறந்துவிட்டு நின்றுவிட்டார். மற்ற ஏழைகளின் குழந்தைகளைப் போன்றே ஏழையான எனது கல்வியும் அமைந்தது என்று பன்னியன் கூறுவதுண்டு. எல்ஸ்டவ் கிராமத்திலிருந்த ஜாண் பன்னியனுடைய வீட்டை நீங்கள் இந்த செய்தியில் காணலாம்.

பன்னியன் தனது இளமை காலத்தில் தன்னுடன் தனது இளமை நண்பர்களை சேர்த்துக் கொண்டு தனது கிராமத்தில் காட்டுமிராண்டித் தனமாக வாழ்ந்து வந்தார். அவரைப் போல பொய் புரளி பேசவும், சபிக்கவும், கொடுந்தூஷணம் சொல்லவும், ஆண்டவரை நிந்தனை செய்யவும் அவருக்கு இணையாக எவரும் இருக்க இயலாது. கண்ணிகள் வைத்து வேட்டையாடுவது, பழத்தோட்டங்களை கொள்ளையிடுவது போன்றவற்றிலும் அவரது கரம் முதன்மையாக சேர்ந்திருந்தது. தங்கள் ஊர் தீய கூட்டத்தின் கலகத்தலைவன் தலைமைப் பொறுப்பு தன் வசம்தான் இருந்ததாக அவர் சொல்லுவார். எல்ஸ்டவ் ஊரில் அனைவராலும் இழிவாகக் கருதப்பட்ட கற்பு நெறி தவறிய பெண்கள் சிலர் கூட ஜாண் பன்னியனை காரி உமிழ்ந்து அருவெறுத்து பேசும் எல்லைக்கு அவரது நடத்தை சென்றது. தனது தீய கூட்டாளிகளுடன் சேர்ந்து நடனம் ஆடுவது அவருக்கு மிகவும் விருப்பமாகும். மணிகளைக் கட்டி விளையாடுவது போன்ற விளையாட்டுகளை அவர் தனது நண்பர்களுடன் விளையாடுவார். கர்த்தருடைய பரிசுத்த ஓய்வுநாட்களில் "டிப்-காட்" என்ற ஒரு விளையாட்டை அவர் ஆர்வமாக விளையாடுவதுண்டு. "டிப்-காட்" என்பது நம் தமிழ்நாட்டில் சிறுவர்கள் விளையாடும் "கிட்டிப்புள்" என்ற "குச்சி - கம்பு" விளையாட்டாகும். இரு பக்கமும் கூர்மையாக சீவப்பட்ட ஒரு சிறிய குச்சியை தரையில் வைத்து மற்றொரு கடினமான கட்டை கோலால் அடித்து எழுப்பி அடுத்த அடியில் அதனை தூரமாக செல்லப்பண்ணுவார்கள். அது மிகவும் சுவையான ஒரு விளையாட்டாகும். அந்த விளையாட்டின் காரணமாக தங்கள் கண்பார்வையை இழந்த சிறுவர்கள் பலருண்டு. பன்னியன் படிக்கும் புத்தகங்கள் எப்பொழுதும் காதல் புத்தகங்களாகத்தான் இருக்கும்.

ஜான் பன்னியன் மரணத்தின் பிடியிலிருந்து பல தடவைகளிலும் கர்த்தரால் அற்புதமாக பாதுகாக்கப்பட்டிருக்கின்றார். ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாத அந்த நாட்களில் மரணம் சம்பவித்திருந்தால் நிச்சயமாக அவர் நரகத்துக்குத்தான் சென்றிருக்க வேண்டும். எனினும் தேவனுடைய அநாதி கிருபை அவரை பாதுகாத்தது. ஒரு சமயம் மலைகளுக்கு இடையேயுள்ள குறுகலான கடற்கழியில் விழுந்து நிச்சயமான மரணத்தின் பிடியிலிருந்து அவர் காப்பாற்றப் பட்டார். பெட்போர்ட் நகர்த்திலுள்ள நதியில் படகிலிருந்து தவறி விழுந்தும் நீரில் மூழ்கி விடாமல் கர்த்தரால் அற்புதமாக காக்கப்பட்டார். ஒரு தடவை அவர் தனது நண்பனுடன் வயல்வெளியில் நின்று கொண்டிருக்கையில் ரஸ்தாவில் சென்று கொண்டிருந்த ஒரு பெரிய விஷமுள்ள கட்டுவிரியன் பாம்பைக் கண்டார். கையில் நல்ல வலுவான கம்பு இருந்ததால் ஓடிச்சென்று அதை முதுகில் பலமாக அடித்து அதை ஓட இயலாமல் செய்தார். அத்துடன் அவர் நிற்கவில்லை. தனது கம்பால் அதின் வாயை திறந்து அதின் விஷப்பல்லை தனது மதியீனத்தால் பிடுங்கி எடுக்க முயற்சித்தார். தனது முழுமையான முட்டாள் தனத்தால் தனது சாவை ஒரு நொடிப்பொழுதில் தனக்கு வரவழைத்துக் கொள்ள இருந்த இடத்திலும் அவரை அதிகமாக நேசித்த தேவனுடைய கரம் அவரை அதிசயமாக பாதுகாத்துக்கொண்டது.

பன்னியன் தனது வாழ் நாள் முழுவதும் தன் ஆண்டவருக்கு நன்றி ஸ்தோத்திரம் ஏறெடுத்துக்கொண்டே இருக்கத்தக்கதான ஒரு அசாதாரண சம்பவம் அவரது வாழ்வில் நிகழ்ந்தது. அப்பொழுது அவர் ராணுவத்தில் இருந்தார். ஒரு இடத்தை அவரது படைப்பிரிவு முற்றுகையிட வேண்டுமென்பது மேலிடத்துக்கட்டளை. அவர் அதற்கு ஆயத்தமாகி போக தயாராகிக் கொண்டிருந்தபோது அவருடைய ஸ்தானத்தில் அவரது கூட்டாளி ஒருவன் அவருடைய சம்மதத்துடன் சென்று முற்றுகையிட்ட இடத்தில் காவலாளியாக நின்று கொண்டிருந்தான். அப்படி நின்று கொண்டிருந்த அவனது தலையை எதிரியின் நாட்டுத் துப்பாக்கி யிலிருந்து வந்த குண்டு ஒன்று பதம் பார்த்து விட்டது. அந்த இடத்திலேயே அவன் துடிதுடித்து மாண்டான். தான் துடிதுடித்து சாக வேண்டிய இடத்தில் தனது நண்பன் மரித்ததை அவர் கண்ணீரோடு நினைவு கூர்ந்தார். இவைகள் எல்லாம் நடைபெற்ற போதினும் பன்னியன் மனந்திரும்பாமல் இன்னும் தன்னைக் கடினப்படுத்திக் கொண்டும், தேவனுடைய கிருபைக்கும், இரக்கத்துக்கும்,

அன்புக்கும் எதிராக கலகம் பண்ணுகிறவராகவும் தனது இரட்சிப்பின் காரியத்தை குறித்து இறுமாப்பும் கொண்டவராகவே இருந்தார்.

சிறு வயதிலிருந்தே அவர் பயங்கரமான கனவுகளைக் கண்டு வந்தார். ஆண்டவருடைய இரண்டாம் வருகை வருவதைப் போலவும், ஆயத்தமானோர் அவரால் எடுத்துக் கொள்ளப்படுவதையும் பாவத்தில் ஜீவிக்கும் அவர் தேவனால் கைவிடப்படுவதையும் கண்டு அலறுவார். அவரது பாவ செயல்கள் அதிகரிக்க, அதிகரிக்க அவர் காண்கின்ற சொப்பனங்களும் அவரை கதிகலங்கப்பண்ணுவதாக இருந்தன. சாத்தானாம் பிசாசு அவரை சங்கிலிகளால் கட்டி நரக பாதாளத்தில் தள்ள அவனது கரங்களில் கொண்டு வந்த இரும்பு சங்கிலிகளின் சலசலப்பு ஓசையை கேட்டு ஒரு சொப்பனத்தில் அவர் வேர்த்து விர்த்து நடுநடுங்கி திகைத்து எழும்பினார். தனது மற்றொரு சொப்பனத்தில் அடித்தளமே காணப்படாததான நரக தீச்சூளை தனக்கு முன்பாக திறந்திருப்பதை பார்த்து புலம்பி ஓலமிட்டார்.

தான் மனந்திரும்ப வழிவகுத்துக் கொடுத்த ஒரு சம்பவத்தை ஜாண் பன்னியனே தமது சொந்த வார்த்தைகளால் நமக்கு விளக்குகின்றார். "கர்த்தருடைய ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டியதின் அவசியத்தை அன்று குருவானவர் ஆலயத்தில் அத்தனை கண்டிப்பாக பேசினார். அந்த நாளில் வேலை செய்வதோ, விளையாடுவதோ மற்ற கேளிக்கைகளில் பொழுதை போக்குவதோ கண்டிப்பாக கூடாது என்று திட்டமும் தெளிவுமாக கூறினார். அவரது தேவ செய்தி எனது உள்ளத்தை தொட்டது. எனது பாவ குற்றங்களை உணர்ந்து இனிமேல் ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தோடு வீட்டுக்கு வந்த நான் நன்றாக சாப்பிட்டுவிட்டு உணர்வற்ற மிருகம் போல "டிப்-காட்" விளையாட்டு விளையாட தெருவுக்கு சென்று தீவிரமாக எனது ஆட்டத்தில் ஈடுபட்டிருந்தேன். எனக்கு முன்னால் தரையில் கீழே கிடந்த இருபுறமும் கூர்மையான கட்டையை எனது கரத்திலிருந்த கடினமான சிறிய கட்டை கம்பால் ஒரு தடவை அடித்து மேலே எழும்பிய அந்த குச்சியை அடுத்த அடியால் வெகு தொலைவுக்கு செலுத்த நான் முயன்றபோது "உன்னுடைய பாவங்களை விட்டுவிட்டு மோட்சம் செல்லுவாயா? அல்லது பாவங்களை செய்து நரக பாதாளம் செல்லப் போகின்றாயா?" என்று வானத்திலிருந்து ஒரு சத்தம்

அம்பு போல எனது இருதயத்தை ஊடுருவிச் சென்றது. என்னோடு பேசிய ஆண்டவரின் பரலோக வார்த்தையால் நான் தாக்குண்டு இனி பாவத்தில் நீடித்தால் அழிவே நமது பங்காகிவிடும் என்ற பயத்தால் இரட்சிப்பை தேட ஆரம்பித்தேன்" என்கின்றார் பன்னியன்.

ஜாண் பன்னியன் ஒரு தேவ பக்தியுள்ள ஏழை மனிதரின் மகளை திருமணம் செய்தார். அந்தப் பெண்மணி தன்னுடன் சீதனமாக கொண்டு வந்த பொருட்கள் ஒரு சாப்பிடும் தட்டும் ஒரு கரண்டியுமாகும். அத்துடன் அந்த பக்தியான பெண் இரண்டு அருமையான கிறிஸ்தவ புத்தகங்களையும் கொண்டு வந்திருந்தார்கள். "பக்தி வாழ்வை



அப்பியாசித்தல்" "மனிதனை பரலோகத்துக்கு அழைத்துச் செல்லும் பாதை" என்ற அந்த இரண்டு புத்தகங்களும் பாவத்தில் ஜீவித்த பன்னியனை பக்தி வாழ்வுக்கு அடி எடுத்து வைக்க பெரிதும் கைகொடுத்து உதவின. எனினும், இந்தப் புத்தகங்கள் மாத்திரம்தான் அவரது இரட்சிப்புக்குள் வழி நடத்தினது என்று நாம் சொல்ல இயலாது. அவரை கர்த்தருக்குள் வழிநடத்தினவர் ஜாண் கிஃபோர்ட் என்ற ஒரு பரிசுத்த குருவானவர் ஆவார். ஜாண் கிஃபோர்ட் தனது இளமை காலத்தில் அரசரின் படையில் ஒரு ராணுவ அதிகாரியாக பணியாற்றியவர். அவர் தனது இளம் பருவத்தில் பலத்த சூதாட்டக்காரனும், தேவ துரூஷணக்காரனுமாக இருந்தார். பின்னர் அவர் மனந்திரும்பி ஆண்டவருடைய அடியவரானார். வல்லமையான பிரசங்கியாரான அவர் குருவானவராக பெட்போர்ட் பட்டண ஆலயத்துக்கு வந்தார். அவரது சபையின் அங்கத்தினனான ஜாண் பன்னியனை அந்த குருவானவர்தான் கர்த்தருக்குள் கொண்டு வந்தார்.

கர்த்தருடைய இரட்சிப்பைக் கண்டடைந்த ஜாண் பன்னியனை தேவன் தமது வல்லமையான பாத்திரமாக ஆரம்பம் முதலே பயன்படுத்த தொடங்கினார். "ஜாண் பன்னியன் நல்ல உயரமான மனிதர். அவரது தலைமுடி செந்நிறமாகவும், அவரது கண்கள் பளிச்சிட்டு மின்னுவதாகவும் இருக்கும். அவரது நெற்றி உயரமானதாகவும், அவரது முகப்பார்வை உறுதியானதாகவும், கோபம் கொண்டோனைப் போல காணப்படுவதாயினும் அவர் பேசத் தொடங்கி விட்டால் அவரின் அன்பும், எளிமையும் பாய்ந்தோட ஆரம்பித்து விடும். பிரசங்க பீடத்தில் நின்று பன்னியன் பிரசங்கிக்கும்போது அவரது தேவச் செய்தியும் பாவனைகளும் கடுமையாக இருக்கும். "தேவனுக்கு பயப்படாமல் தங்கள் பாவங்களில் வாழ்வோருக்கு அவரது தேவ செய்தி பயங்கரமான மின்னல் தாக்குதல் போல அத்தனை எச்சரிக்கையாக இருக்கும்" என்று அவரது நண்பர்களில் ஒருவர் ஒரு சமயம் கூறினார்.


பன்னியன் தமது 60 வருட வாழ்நாட் காலத்தில் 12 வருடங்களை பெட்போர்ட் நகரத்து சிறைக்கூடத்தில் செலவிட வேண்டியதாயிற்று. தேவனுடைய இரட்சிப்பின் சந்தோஷத்தை தன் இருதயத்தில் பெற்றிருந்த அவர் அந்த சுவிசேஷ நற்செய்தியை எங்கும் சுற்றித்திரிந்து அறிவித்து வந்த காரணத்திற்காக அவருக்கு 12 ஆண்டு சிறைவாசம் கிடைத்தது. தேவனுடைய ஆலயத்துக்கு வெளியே சென்று சுவிசேஷத்தை தான் அறிவிப்பதில்லை என்று அரசாங்கத்துக்கு கூறி அந்தக் கட்டுப்பாட்டில் அவர் இருந்திருந்தால் ஜெயில் தண்டனை கிடைத்திருக்காது. ஆனால், அதற்கு அவர் கடைசி வரை இணங்கவே இல்லை. பெட்போர்ட் நதிக்கரையில் அமைந்திருந்த பெட்போர்ட் சிறைக்கூடம் மிக மிக குளிராக இருந்தது. சிறைக்கைதிகள் தங்களை சூடுபடுத்திக் கொள்ள ஏதுவாக அங்கு எந்த ஒரு நெருப்பு அடுப்புகளும் இல்லாதிருந்தது. மற்ற கைதிகளைப் போல ஜாண் பன்னியனும் வைக்கோல் புல் மேல் தான் படுத்து நித்திரை செய்தார். தனது சொந்த பாடுகளைக் குறித்து அவர் அதிகமாக கவலை கொள்ளாமல் தனது மனைவி மக்களை குறித்து விசேஷமாக தனது குருட்டுப் பிள்ளை மேரியை பற்றி அதிக துயரம் கொண்டார். அந்த சிறைக்கூடத்தில் அவர் தமது நேரத்தின் பெரும்பகுதியை வேதத்தை வாசிப்பதிலும், ஜெபிப்பதிலும் செலவிட்டார். "ஃபாக்ஸ்" என்ற தேவபக்தன் எழுதிய "இரத்தசாட்சிகள்" என்ற புத்தகத்தையும் அவர் படித்து வந்தார். "மோட்ச பிரயாணம்" என்ற உலகம் போற்றும் பக்தி பரவச நூலையும் பன்னியன் இந்த சிறைக்

கூடத்தில் வைத்துத்தான் எழுதினார். பெட்போர்ட் நதியையும், நதியின் பாலத்துக்கு அருகில் அமைந்துள்ள பன்னியன் சிறை வைக்கப்பட்டிருந்த சிறைக்கூடத்தையும் நீங்கள் இந்த செய்தியில் காணலாம்.

"காண்டா மிருகத்துக்கு ஒத்த பெலன் அவர்களுக்கு உண்டு" (எண் 23 : 22) என்ற கர்த்தருடைய வசனத்தின் படி பன்னியனுடைய பெலன் அபரிதமாக இருந்தது. கர்த்தருடைய நாம மகிமைக்காக அவர் 66 புத்தகங்களை எழுதினார். அவற்றில் சில அநேக நூற்றுக்கணக்கான பக்கங்களைக் கொண்டதாகும். அவர் எழுதிய "மோட்ச பிரயாணம்" என்ற புத்தகம் உலகம் உள்ளவரை அவரது ஆண்டவரது புகழையும், மகிமையையும் பறைசாற்றிக்கொண்டே இருக்கும். அவர் தமது எழுத்து வேலைகளுடன் பல இடங்களுக்கும் ஓடி ஓடி சென்று பிரசங்கிப் பதிலும், போதிப்பதிலும், மக்களுக்கு தேவ ஆலோசனைகள் கூறுவதிலும், ஒரு குருவானவர் என்ற ஸ்தானத்தில் தனது சபை மக்களை சந்திப்பதிலும் தனது காலத்தை செலவிட்டார். தனது சிறைவாசமான 12 ஆண்டுகள் முடிந்த பின்னர் பன்னியன் அடிக்கடி லண்டன் வந்தார். அங்கு அவருக்கு அநேக கர்த்தருடைய பிள்ளைகள் நண்பர்களாக கிடைத்திருந்தனர். லண்டன் மாநகரத்து தலைவரான லார்ட் மேயர் ஜாண் ஷார்ட்டர் அவர்களே பன்னியனுடைய உற்ற நண்பரும் அவருடைய பிரசங்கங்களை அதி ஆவலோடு கவனிக்கும் அன்பராகவும் இருந்தார். லண்டனிலுள்ள பல தேவாலயங்களும் அவரை பிரசிங்கிக்க ஆவலாக அழைத்தன. ஓய்வு நாட்களில் லண்டனிலுள்ள தேவாலயங்களில் அவர் பிரசிங்கித்தால் 3000 பேர்கள் மிக எளிதாக கூடிவிடுவார்கள். தேவாலயங்களில் இடம் போதாத காரணத்தால் அவரது செய்திகளை கேட்க இயலாமல் வீட்டுக்கு துக்கத்துடன் திரும்பிச்செல்லுவோரும் ஏராளம் உண்டு. பன்னியன் பிரசிங்கிக்க போகிறார் என்று ஒரு நாளுக்கு முன்னர் அறிவிப்பு கொடுத்தால் தேவாலயம் நிரம்பி வழியும் அளவுக்கு மக்கள் கூடிவிடுவார்கள். கடுங்குளிரான பனி கால நாட்களிலும் கூட இருள் சூழ்ந்த அதிகாலை நேரம் ஓய்வு நாள் இல்லாத இடை நாளில் கூட 17ஆம் நூற்றாண்டான அந்த ஜனப்பெருக்கமில்லாத காலத்தில் 1200 பேர்கள் வரை வந்து விடுவார்கள். அவரது பிரசங்களால் ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட மக்களின் தொகை மிகப் பெரிய ஒன்றாகும். கர்த்தருடைய கவ்வாரி அன்பை நினைத்து கண்ணீர் விட்டு கதறும் தேவ பக்தன் அவர். கர்த்தருடைய ராப்போஜன பந்தியில் அவர் பங்கு பெறும்போது கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தோட

தனக்களிக்கப் படும் அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் புசித்து பானம் பண்ணுவார்.

"மோட்ச பிரயாணம்" என்ற அவரது புத்தகம் அவரது வாழ்நாட் காலத்திலேயே 1,00,000 பிரதிகள் விற்பனையானது. 100 மொழிகளுக்கு மேல் அந்த நூலை மொழி மாற்றம் செய்துள்ளனர். பன்னியனுடைய மரணத்துக்கு பின்னர் அந்த பக்தி நூல் எத்தனை லட்சங்கள் அச்சிடப்பட்டு விற்பனையாயின என்பது எவராலும்



கணக்கிட இயலாத காரியமாகும். ஜாண் பன்னியன் நினைத்திருந்தால் அவருடைய புத்தகங்களின் விற்பனை மூலமாகவே ஆடம்பரமான வீடுகளையும், நிலபுலன்களையும், பெரும் செல்வத்தையும் ஈட்டியிருக்க முடியும். ஆனால், அவர் தனது மரண பரியந்தம் ஒரு ஏழை மனிதனாகவே இருந்து இந்த உலகத்தைவிட்டு கடந்து சென்றார். அவர் மரிக்கும்போது விட்டுச் சென்ற செல்வம் வெறும் 42 பவுண்டுகள் 19 ஷில்லிங் மட்டுமே! பன்னியன் தனது முதல் மனைவி இறந்ததும் இரண்டாம் திருமணம் செய்தார். இரு மனைவிகளுக்குமாக 3 ஆண்கள் 3 பெண்கள் இருந்தனர். ஆனால், இன்று அவரது வம்சாவழியில் அவரது கடைசி மகள் சாராள் குடும்பத்தினரே உள்ளனர்.

1688 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 31 ஆம் நாள் பன்னியன் லண்டன் மாநகரத்தில் தனது அன்பான நண்பன் ஸ்ட்ருட்விக் என்பவரது வீட்டில் மரணமடைந்தார். அப்பொழுது பன்னியனுக்கு வயது 60 ஆகும். அங்குள்ள பன்ஹில் ஃபீல்ட்ஸ் என்ற இடத்தில் அவர் அடக்கம் செய்யப்பட்டார். அவர் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்தில் ஒரு

பெரிய கல்லறை இருப்பதாக சொல்லப்படுகின்றது. அரசர்கள் அடக்கம் செய்யப்படுகின்ற இடமான "வெஸ்ட் மினிஸ்டர் அபி" உள்ள லண்டனில் ஜாண் பன்னியனுக்கு ஒரு ஞாபகார்த்த பலகணி நிறுவப்பட்டுள்ளது. அவர் 12 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்ததும், மோட்ச பிரயாணம் என்ற பரிசுத்த நூலை எழுதியதுமான பெட்போர்ட் நகரத்தில் பன்னியனுடைய உருவச்சிலை எழுப்பப்பட்டு அங்குள்ள அரும்பொருள் காட்சியகத்தில் அவரது பொருட்கள் பலவும் வைக்கப்பட்டுள்ளன. பன்னியன் தனது மோட்ச பிரயாண புத்தகத்தில் வியாக்கியானி முனிவர் வீட்டில் மோட்ச பிரயாணி கிறிஸ்தியான் கண்டதான ஒரு காட்சி இடம் பெறுகின்றது. அந்த காட்சியில் வரும் மனித உருவத்தை பெட்போர்டில் செதுக்கி வைத்துள்ளனர். அந்த மனிதன் பரலோகத்தை அண்ணாந்து பார்த்தவண்ணமாக இருப்பதையும், அவனது வலது கரத்தில் தேவனுடைய வேதாகமம் இருப்பதையும், உலகத்தையும் அதின் மேன்மைகளையும் அற்பமும் குப்பையுமாக எண்ணி தனது கால்களுக்கு கீழாக அவைகளை மிதித்து தள்ளி புறக்கணித்திருப்பதையும், மனந்திரும்பி தேவனை அண்டிக்கொள்ள பூலோக மாந்தரிடம் அந்த உருவம் பரிந்து மன்றாடுவதைப் போல சிலையை செதுக்கியிருக்கின்றனர்.

ஜாண் பன்னியன் தனது மரணத்துக்கு 12 நாட்களுக்கு முன்னர் 'ஒயிட் சாப்பல்' என்ற இடத்தில் கடைசியாக செய்த பிரசங்கம்

"அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்" *(யோ 1 : 13)*

மேலே குறிப்பிட்ட தேவனுடைய வசனமானது அதற்கு முன்னாலுள்ள வசனங்களுடன் தொடர்புடையது. ஆகையால் அந்த வசனங்களையும் நீங்கள் கவனிக்க நான் விரும்புகின்றேன். "அவர் தமக்கு சொந்தமானதிலே வந்தார், அவருக்கு சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாச முள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" *(யோ 1 : 11, 12)* "அவர்கள், இரத்தத்தினாலாவது

மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள்" நமக்கு முன்னாலுள்ள இந்த வசனங்களிலே இரண்டு காரியங்கள் உண்டு.

முதலாவது, ஆண்டவர் தமக்கு சொந்தமானதிலே வந்து தமது சொந்தமானவர்களுக்கு தம்மை கையளித்தபோது அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்து தள்ளினார்கள்.

இரண்டாவது, அப்படி தம்மை ஏற்றுக்கொள்ளாதவர்களை தம்மைவிட்டு அப்பால் கடந்து போகச் செய்துவிட்டு தம்மை ஏற்றுக்கொண்ட மக்கள் அவருடைய சொந்த மக்களாகும்படிக்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். இவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள். அவரை ஏற்றுக் கொள்ளாதவர்கள் மாம்சத்தினாலும், இரத்தத்தினாலும் பிறந்தவர்கள். அவரை ஏற்றுக் கொண்டவர்கள் தேவனை தங்களுக்கு தகப்பனாக கொண்டவர்கள். அத்துடன் கிறிஸ்து இரட்சகரை குறித்து தணிக்க முடியாத பரலோக வாஞ்சை கொண்டவர்கள்.

"இரத்தம்" என்று கர்த்தர் குறிப்பிட்ட காரியத்தை உங்களுக்கு விளக்க விரும்புகின்றேன். கர்த்தரை விசுவாசிக்கின்றவர்கள் அவருடைய சுதந்திரத்துக்கு பங்காளிகளாக கர்த்தரால் பிறந்தவர்கள் ஆவார்கள். கிறிஸ்தவ குடும்பங்களில் வம்சாவாளியாக பிறப்பதே இரத்தத்தினால் பிறப்பதாகும். ஓ, நான் ஒரு பக்தியுள்ள மனுஷன் அல்லது ஸ்திரீயின் மகன் என்று வெறும் உரிமை பாராட்டலை இந்த இரத்தமானது குறிக்கும். மாம்ச பிரகாரமாக நாம் உரிமை பாராட்டும் காரியங்களை தேவன் உதறித் தள்ளுகின்றார். யூத ஜனங்கள் தாங்கள் ஆபிரகாமின் சந்ததி என்று எக்களிப்பு கொண்டார்கள். அப்பொழுது ஆண்டவர் அவர்களைப் பார்த்து ஆபிரகாம் எங்கள் தகப்பன் என்று வீண் எண்ணம் கொண்டு இறுமாப்பாய் இருக்க வேண்டாம். பரலோக ராஜ்யத்துக்குள் நீங்கள் பிரவேசிக்க வேண்டுமானால் நீங்கள் தேவனால் பிறந்திருக்க வேண்டும் என்று கூறினார்.

"மாம்ச சித்தம்" என்பது ஒரு மனிதன் தனது முழு பெலத்தோடு தனது மாம்ச பிரகாரமான காரியங்களையும், மாம்ச ஆசை இச்சைகளையும் தன்னளவில் நிறைவேற்றிக்கொண்டும், கட்டுப்பாடற்ற நிலையில் வாழ்ந்துகொண்டும் இருக்கும் அதே நேரத்தில் அவ்வப்போது

ஜெபிப்பதும், பக்திக்கடுத்த புத்தகங்களை வாசிப்பதும், மரிக்கும்போது பரலோகத்துக்கு கட்டாயம் சென்றுவிட வேண்டும் என்று ஆசைகொள்ளும் ஒரு நிலையைக் குறிப்பதாகும். இப்படிப்பட்ட மக்கள் தாங்கள் எத்தனை பாவியாக இருந்தாலும் தாங்கள் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய இராஜ்யத்துக்கு பங்காளிகளாகிவிட வேண்டும் என்று அவ்வப்போது நினைத்தும் கொள்ளுவார்கள்.

இவர்களுடைய எண்ணங்கள் ஒருக்காலும் சித்திபெறுவது இல்லை. ஏனெனில் "விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்" (ரோ 9 : 16) என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகின்றது. ஒரு மனிதன் தான் இரட்சிப்பை கண்டடைய வேண்டும் என்ற ஆவல் அவனில் இருப்பினும் தேவனுடைய கிருபை அவனுக்கு இல்லாதபட்சத்தில் அவன் இரட்சிப்பை பெறவே இயலாது. தேவனுடைய கிருபை இல்லாத ஒரு மனிதன் தான் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற சித்தம் கொண்டிருந்தாலும் தேவனுடைய சித்தம் அதுவாயிராதபடியால் அவனால் அதை அடைய கூடாது. நாம் மனந்திரும்பி இரட்சிப்பை பெற்றுக்கொள்ளுவது நமது சித்தத்தின்படி நடக்கும் ஒரு காரியமாக இருக்குமானால் உங்கள் எல்லோரையும் நான் பரலோகத்திற்கு முதற்காரியமாக அனுப்பி வைத்துவிடுவேன். எத்தனையோ கிறிஸ்தவ மக்கள் தங்கள் பிள்ளைகளுடைய இரட்சிப்புக்காக அழுகின்றார்கள், அங்கலாய்க்கின்றார்கள், கதறுகின்றனர். ஆனால், அவர்களுடைய விருப்பம் நிறைவேறுவதில்லை. காரணம் தேவனுடைய சித்தம் மாத்திரமே இதில் ஆளுகை செய்கின்றது. அவரது சித்தம் ஒன்றே சட்டமாகவும் உள்ளது. இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவனுடைய குடும்பத்தில் பிறப்பவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறப்பவர்கள் அல்லர்.

கர்த்தராகிய இயேசுவை தங்கள் உள்ளங்களில் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் முழுமையாக அவரில் விசுவாசம் வைக்கின்றனர். இவர்களே தேவனுடைய குடும்பத்தில் பிறந்திருக்கின்றனர். அவர்கள் தேவனுடைய குடும்பத்தில் பிறப்பார்கள் என்று சொல்லாமல் பிறந்தவர்கள் என்று தேவனுடைய வார்த்தை கூறுகின்றது. அவர்கள் தேவனுக்கும், தேவனுடைய உன்னதமான காரியங்களுக்கும் என்று தேவனால் பிறந்தவர்கள். "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தை காணமாட்டான்" (யோ 3 : 3) என்று

கர்த்தருடைய வார்த்தை கூறுகின்றது. தேவனால் ஒருவன் பிறந்தாலன்றி அவன் தேவனுடைய ராஜ்யத்தை காண இயலாது. தேவனுடைய ராஜ்யம் குறித்த காரியத்தை அவன் சுவிசேஷ பகுதியில் வாசிக்கலாம். ஆனால் அவன் தேவனால் பிறக்கும்போதுதான் அந்த ராஜ்யத்தின் மகத்துவத்தை தனது சொந்த வாழ்வின் அனுபவத்தில் கண்டானந்திக்கின்றான். இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது அவன் அதை சுதந்தரிக்காமல் கிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசத்தின் மூலமாக அந்த புதிய பிறப்பின் மாட்சிகளை கண்டடைகின்றான்.

ஒன்று அல்லது இரண்டு உதாரணங்களின் மூலமாக நான் அதை உங்களுக்கு ரூபகாரப்படுத்த ஆசைப்படுகின்றேன். ஒரு குழந்தை இந்த உலகத்தில் வந்து பிறப்பதற்கு முன்னர் தனது தாயின் இருண்ட கர்ப்பப்பையில் இருக்கின்றது. அதைப் போலவே ஒரு தேவனுடைய பிள்ளையும் மறுபடியும் பிறப்பதற்கு முன்பாக பாவப்படுகுழியின் இருண்ட ஒளிப்பிடங்களில் வாழ்கின்றது. தேவனுடைய ராஜ்யத்தை குறித்து அந்த ஆத்துமாவுக்கு எதுவுமே தெரியாது. எனவேதான், அந்த பிறப்பை ஒரு புதிய பிறப்பு என்று அழைக்கின்றனர். அந்த ஆத்துமா, தான், உலகத்தில் இருந்தபோது உலகத்தை எத்தனையாக நேசித்தது என்பதையும், அது மறுபடியும் பிறந்ததின் பின்னர் ஆவிக்குரிய கோணத்தில் தேவனுக்கடுத்த காரியங்களை எவ்வண்ணமாக வாஞ்சிக்கின்றது என்பதையும் நாம் பார்க்கின்றோம்.

இருள் சூழ்ந்த தாயின் கர்ப்ப பையிலிருந்து வெளிப்படும் குழந்தை பிறப்புக்கு மறுபடியும் கர்த்தருக்குள் பிறக்கும் பிறப்பானது மேலே ஒப்பிடப்பட்டது போல பாவக்குழியாகிய கல்லறையிலிருந்து உயிரோடு எழும்பும் ஒரு காரியத்துக்கும் அதினை நாம் ஒப்பிடலாம். "தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னை பிரகாசிப்பிப்பார்" (எபே 5 : 14) என்று தேவ வசனம் சொல்லுகின்றது. "மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவர்" (வெளி 1 : 5) என்று வேதத்தில் நாம் நம் ஆண்டவரைக் குறித்து வாசிக்கின்றோம். நீ மறுபடியும் பிறந்து பூமிக்குரியவைகளையல்லாமல் மேலானவைகளை நாடுபவனாக இருப்பாயானால் மரித்தோரிலிருந்து முதற் பிறந்த கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கும் உனது மறுபடியும் பிறந்த புதிய பிறப்புக்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. மறுபடியும் பிறந்தவர்கள்

சாத்தானுடைய இருளின் அந்தகார ஏகாதிபத்திய உலகத்தில் இருந்து காப்பாற்றப்பட்டவர்கள் ஆவார்கள். காப்பாற்றப்பட்டது மட்டுமல்ல தேவனுடைய நேசகுமாரனாம் இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்தில் ஒரு புதிய பரிசுத்த வாழ்க்கை வாழ்வதற்காக உருவாக்கப்பட்டவர்கள். தாயின் உதவியால் தாயின் இருண்ட கர்ப்பத்திலிருந்து காப்பாற்றப்பட்டது போல மறுபடியும் பிறந்தவனும் பாவப்படுகுழியாம் உளையான சேற்றிலும், கல்லறையிலுமிருந்து இரட்சகரால் வெளியே தூக்கி எடுக்கப்பட்டு காப்பாற்றப் பட்டிருக்கின்றான். மறுபடியும் பிறந்த ஒரு ஆத்துமாவுக்கு ஏற்படக்கூடிய ாறுதல்களை நான் உங்களுக்கு விவரித்துக்கூற விரும்புகின்றேன்.

முதலாவதாக:- ஒரு குழந்தை இந்த உலகத்துக்குள் ரவேசித்ததும் அழ ஆரம்பித்து விடுகின்றது. குழந்தையானது தாயின் ர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டதும் எந்த ஒரு சத்தமும் அது ொடுக்கவில்லையானால் அதாவது வீறிட்டு அழவில்லை என்றால் அதை செத்து விட்டதாக கருதுகின்றனர். மறுபடியும் தேவனால் பிறந்தவர்களே, கிறிஸ்தவர்களே, நீங்கள் கதறுகிறவர்களாக இல்லாதபட்சத்தில் உங்களில் எந்த ஒரு ஜீவனுமே கிடையாது. நீங்கள் தேவனால் பிறந்தவர்களானால் நீங்கள் ஒரு கதறுகிற கூட்டத்தினர். பாவத்தின் படு பாதாளத்திலிருந்து நீங்கள் தேவனால் தூக்கி ாடுக்கப்பட்ட உடனேயே "ஆண்டவரே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கூறி கதறுவதை தவிர உங்களால் வேறு என்னத்தை செய்ய முடியும்? சிறைச்சாலைக்காரனை தேவன் தொட்ட அதே ஷணத்தில் "ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கதறி அழுகின்றான். ஒருக்காலும் ஜெபிக்காத, ஜெபமற்ற எத்தனை கிறிஸ்தவர்கள் லண்டன் பட்டணத்தை சுற்றி நடந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் தங்கள் வீடுகளில் தங்கள் ஆகாரங்களுக்கு முன்பாக ஜெபிப்பதில்லை. தாங்கள் தங்கள் இளைப்பாறுதலுக்கு செல்லும் இரவு நேரம் ஜெபித்துவிட்டு படுக்கைக்கு செல்வதில்லை. காலையில் தங்கள் படுக்கையிலிருந்து எழும்பும்போது தங்களை இரா முழுவதும் பாதுகாத்த அன்பின் தேவனுக்கு நன்றி ஜெபம் ஏறெடுப்பதில்லை. அவர்களுக்கும் ஜெபத்துக்கும் சம்மந்தமே கிடையாது. ஆனால், தேவனால் பிறந்த உன்னால் அப்படி நடந்து கொள்ள இயலாது. நீ உயிர் வாழ்வதே ஜெப ஆவியில்தான். எப்பொழுதும் ஜெபத்தில் தேவனுக்கு முன்பாக கதறுவதே உன் காரியம்.

இரண்டாவதாக :- புதிதாக பிறந்த ஒரு குழந்தை பொதுவாக அழுகிறது மாத்திரமல்ல, அது தனது தாயின் மார்பகத்தை வாஞ்சிக்கின்றது. தாயின் மார்பகம் இல்லாமல் அது உயிர் வாழ இயலாது. அதை மனதில் கொண்டுதான் அப்போஸ்தலனாகிய பரிசுத்த பேதுரு தேவனால் புதிதாக பிறந்த குழந்தையும் தான் வளரும்படி களங்கமில்லாத ஞானப்பாலை வாஞ்சித்து கதறுவதாக எழுதுகின்றார். நீயும் தேவனால் பிறந்திருந்தால் தேவனுடைய மார்பகத்தை வாஞ்சித்து கதறுவதன் மூலம் உனது பரிசுத்த பிறப்பை உலகுக்கு கூறுவாய். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் என்ற பாலைப் பருக நீ ஆசை ஆவலாக இருக்கின்றாயா? ஆண்டவரை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுமுன்னர் ஒருவன் உலகத்தானாக வாழ்கின்றான். ஆனால் அவன் தேவனுடைய பிள்ளையாகும்போது அவனது வாழ்வு தலைகீழ் மாற்றம் பெறுகின்றது. நீ மறுபடியும் பிறந்த அனுபவத்துக்குள் வந்திருந்தால் களங்கமில்லாத ஞானப்பாலாகிய தேவனுடைய வசனத்தை தவிர வேறு எதுவாலும் உனது ஆத்துமத்தை திருப்தி செய்ய இயலாது. ஒரு உலகத்தானுக்கு ஒரு வேசியின் வீடு திருப்தி அளிக்கும். அது அவனுக்கு மிகுந்த இன்பம் சுரப்பதாக தெரியும். ஆனால், மறுபடியும் பிறந்த ஒரு ஆத்துமாவுக்கு தேவனுடைய வசனமாகிய பால் இல்லாமல் உலகில் உயிர் வாழ இயலாது. ஒரு ஸ்திரீயின் மார்பகம் ஒரு குதிரைக்கு எதற்கு தேவை? ஆனால், அதே மார்பகம் ஒரு குழந்தைக்கு எப்படிப்பட்டது! அந்த மார்பகம் ஒன்றே அந்த குழந்தைக்கு இரவும் பகலும் ஆறுதல் அளிக்கும். அதின் உயிர் வாழ்வு இராப்பகலாக அதினிடமிருந்துதான் சுரந்து வந்து கொண்டே இருக்கும். அந்த மார்பகத்தை அந்த குழந்தையிடமிருந்து எடுத்துவிட்டால் அது அதோகதியாகிவிடும். பரலோக காரியங்கள் ஒரு உலகத்தானுக்கு பைத்தியமாகவும், அற்பமும், குப்பையாகவும் காணப்படும் அதே வேளையில் ஒரு ஆண்டவருடைய பிள்ளைக்கு அந்த பரலோக பாக்கிய எண்ணம் மட்டும்தான் அதற்கு ஆறுதலும் ஆனந்தமும், களிகூருதலுமாகவும் இருக்கும்.

மூன்றாவதாக :- புதிதாக பிறந்த ஒரு குழந்தை தனது தாயின் கர்ப்பத்தில் எவ்வண்ணமாக உஷ்ணமான நிலையில் இருந்ததோ அதே வண்ணமாக பிறந்த பின்னரும் நல்ல வெதுவெதுப்பாக வைத்து பாதுகாக்கப்படாத பட்சத்தில் அந்த சிசு மரித்துப் போகும். அதை நன்கு சுற்றி மூட துணிகள் வேண்டும். கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக புதிதாக பிறந்தவர்களுக்கும் தேவன் தமது வாக்குத்தத்தங்களாகிய வஸ்திரங்களால் அவர்களை நன்கு மூடுகின்றார். அந்த வாக்குத்தத்தங்களே அவர்களை

ஜீவனோடு பாதுகாக்கின்றது. உலகப்பிரகாரமான மக்கள் தங்களுக்கு தேவையான உஷ்ணத்தை உலகப்பிரகாரமான காரியங்களிலிருந்து பெற்றுக்கொள்ளுகின்றனர். ஆனால், தேவனால் பிறந்த மக்களுக்கு அப்படி செய்ய இயலாது. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மட்டுமே தான் அவர்களை உயிரோடு காக்கின்றது. "உன்னை இரத்தமற ஸ்நானம் பண்ணுவித்து உனக்கு எண்ணெய் பூசி சித்திர தையலாடையை உனக்கு உடுத்தினேன்" (எசே 16 : 9, 10) என்று தேவ வார்த்தை கூறுகின்றது. ஒரு தாய் தனது குழந்தையோடு இருக்கும்போது அந்த குழந்தைக்கு என்ன, என்ன அருமையான காரியங்களை எல்லாம் செய்கிறாள். தன் குழந்தையை பார்க்கின்ற யாவரும் அதை மெச்சிக்கொள்ளும்படியாக அதை அவள் ஆடை அணிகலன்களால் அலங்கரிக்கின்றாள். அந்த காரியத்தையே தான் தேவனும் தமது பிள்ளைகளுக்கு செய்வதை நாம் பார்க்கின்றோம். "உன்னை ஆபரணங்களால் அலங்கரித்து உன் கைகளிலே கடகங்களையும், உன் கழுத்திலே சரப்பணியையும் போட்டு உன் நெற்றியில் நெற்றிப் பட்டத்தையும், உன் காதுகளில் காதணியையும், உன் தலையின் மேல் சிங்காரமான கிரீடத்தையும் தரித்தேன்" (எசே 16 : 11,12) அதின் 13ஆம் வசனத்தில் "ராஜ்யத்தை சுதந்தரிக்கும் சிலாக்கியத்தையும் நீ பெற்றாய்" என்றதோர் பொன்னான வாக்குத் தத்தமும் உண்டு. கிறிஸ்து இரட்சகரின் நீதியும், பரிசுத்த ஆவியின் திரண்ட கிருபைகள் மாத்திரமே நித்திய மோட்ச ராஜ்யத்தை நாம் சுதந்தரிக்க நமக்கு வகை செய்து கொடுத்தது.

நான்காவதாக :- ஒரு குழந்தை அதின் தாயின் மடியிலிருக்கும் போது அந்த தாயானவள் அந்த குழந்தையை குறித்து மகா ஆனந்தம் கொள்ளுகின்றாள். தாயின் மடியானது அந்த குழந்தைக்கு எத்தனையோ பாதுகாப்பும், ஆறுதலுமாக இருக்கின்றது. தேவனும் அதைப்போலவே தமது அன்பு குழந்தைகளுக்கும் செய்கின்றார். அவர்களை தமது முழங்கால்களில் வைத்து தாலாட்டுகின்றார். "ஆறுதல்களின் முலைப் பாலை உண்டு திருப்தியாகி, நீங்கள் சூப்பிக்குடித்து மன்மகிழ்ச்சி யாவீர்கள்" (ஏசாயா 66 : 11) "ஒருவனை அவன் தாய் தேற்றுவது போல நான் உங்களை தேற்றுவேன்" (ஏசாயா 66 :13) என்று தேவன் கூறுகின்றார். தேவனால் பிறந்தவர்களுக்கேயன்றி இந்தக் காரியங்கள் எல்லாம் மண்ணின் மாந்தருக்கு தெரியாது.

ஐந்தாவதாக :- பொதுவாக ஒரு குடும்பத்தில் தகப்பனுக்கும் மகனுக்கும் நெருங்கிய முகச்சாயல் இருப்பதை நாம் பார்க்கின்றோம்.

மகன் தனது தகப்பனுடைய முகரூபத்தை தாங்கி நிற்கின்றான். அதைப்போலவே மறுபடியும் பிறந்த தேவ மக்கள் தங்கள் ஆண்டவர் இயேசுவின் சாயலைத் தரித்துக் கொண்டிருக்கிறார்கள். (கலா 4 : 19) தங்களை நேசிக்கும் பிள்ளைகளை பெற்றோர் அதிகமாக நேசிப்பதை நாம் பார்க்கின்றோம். அவ்விதமாகவே, தம்மை நேசிப்போரை தேவனும் அன்புகூர்ந்து நேசிக்கின்றார். அதின் காரணமாக அவர்கள் கர்த்தருடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுகின்றனர். தேவனால் பிறவாத மக்கள் அவரது சாயலைக் கொண்டிராததால் அவர்கள் சோதோமியர்கள் என்று அழைக்கப்படுகின்றார்கள். பிசாசின் பிள்ளைகளை தேவன் அவர்களது முகச்சாயல் மூலம் வர்ணிக்கின்றார். பிசாசின் மக்கள் தங்கள் தந்தையாம் பிசாசின் கிரியைகளையே செய்வார்கள். அநீதியான எல்லா செயல்களும் சாத்தானுடைய கிரியைகளாகும். நீ பூமிக்குரியவனானால் உனது சாயல் பூமிக்குரிய சாயலாக இருக்கும். நீ பரலோகத்திற்குரியவனானால் உனது சாயல் உன்னத நாட்டுக்குரிய பரிசுத்த சாயலாக இருக்கும்.

ஆறாவதாக :- ஒரு மனிதனுக்கு ஒரு குமாரன் இருப்பானானால் அவன் அவனை தன்னைப் போலவே வளர்க்க பிரயாசப்படுகின்றான். அந்த குமாரன் தனது தகப்பனுடைய வீட்டு ஒழுங்குகளை கற்றுக் கொள்ளுகின்றான். தேவனால் பிறந்தவர்களும் அப்படித்தான் தங்கள் ஆண்டவருடைய பரிசுத்த ஒழுங்குகளையும் அவருடைய கட்டளைகளின் வழியையும் படித்துக் கொள்ளுகின்றனர். இந்த உலகத்தில் இருக்கும் காலம் வரை தங்கள் ஆண்டவராம் தேவனுடைய வீட்டிலே எவ்விதமான பரிசுத்த நிலைகளில் வாழ வேண்டுமென்பதை அவர்கள் தெள்ளத் தெளிவாக அறிந்து கொள்ளுகின்றனர். அங்கு அவர்கள் அப்பா, பிதாவே என்று தங்கள் பரம தகப்பனை கூப்பிடவும் கற்றுக் கொள்ளுகின்றனர்.

ஏழாவதாக :- பிள்ளைகள் தங்களுடைய தேவைகளுக்கு தங்கள் தகப்பனை சார்ந்து கொள்ளுவது இயல்பான காரியமாகும். தங்களுக்கு ஒரு ஜோடி பாதரட்சைகள் தேவையானால் அவனிடம் போய் சொல்லுகின்றனர். புசிக்க ரொட்டி வேண்டுமானால் தகப்பனிடம் தெரிவிக்கின்றனர். தேவனுடைய பிள்ளைகளும் அப்படித்தான் இருக்க வேண்டும். உனக்கு ஆவிக்குரிய ரொட்டி தேவையா? உன் ஆண்டவரிடம் அதை கூறு. தேவ கிருபையின் பெலன் உனக்கு தேவையா? உன் கர்த்தரிடம் அதை சொல்லு. சாத்தானுடைய பாவ சோதனைகளை மேற்கொள்ள உனக்கு உன்னதத்தின் பெலன் வேண்டுமாயின் அதை உன்

பரம தகப்பனிடம் தெரிவி. சத்துருவாம் பிசாசானவன் உன்னை பாவத்தில் வீழ்த்தும்படியாக சோதிக்கின்றானா? உன் வீட்டுக்கு ஓடோடி சென்று உன் முழங்கால்களை முடக்கி உன் பரலோக தந்தையிடம் நடந்தவற்றை கூறு. தங்களுக்கு யாராயினும் தவறு செய்தால் அதை தங்கள் தகப்பனிடம் குழந்தைகள் சொல்லுவது இயல்பான காரியமாகும். அவ்வாறே தானே தேவனால் பிறந்த தேவ மக்களும் பிசாசின் சோதனைகளை சந்திக்க நேரிடும்போது அதை தங்கள் தேவனுக்கு சொல்லுகின்றனர்.

இந்த சந்தர்ப்பத்தில் நான் உன்னிடம் சற்று கண்டிப்புடன் கேட்கும் ஒரு காரியம் யாதெனில், நீ தேவனால் பிறந்தவனா இல்லையா என்பதுதான். தேவனால் பிறந்த மனிதனுக்கும் உலகத்து மனிதனுக்கும் முன்பாக நான் வைக்கும் காரியங்களை நீ கவனமாக ஆராய்ந்து பார், பாவத்தின் படுகுழியிலிருந்து நீ கிறிஸ்துவானவரால் கை தூக்கி எடுக்கப்பட்டவனா? "என் பிதாவே" என்று ஆண்டவரை நோக்கி சத்தமிட நீ கற்றுக் கொண்டாயா? "நீ என்னை நோக்கி என் பிதாவே என்று அழைப்பாய்" (எரே 3 : 19) என்ற கர்த்தருடைய வசனத்தின்படி தேவமக்கள் யாவரும் தங்கள் கர்த்தரை "என் பிதாவே" என்று உரிமை பாராட்டி சொந்தம் கொண்டாடி கூப்பிடுகிறவர்களே. தேவனுடைய களங்கமில்லாத ஞானப்பாலாம் வேத வசனங்களால் உனது வயிற்றை நிரப்பாவிட்டாலும் நீ அவைகளை குறித்து அக்கறை கொள்ளாதவனா? அவைகளில் உனக்கு வாஞ்சை இல்லையா? தேவனோடு சமாதானமாக நீ இராதபட்சத்திலும் உன்னளவில் திருப்தி அடைந்துவிடக் கூடியவனா? இந்த காரியங்களை குறித்து தீவிரமாக நீ ஆராய்ந்து இவைகளை பற்றி நீ உன் இருதயத்திடம் கேள்வி எழுப்ப நான் உன்னை கெஞ்சிக் கேட்கின்றேன். மேலே நான் குறிப்பிட்ட அடையாளங்கள் உன்னில் காணப்படவில்லை என்றால் தேவனுடைய பரம ராஜ்யத்துக்குள் பிரவேசிக்க நீ குறைவுள்ளவன் என்பதை நீ நிச்சயம் செய்து கொள்ளலாம். அந்த காரியங்களை குறித்து உனக்கு எந்த ஒரு விருப்பமோ, நாட்டமோ இருக்காது. இப்படிப்பட்டவர்கள் "ஆண்டவரே, ஆண்டவரே எங்களுக்கு திறக்க வேண்டும்" என்பார்கள். அவர் அந்த மக்களுக்கு பிரதியுத்தராக "உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்" என்பார். தேவனுடைய பிள்ளையாக இல்லாத பட்சத்தில் பரலோகத்தின் சுதந்திரவாளியாக நீ இருக்க இயலாது.

நம்முடைய குழந்தைகளாக இல்லாதபோதிலும் நாம் சில சமயங்களில் மற்ற குழந்தைகளுக்கு நம்மிடமுள்ள ஏதாவது ஒன்றை

கொடுப்போம். ஆனால் அவர்களுக்கு நமது நிலபுலங்களை ஒருக்காலும் கொடுக்கமாட்டோம். நீங்கள் பிள்ளைகளைப் போல வாழ்ந்தால்தான் பிள்ளைகளுக்குரிய சுதந்திரம் உங்களுக்கு கிடைக்கும். ஒரு அரச குமாரன் தெருவிலுள்ள ஒரு பிச்சைக்கார மனிதனோடு விளையாடிக் கொண்டிருப்பதை நாம் காண இயலுமா? அதை நாம் நினைத்தே பார்க்க வேண்டியதில்லை. நீ ராஜகுமாரனானால் ராஜகுமாரனாக வாழ்ந்து காட்டு. நீ கிறிஸ்துவோடு கூட எழுந்ததுண்டானால் மேலானவைகளைத் தேடு., பூமியிலுள்ளவைகளை அல்ல மேலானவைகளை நாடு. தேவனுடைய பிள்ளைகளாக நீங்கள் கூடி வரும்போது உங்களுடைய பிதா உங்களுக்கு வாக்குப்பண்ணியவைகளை குறித்து களிகூர்ந்து பேசுங்கள். நீங்கள் அனைவரும் தேவனுடைய திருவுள சித்தத்தை மாத்திரம் நேசிக்க வேண்டும். நீங்கள் தேவனுடைய பிள்ளைகளானால் ஒருவரோடு ஒருவர் அன்புகூர்ந்து கூடி வாழுங்கள். உலகம் உங்களோடு சண்டையிட்டால் அது மிகவும் அற்பமான காரியமாகும். ஆனால் நீங்கள் ஒருவரிலொருவர் சண்டையிடுபவர்களாக இருந்தால் அது மிகவும் விசனத்துக்குரிய காரியமாகும். உங்கள் நடுவில் சண்டையிருப்பின் அது நீங்கள் தேவனால் பிறந்த பிறப்பின் காரியத்தை குறித்து கேள்வி எழுப்ப வகை செய்யும். அது தேவனுடைய வசனத்துக்கு பொருந்தாத ஒரு செயலாகும். தேவனுடைய சாயலை தனது முகத்தில் தாங்கிய ஒரு தேவ பிள்ளையை நீ காண்பாயானால் அந்த சகோதரனை முழுமையான தேவ அன்போடு நேசி, அதிகமாக நேசி. இந்த மனிதனும் நானும் ஒன்றாக எங்கள் பரலோக தந்தையின் வீட்டில் ஒரு நாள் ஒன்றாக கூடுவோம் என்று உனக்குள்ளாக நீ சொல்லிக்கொள். ஒருவருக்கொருவர் பணிவிடை செய்யுங்கள். ஒருவருக்கொருவர் நன்மை செய்யுங்கள். உன் சகோதரரில் ஒருவன் உனக்கு தீங்கு செய்தால் அதை அன்பாக மன்னித்து இன்னும் அதிகமாக அவனை நேசிக்கத்தக்க நல்ல அன்பின் இருதயத்தை கர்த்தர் உனக்குத் தரும்படியாக ஜெபம் செய்.

கடைசியாக, நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தால் உங்கள் மனதின் அரையைக் கட்டிக் கொண்டு கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். பரிசுத்தமுள்ள தேவன் உங்கள் தகப்பன் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொண்டு தேவனுடைய பிள்ளைகளைப் போல வாழ்ந்து அவருடைய வருகையின் நாளிலே

சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதை யாயிருங்கள்.

ஜெபத்தை குறித்து ஜாண் பன்னியன் கூறியது

ஜெபம் பண்ண ஆரம்பிப்பதற்கு முன்பாக நீ உனது ஆத்துமாவிடம் இவ்விதமாக கேள்விகள் எழுப்ப வேண்டும். "ஓ என் ஆத்துமாவே, நீ என்ன நோக்கத்தோடு இந்த இடத்துக்கு வந்தாய்? ஜெபத்திலே உன் ஆண்டவரோடு உறவாட வந்தாயா? உன் ஆண்டவர் உனது ஜெபத்தை கேட்க பிரசன்னராகி வந்திருக்கின்றாரா? அவர் உனது ஜெபத்தை கேட்பாரா? அவர் உனக்கு இரங்கி உதவி செய்வாரா? நீ ஜெபத்திற்காக வந்த காரியம் உனது ஆத்துமத்தின் நித்திய நன்மைக்கான காரியத்துக்காகவா? அல்லது முக்கியத்துவம் இல்லாத மேலெழுந்த வாரியமான உலகப் பிரகாரமான காரியத்துக்காகவா? உனது ஜெபத்தில் எந்தெந்த வார்த்தைகளை கூறி உனது ஆண்டவரை உன் மேல மனதுருகப் பண்ணப் போகின்றாய்?"

ஜெபத்திற்கான உனது ஆயத்தங்கள் முழுமையடையவும், பூரணப்படவும் வேண்டுமானால் நீ உன்னை தூசியும், சாம்பலுமாக எண்ணிக்கொள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாகிய நமது ஆண்டவர் மகா பெரியவரும், ஒளியை வஸ்திரமாக தரித்திருப்பவர் என்பதை நீ கண்டுகொள்ளல் வேண்டும். பரிசுத்தமுள்ள கர்த்தருக்கு முன்பாக நீ ஒரு நீசப்பாவி என்பதை உணர வேண்டும். சர்வ வல்லமையுள்ள தேவாதி தேவனுடைய சமூகத்தில் நீ ஊர்ந்து செல்லுகின்ற ஒரு அவலட்சணமான புழு மாத்திரமே என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளல் மிகவும் அவசியமாகும்.

உனது ஜெபங்களில் எல்லாம் கர்த்தர் உனக்கு உனது வாழ்வில் பாராட்டின தயவுகள், இரக்கங்களுக்காக அவருக்கு நன்றி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்க மறந்துவிடக்கூடாது.

நீ ஜெபிக்கும்போது உனது இருதயமானது தேவனுக்கு ஏறெடுக்க நன்றிப் பெருக்கோடு கூடிய புகழ் வார்த்தைகள் இல்லாதிருந்தாலும் அதைப்பற்றிப் பரவாயில்லை. ஆனால் நீ தேவனுக்கு ஏறெடுக்கும் மன்றாட்டு வார்த்தைகளில் உனது முழுமையான இருதயக் கவனம் இல்லாமல் போய்விட அனுமதித்துவிடாதே.

ஜெபம் ஒரு மனிதனை பாவம் செய்வதிலிருந்து தடுத்து நிறுத்தும். அல்லது பாவமானது ஒரு மனிதனை ஜெபிக்க விடாதவாறு தடையங்காட்டி ஜெபத்தை தடைசெய்யும்.

ஒரு மனிதனுக்குள்ள ஜெப வாஞ்சையின் ஆவியானது அநேக ஆயிரம் பொன் வெள்ளியைக் காட்டிலும் மேலான பொக்கிஷமாகும்.

லோக மாந்தரே, அடிக்கடி ஜெபம் பண்ணுங்கள். ஏனெனில், அது ஒன்றே நமது ஆத்துமாவை வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளின் தாக்குதலினின்று நம்மை பாதுகாக்கும் கேடயமாகும். ஜெபமானது நாம் தேவனுக்கு செலுத்தும் ஜீவபலியாகவும், சாத்தானை அடித்து விரட்டி ஓட்டும் கண் எரிச்சலின் தீப்புகையாகவும் உள்ளது.

பரலோக பேரின்பங்கள் குறித்து ஜான் பன்னியன் கூறியவை

இந்த ஜீவனில் எந்த ஒரு நன்மையுமே இல்லை. இந்த உலகத்தில் நாம் இன்பம் என்று சுவைத்து அனுபவிப்பது எல்லாம் துன்பம் சேர்ந்தவையாகும். தீங்கில்லாத உலக இன்பம் கிடையவே கிடையாது. உலக மேன்மைகளும், பெயர், புகழ், பட்டம், பதவி அனைத்தும் நிலையாமை உள்ளவைகளும் குழப்பங்களை உண்டுபண்ணக் கூடியவைகளாகும். உலகின் ஐசுவரியம் தனக்கு இறக்கைகளை உண்டுபண்ணிக் கொண்டு ஆகாய மார்க்கமாக பறந்து போய்விடும். உலகம் அளிக்கும் சரீர இன்பங்கள் மானிட தேகத்துக்கு நோய் நொடிகளை கொண்டு வரக்கூடியவைகள்.

ஆனால், மோட்ச இன்ப நாட்டில் நாம் காணக்கூடிய ஆசீர்வாதங்கள் அத்தனையும் மாசற்றதும், பூரண பொலிவும், சம்பூரணமும் உடையவைகளாகும். அந்த பரலோக இன்பங்களில் கலந்திருக்கும் பொருட்கள் அவைகளை மென்மேலும் இனிமைதான் ஆக்குமே தவிர அவைகளை சற்றுகூட கசப்பாக்க இயலாது.

ஆ, மனுஷருடைய இருதயத்தால் கற்பனைகூட பண்ணிப் பார்க்க இயலாத அந்த பரலோக பேரின்பங்களை யாரால் ஆராய

இயலும்! (1 கொரி 2 : 9) அவைகளை தங்கள் மட்டாக ருசித்து அனுபவித்தவர்களுக்கேயல்லாமல் வேறு ஒருவருக்கும் மோட்சத்தின் முன்ருசி தெரியாது. தேவனே, இந்த மாய உலகத்தின் மோசம் போக்கும் வஞ்சக கானல் நீர் இன்பங்களுக்கு நாங்கள் பெரும் மதிப்பு கொடுத்து வாடாததும், மாசற்றதும் என்றும் அதின் பூரண அழகிலே நிலைத்து நிற்கக்கூடிய நித்தியானந்த மோட்ச பாக்கியங்களை நாங்கள் கை நழுவ விட்டுவிடாதபடி எங்களை காத்துக் கொள்ளும்.

ஆட்டுக் குட்டியின் மணவாட்டியாகிய பரிசுத்த திருச்சபை தனது மணவாளனாம் கிறிஸ்துவோடு நித்திய நித்திய காலமாக மோட்சலோகில் வாழ்வதற்காக வரும்போது பரலோகம் எப்படியாக ஆனந்தித்து ஆரவார முழக்கமிட்டு களிகூரும்!

இயேசு இரட்சகர் ஒருவரே நாடுகளின் வாஞ்சையும், தேவதூதர்களின் களிகூருதலும், பரம பிதாவின் மனமகிழ்ச்சி யாயிருக்கும்போது அவரை தனது ஆத்மநேசராக என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களுக்கும் தனது இருதயத்தில் பெற்றுக்கொண்ட மாந்தனின் மனமகிழ்வுக்கு எல்லை எங்கே! சாத்தானாம் பிசாசு, அந்தி கிறிஸ்து, காயீனின் சந்ததி போன்றவையால் வரக்கூடிய எல்லா பயங்களுக்கும் என்றுமாக நீங்கிய அனைத்து தேவனுடைய பிள்ளைகளும் பரலோகத்தில் ஒன்று சேரும் காலம் எத்தனை குதூகலமான ஆனந்த நாள்!

நீதிமான்கள் துன்மார்க்கரைப் பார்த்து "பூமியில் உங்கள் இன்பங்களால் நீங்கள் அடைந்த லாபம் என்ன?" என்றும் "உங்களுடைய எல்லா மேன்மைகளாலும் நீங்கள் பெற்ற ஆறுதல் யாது?" என்றும் "பூலோகத்தில் நீங்கள் மேற்கொண்ட உங்கள் பிரயாசங்கள் யாவற்றாலும் உங்களுக்கு கிடைத்த பலன் என்ன?" என்றும் கேட்கும் காலம் வராமல் போய்விடும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?

வாசிக்கும் ஆத்துமாவே, இவைகளை எல்லாம் உனது சொந்த கண்களால் நீ காண வேண்டுமானால் மிகுந்த பரிசுத்தமாக ஜீவிக்க வேண்டும்.

தேவ மக்களின் விருத்தாப்பியம் வேடிக்கை காட்டும் கோமாளிப் பருவம் அல்ல

"தி இந்து" என்ற ஆங்கில தினசரி செய்தி தாளின் சனிக்கிழமை தோறும் வெளியாகும் "குழந்தைகள் உலகம்" என்ற பதிப்பில் ஒரு தடவை ஒரு கதையை வெளியிட்டிருந்தார்கள். அந்த கதை இதுவேதான்:-


கடவுள் கழுதையை படைத்து அதினிடம் "இதோ பார், நீ அதிகாலை முதல் சூரியன் அஸ்தமித்து பொழுது சாயும் நேரம் வரை கடினமான பாரச்சுமைகளை உனது முதுகிலே சுமக்க வேண்டும். நீ புல்லை ஆகாரமாக உட்கொள்ளுதல் வேண்டும். உனக்கு புத்தி கிடையாது. நீ பூமியில் 50 வருட காலம் உயிர்வாழ்வாய். உனது பெயர் "கழுதை" என்பதாகும். என்று கடவுள் கூறினார்.

கடவுளுடைய வார்த்தைகளுக்கு கழுதை பதில் கொடுத்தது. "கடவுளே, உங்கள் விருப்பப்படி நான் கழுதையாகவே இருந்து கொள்ளுகின்றேன். ஆனால், நீங்கள் எனக்கு கொடுத்த 50 ஆண்டு வாழ்நாட்காலம் என்னால் தாங்கிக்கொள்ள இயலாததான ஒரு காரியமாகும். எனக்கு 20 வருட ஆயுள் காலம் போதுமானதாகும்" என்று கூறவே கடவுள் கழுதைக்கு 20 வருட உயிர் வாழ்க்கையைக் கொடுத்து அதை அனுப்பி வைத்தார்.

அடுத்தபடியாக கடவுள் நாயைப் படைத்தார். நாயைப் படைத்து அதினிடம் "நீ மனிதர்களின் வீட்டை காவல் காக்க வேண்டும். அத்துடன் நீ அவர்களுடைய நல்ல நண்பனாக விளங்குவாய். அவர்கள் உனக்கு எதைக் கொடுப்பார்களோ அதை நீ சாப்பிட்டுக் கொள்ளவேண்டும். உனது வாழ்நாட் காலம் 25 ஆண்டுகளாகும். நீ "நாய்" என்று அழைக்கப்படுவாய் " என்றார்.

நாய் கடவுளைப் பார்த்து "கடவுளே, 25 ஆண்டுகள் இந்த உலகில் உயிர் வாழ்வது எனக்கு விருப்பமானதாக தெரியவில்லை. 10 வருட உயிர்வாழ்க்கையை நீர் எனக்கு கொடுத்தால் அதுவே எனக்கு போதுமானது." என்று கூறிற்று. அதின் மனவிருப்பப்படி கடவுள், நாய்க்கு 10 ஆண்டு கால ஆயுளை கொடுத்தார்.

பின்னர், கடவுள், குரங்கை உண்டாக்கி அதனைப் பார்த்து "நீ மரத்துக்கு மரம் தாவி குதித்துக் கொண்டு புத்தி கெட்ட காரியத்தை செய்வாய். நீ மற்றவர்களை சிரிப்புண்டாக்கும் கோமாளியாக இருப்பாய். நீ 20 வருட காலம் உலகில் உயிரோடிருப்பாய். உனது பெயர் குரங்காகும்" என்று சொன்னார்.



குரங்கு தன்னைப் படைத்த கடவுளுக்கு பிரதியுத்தரமாக "கடவுளே, 20 வருட கால எனது பூலோக வாழ்வு என்னால் தாங்க முடியாத பாரமாகும். 10 வருட ஆயுளே எனக்கு திருப்தியானது" என்று சொல்ல கடவுள் அதற்கு பத்து வருட ஆயுளைக் கொடுத்தார்.

இறுதியாக, கடவுள் மனிதனைப்படைத்து அவனை நோக்கி "நீ மனிதனாக இருப்பாய், இந்த முழு உலகத்திலும் நீ மட்டும்தான் பகுத்தறிவுள்ளவன். உனது புத்தியை பயன்படுத்தி மற்ற விலங்கினங்களை நீ அடக்கி ஆட்சி செய்வாய். இந்த முழு உலகத்தையும் உனது கரத்தின் கீழ் கொண்டு வந்து அதை செங்கோலோச்சுவாய். இந்த பூவுலகத்தின் முழு ஆளுகையும் உன்னுடையதாகும். நீ இந்த உலகத்தில் 20 வருட காலம் உயிர் வாழ்வாய்" என்று கூறினார்.

மனிதன் துக்கமடைந்து கடவுளிடம் பேசினான். "கடவுளே, நான் ஒரு மனிதன். ஆனால், நான் மனிதனாக உயிர் வாழ்வதற்கு நீர் கொடுத்த வாழ்நாட்காலமான 20 வருடங்கள் எனக்கு கொஞ்சம் கூட போதுமானதல்ல. நீர் ஒன்று செய்தால் என்ன? கழுதை தனக்கு

வேண்டாமென்று விலக்கிய 30 வருடங்களையும், நாய் தனக்கு தேவையற்றது என்று தள்ளிய 15 ஆண்டுகளையும், குரங்கு தன்னால் தாங்க முடியாத பாரச்சுமை என்று கூறி மறுத்த 10 ஆண்டு காலத்தையும் எனக்கே கொடுத்தால் எனக்கு நன்றாய் இருக்கும்" என்று கேட்டான்.

மனிதனுடைய மன விருப்பப்படி கடவுள் அவனுக்கு கழுதை, நாய், குரங்கு போன்ற மூன்று விலங்கினங்களும் தங்களுக்கு வேண்டாமென்று விலக்கிய வருடங்களை கொடுத்துவிட்டார். அதின் காரணமாகத்தான் மனிதன் 20 வருடங்கள் ஒரு மனிதனைப் போல சந்தோஷமாக வாழ்கின்றான். அதின் பின்னர் கலியாணம் செய்து குடும்பஸ்தனாகி பிள்ளைகளைப் பெற்று அவர்களை வளர்த்து ஆளாக்குவதற்கு கழுதையிலும் கேடான கழுதையாக 30 வருட காலம் குடும்ப பாரம் சுமந்து தவிக்கின்றான். பெற்ற பிள்ளைகள் பெரியவர்களாகி அவர்களும் குடும்பஸ்தர்களாக ஆன பின்னர் எல்லாரும் வீட்டைவிட்டு சென்றுவிடுகின்றனர். இப்பொழுது பிள்ளைகள் விட்டுச் சென்ற வீட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு அவன் தலையின் மேல் விழுகின்றது. எனவே, நாயைப் போல 15 ஆண்டு காலம் வீட்டை காவல் காத்துக் கொண்டு கிடக்கின்றான். உடலிலே பெலன் இல்லை. தன்னால் எதுவும் செய்ய இயலாது என்பதை மனிதன் இப்பொழுது உணருகின்றான். பெற்ற பிள்ளைகளுடைய ஆதரவை நாடி கொஞ்ச நாட்கள் மூத்த மகன் வீட்டிலும், கொஞ்ச நாட்கள் இரண்டாவது குமாரத்தியுடைய வீட்டிலும், இன்னும் கொஞ்சம் நாட்கள் கடைசி புத்திரன் வீட்டிலும், அடுத்த கொஞ்ச நாட்கள் அப்படியே நெருங்கின இனஜன பெந்துக்கள் வீட்டில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்கி, தங்கி கடத்தி எப்படி குரங்கானது மரத்துக்கு மரம் தாவுமோ அதேவண்ணமாக வீட்டுக்கு வீடு தாவி குதித்து அந்த வீடுகளிலுள்ள பேரக்குழந்தைகளை தனது கம்பு ஊன்றிய நடையாலும், பொக்கை வாய் பேச்சாலும் சிரிக்க வைத்து அவர்களுக்கு முன்பாக அவன் வேடிக்கை காட்டும் விகட கவியும், கோமாளியுமாகி இறுதியில் நிர்ப்பந்தனாக மரிக்கின்றான்.

மேற்கண்ட கதையை நான் வாசித்த உடன் அதைக்குறித்து ஆண்டவர் உங்களுக்கு ஒரு செய்தியை தர ஆயத்தமானதால் நான் அந்த பேப்பர் பகுதியை சுத்தரித்து பத்திரமாக வைத்துக் கொண்டேன்.

ஒரு மனிதனுடைய பூவுலக வாழ்க்கையை ஒரு கோமாளியின் வேடிக்கை செயல்களுக்கு ஒப்பிட்டு மேற்கண்ட கதையை, அதை எழுதியவர் முடிக்கின்றார். அநேக மாந்தரின் வாழ்க்கை நாம் வாசித்த கதையின்படி விகடமாகவும், நகைச்சுவையாகவும்தான் முடிவு பெறுகின்றது. ஆனால் இது எல்லாருக்கும் பொருந்தாது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட பரிசுத்த தேவ மக்களின் விருத்தாப்பியமும், அந்திய காலமும் முற்றும் வித்தியாசமான ஒன்றாகும்.

முதிர் வயதிலும் கனி தரும் பரிசுத்த தேவ மக்கள்.

"அவர்கள் முதிர் வயதிலும் கனி தந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்" (சங் 92 : 15) என்று தேவனுடைய வார்த்தை தேவ மக்களின் விருத்தாப்பியத்தை அழகாக சிலாகித்துப் பேசுகின்றது. மெய்யான வயது சென்ற கர்த்தருடைய பிள்ளைகள் உலக மக்களைப் போல அங்குமிங்கும் ஓடி ஒரு வாய் சோற்றுக்காக அலைந்து திரியமாட்டார்கள். கூடாரவாசியும், குணசாலியுமான யாக்கோபைப் போல அவர்கள் வீட்டிலே தரித்திருப்பார்கள். பரிசுத்த பக்தர்களின் வாழ்க்கை சரித்திரங்களை எடுத்து வாசித்து பாருங்கள். அவர்களது இறுதி நாட்கள் மிகுந்த தேவ சமாதானம் நிறைந்தவைகளாக இருந்ததை நீங்கள் காணலாம். தங்கள் பரலோக வாழ்வை எதிர்நோக்கி தங்கள் மரண ட்டிலில் படுத்திருந்த அந்த பரிசுத்தர்களின் சமாதான நிலையையும் ரகாசமான முகச்சாயலையும் காண்பதற்காக ஊரிலுள்ள மக்கள் வந்த ரலாற்றை நாம் வாசிக்கின்றோம்.

பரிசுத்த தேவ மக்களின் விருத்தாப்பிய காலம் மகா ஆனந்த காலமாகும். பரம கானானின் கரைக்கு நெருங்கி வந்திருக்கும் அவர்கள் பரலோகில் இசைக்கப்படும் சீயோன் பட்டணத்து இன்னிசை கீதங்களை தினமும் கேட்டவண்ணமாக இருக்கின்றனர். அந்த விருத்தாப்பிய கால நாட்களில் மக்கள் தங்கள் குடும்பங்களுடன் அந்த தேவ பிள்ளையிடம் வந்து ஆசீர்வாதம் பெற்றுச் செல்லுகின்றனர். தங்கள் குடும்பத்தின் எல்லாரின் சிரசின் மீதும் அந்த பரிசுத்த பிள்ளையின் கரம் அமர அவர்கள் துடிதுடிக்கின்றனர். அநேகர் தங்களுக்குத் தேவையான தேவ

ஆலோசனைகளைப் பெற வருகின்றனர். வியாதிகளுக்காக ஜெபிக்க அவரிடம் வருகின்றனர்.

விருத்தாப்பியமான அந்த பரிசுத்த மனிதர் தன் ஆண்டவர் இயேசுவை இரவும் பகலும் பாடித்துதித்து தனது நேரங்களை எல்லாம் ஜெபத்திலே நெடு முழங்கால்களில் செலவிட்டு பரம விண் வீட்டுக்கு ஆயத்தமாகிக் கொண்டே இருக்கின்றார். உலகத்து விருத்தாப்பி யர்களைப் போல மற்ற கிழவர்களுடன் சேர்ந்து ரயில் நிலையத்திலும், பேருந்து நிலையத்திலும், நகரத்தின் மத்தியிலுள்ள பூங்காவிலும் அமர்ந்து கடந்து சென்ற வாழ்நாட்காலத்தில் தங்கள் வாழ்க்கைகளில் நடந்த நிகழ்ச்சிகளைப் பேசியும், நாற்றமெடுக்கும் சாக்கடை அரசியல் செய்திகளை குறித்து தீவிரமாக சம்பாஷித்தும் தங்களது விலையேறப்பெற்ற நேரத்தை பாழாக்குவதை அந்த பரிசுத்த விருத்தாப்பியர் தனது கற்பனையில் கூட நினைத்துப்பார்க்க மாட்டார். உண்மைதான், அவர் தனது பேரக்குழந்தைகளை நேசிக்கின்றார். அவர்களை வாரி அணைத்து முத்தமிடுகின்றார். அவர்களை ஆசீர்வதிக்கின்றார். ஆனால், அவர்களுக்கு வேடிக்கை காட்டி கோமாளித்தனமான செயல்களை செய்து தனது பொன் போன்ற காலத்தை அவர் வீணடிப்பதில்லை. அவர்களுக்கு வேடிக்கை காட்டும் நேரத்தை அவர்களுடைய ஆத்தும இரட்சிப்புக்காக தேவ சமூகத்தில் ஜெபத்திற்காக செலவிடுகின்றார். அவருடைய பேரக்குழந்தைகள் அவரை ஒரு கோமாளி தாத்தாவாக அல்ல, பயபக்திக்குரிய ஒரு தேவ ஊதனைப்போல அடையாளம் காண்கின்றனர். அவர் தனது அறையில் நெடு முழங்காலில் நின்று ஜெபிக்கும் காட்சியை அந்த குழந்தைகள் காணும்போது தங்கள் தாத்தாவுடன் பயபக்தியாக பழக கற்றுக்கொள்ளுவதுடன் அவரைப் போல பக்தி வாழ்க்கை வாழ சிறு பிராயத்திலேயே அவர்கள் ஆவல் கொள்ளுகின்றனர்.

ஆண்டவரை தனது சொந்த இரட்சகராக ஏற்று அவரது அன்பில் ஆனந்தித்த வாலிபன் ஒருவன் தேவனுடைய வார்த்தையின்படி மூழ்கி ஸ்நானம் பெற்றுக் கொள்ள ஆசைப்பட்டான். அந்த ஸ்நானத்தை ஒரு பரிசுத்தவானுடைய கரத்தில் தான் கட்டாயம் பெற்றுக் கொள்ள வாஞ்சித்த அவன் எந்த பரிசுத்தவானிடம் அதைப் பெறலாம் என்று தனக்குள் யோசித்து இறுதியாக அவனது உள்ளத்துக்கு பிடித்தமான ஒரு விருத்தாப்பிய பரிசுத்த மனிதனை தேடி 500 மைல்களுக்கும் கூடுதலாக பிரயாணம் செய்து அந்த பரிசுத்த மனிதரின் வீடு வந்து சேர்ந்தான்.

நெல்லை மாவட்டத்தின் தென் பகுதியில் இருந்த ஓர் வறட்சியான ஓர் செம்மண் தேரி கிராமம் அது. போதுமான மழையில்லாத காரணத்தால் கிராமத்திலுள்ள குளங்கள், கிணறுகள் எல்லாம் தண்ணீரின்றி காய்ந்து கிடந்தன.

முழுக்கு ஞானஸ்நானம் பெற தான் வந்திருப்பதை அந்த பரிசுத்த தேவ மனிதனுக்கு வாலிபன் கூறினதும் அந்த மனிதர் அந்த வாலிபனைப் பார்த்து "மகனே, நான் உனக்கு ஞானஸ்நானம் கொடுக்க ஆயத்தமாக இருக்கின்றேன். ஆனால், நீ மூழ்கி எழும்ப வசதியாக குளங்கள், கிணறுகளில் தண்ணீர் இல்லையே!" என்று துக்கத்துடன் கூறினார். வாலிபன் சற்று நேரம் யாது செய்வதென்று அறியாது திகைத்து நின்றான். மழைகள் பெய்து குளங்கள், கிணறுகள் தண்ணீரால் நிரம்ப காத்திருந்தால் அதற்குள்ளாக அந்த பரிசுத்த விருத்தாப்பிய தேவ மனிதனை கர்த்தர் தமது ராஜ்யத்துக்கு அழைத்துக் கொண்டால் என்ன செய்வதென்று யோசித்து பார்த்துவிட்டு இவ்வாறு கூறினான். "ஐயா, நம் வீட்டிலுள்ள ஒன்று அல்லது இரண்டு பானை தண்ணீரை எடுத்து வந்து அதை எனது தலையில் ஊற்றி என்னை உங்கள் கரத்தால் ஆசீர்வதித்து விடுங்கள். அதுவே எனக்கு போதுமானது. அந்த ஞானஸ்நானம் எனக்கு பூரண திருப்தியை அளிக்கும்" என்று கூறவே, அந்த தேவ மனிதரும் அவ்வாறே செய்து அந்த வாலிபனுக்காக ஜெபித்து அவன் நெற்றியில் சிலுவை அடையாளத்தை வரைந்து அவனை ஆசீர்வதித்து அனுப்பினார். வாலிபனுடைய சந்தோஷத்துக்கு அளவில்லை. வெகு விரைவிலேயே அந்த விருத்தாப்பிய மனிதரை தேவன் தமது நித்திய இளைப்பாறுதலுக்கு அழைத்துக் கொண்டார். அவரது மரணத்துக்குப் பின்னர் அந்த வாலிபன் அவரது வீட்டை தேடி சென்றான். பரிசுத்தவானின் மனைவி மாத்திரம் வீட்டில் தனிமையாக இருந்தார்கள். அந்த வீட்டில் அவன் அந்த பரிசுத்த தாயாருடன் அன்று இராத்தங்கினான். இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பெற்று கர்த்தரில் மனமகிழ்ந்து கொண்டிருந்த அந்த வாலிபன் அந்த நாளின் இரவில் வீட்டுக்கு வெளியே செம்மணலில் முழங்காலூன்றி கர்த்தரை நோக்கி ஜெபித்துக் கொண்டிருந்தான். இருட்டு அதிகமாக இருந்ததால் தனக்கு அருகில் ஒரு டார்ச் விளக்கையும் அவன் வைத்துக் கொண்டான். கொஞ்ச காலத்திற்கு முன்னர் காலஞ்சென்ற பரிசுத்தவானால் அவன் ஞானஸ்நானம் பெற்ற இடத்துக்கு சமீபமாகத்தான் அந்த வாலிபன் முழங்கால் ஊன்றியிருந்தான்.

தனது ஜெபவேளையின் போது உஸ்.....உஸ்.....உஸ்..... என்ற சத்தத்தை அவன் தனக்கு அருகாமையில் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தான். அந்த சத்தம் அவனைச் சுற்றிலும் கேட்டுக்கொண்டே இருந்தது. அவன் அந்த சத்தத்தை சற்றும் சட்டை செய்யாதவனாக தனது ஜெபத்தை தொடர்ந்தான். ஒரு கட்டத்தில் அந்த சத்தம் தனக்கு வெகு அருகாமையில் பலமாக கேட்டதால் தனது டார்ச் விளக்கை எடுத்து சத்தம் வந்த திசையை நோக்கி போட்டுப் பார்த்தான். அவன் கண்ட காட்சி அவனை அதிர்ச்சியடைய செய்தது. ஒரு பெரிய நல்ல பாம்பு படம் எடுத்து அவனை கொத்துவதற்கு தயாராகி நிற்பதைக் கண்டான். அவனை சுற்றி, சுற்றி வந்து படம் எடுத்து ஆடிய நிலையில் அவனை கொத்த அது பல தடவைகள் முயற்சித்தும் சிங்கங்களின் வாயை தானியேலுக்காக கட்டிய ஜீவனுள்ள தேவன் நாகப்பாம்பின் வாயையும் கட்டி போட்டிருந்தார். கர்த்தருக்கு துதி செலுத்தியவாறே அந்த பக்தியுள்ள வாலிபன் அவ்விடத்திலிருந்து ஜெபத்தோடு எழுந்து வீட்டிற்குள் சென்றுவிட்டான்.

ஒரு விருத்தாப்பியனான கர்த்தருடைய பரிசுத்த பிள்ளையின் பக்தி வலிமை எத்தகையது என்பதை நீங்கள் மேற்கண்ட நிகழ்ச்சியின் மூலமாக அறிந்தீர்கள்! காலஞ்சென்ற அந்த பரிசுத்த விருத்தாப்பியன் பாதங்கள் பட்ட இடம் எதிலும் எந்த ஒரு நாசமோசமும் நிகழாது. அது ஒரு பரிசுத்த பூமி.

மனந்திரும்பாத ஒரு உலக விருத்தாப்பியனுக்கும், ஆண்டவரை தனது ஆன்ம நாயகனாக ஏற்று அவரது பரலோக நேசத்தால் ஆனந்தித்து வாழும் ஒரு மெய் கிறிஸ்தவ விருத்தாப்பியனுக்கும் உள்ள வித்தியாசமானது மலைக்கும் மடுவுக்குமுள்ள இடைவெளியாகும். ஒரு உலக விருத்தாப்பியன் ஆரம்பத்தில் நாம் கண்ட கதையில் கூறப்பட்ட வண்ணம் அவன் குரங்கைப் போன்று வேடிக்கை காட்டும் கோமாளிதான். தனது பேரப்பிள்ளைகளுக்கு மாத்திரம் அல்ல, உலக மக்களுக்கு முன்பாகவும் அவன் வேடிக்கை காட்டுவான். தனது வாழ்நாட் காலத்தை உலகத்துக்கென்று செலவிட்டு மனந்திரும்பாமல் வாழ்ந்த அவனது பாவச்செயல்களும், தனது மனச்சாட்சிக்கு கீழ்ப்படியாமல் பாவ அக்கிரமங்களில் உழன்ற அவனது கொடிய தீச்செயல்களும் சதா அவனது கண்களுக்கு முன்பாக நிழலாக நிற்பதால் (சங் 51 : 3) அவனது இருதயம் சமுத்திரத்தைப் போல எப்பொழுதும் கொந்தளித்துப் பொங்கி

சேற்றையும், அழுக்கையும் கரையிலே ஒதுக்கிக் கொண்டே இருக்கும். துன்மார்க்கனாகிய அவனுக்கு சமாதானம் இல்லை என்று தேவன் சொல்லுவதால் (ஏசாயா 57 : 20,21) அவன் தனக்குள்ளேயே திடீரென்று பேசிக்கொண்டு சிரிப்பான். யாருடனோ நேருக்கு நேர் வாக்குவாதம் செய்வது போல சத்தமிட்டு பேசிக்கொண்டு போவான். அவனது கைகளால் சைகை காட்டுவான். தன்னைச் சுற்றி இருக்கும் மக்களை அவன் கண்டுகொள்ளவே மாட்டான். தன்னைக் காணும் மக்கள் அவனது கண்களுக்கு மரங்களைப் போல தெரிவதால் (மாற் 8 : 24) அவன் இன்னும் சத்தமாக தனக்குள் பேசி சிரித்துக் கொண்டு இரண்டு கரங்களாலும் சைகை காட்டி செல்லுவான். அவனைக் காண்போர் அவனை ஒரு முதல்தரமான கோமாளி என்று எண்ணி ஏளனம் பேசி சிரிப்பார்கள்.

இதை கருத்தோடு வாசிக்கும் தேவ பிள்ளையே, இந்த செய்தியில் உள்ள படத்தை கவனித்துப் பார். மனிதன், அவனுக்கு அருகில் பாரச்சுமையோடு நிற்கும் ஒரு கழுதை, அவர்கள் இருவருக்கும் அருகில் நிற்கும் நாய், இவர்கள் மூவருக்கும் மேலாக மரக்கிளையில் தனது வாலைச் சுற்றிக் கொண்டு தலைகீழாக தொங்கி வேடிக்கை காட்டும் குரங்கின் காட்சியை உற்று கவனி. உனது மானிட வாழ்வின் இறுதிப் பருவம் தலைகீழாக தொங்கி உலக மாந்தருக்கு வேடிக்கை காட்டும் கோமாளி பருவம் ஆகிவிடாதபடி இந்தக் கிருபையின் காலத்திலேயே உனது ஆண்டவரை அண்டிக்கொள். வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டின் புத்தகத்தில் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல் திரும்பத் திரும்ப வேசிகளின் (பாவங்களின்) மடியை நாடி ஓடி அவைகளிலே ஆனந்த நித்திரை செய்து அந்த வேசிகள் தந்த இன்பசுகங்களில் மதி மயங்கிய ஒரு தேவ மனிதன் தனது அந்திய காலத்தில் வேடிக்கை காட்டிய ஒரு கோமாளியாகி நிர்ப்பந்தனாக மடிந்ததை சிம்சோன் சரித்திரத்திலே நாம் பார்க்கின்றோம் அல்லவா! அந்தப்படியே உனது அருமையான வாழ்நாட் காலமும் வேடிக்கை காட்டும் கோமாளி நிலையுடன் நிர்ப்பந்தமாக முற்றுப் பெற்று நரக பாதாள அக்கினிக்கடலுடன் சங்கமம் ஆகிவிடாதபடி பாவத்தில் இருந்து மனந்திரும்பி இரட்சகர் இயேசுவின் பொற் பாதங்களைப் பற்றிக்கொள். "இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள்" (2 கொரி 6 : 2)



மாந்தரை தூக்கி சுமக்கும் சிலுவை

இமயமலைகளிலுள்ள பித்தோராகார் பட்டணத்திலிருந்து 7 கி.மீ தொலைவில் கடல் மட்டத்திலிருந்து சுமார் 6600 அடி உயரத்தில் சண்டாக் என்ற ஒரு கிராமம் உள்ளது. பட்டணத்திலிருந்து சுமார் 1200 அடிகள் உயரத்தில் சண்டாக் கிராமம் இருப்பதால் அங்கிருந்து பார்த்தால் பித்தோராகார் பட்டணம் முழுமையையும் தெளிவாக நாம் காணலாம். சண்டாக்கில் உள்ள கிறிஸ்தவ குஷ்டரோக மருத்துவமனை அமைந்துள்ள மலைப்பகுதியில் ஒரு பெரிய சிலுவையை நிறுத்தி யிருக்கின்றார்கள். பித்தோராகார் பட்டணவாசிகள் அனைவரும் அந்த சிலுவையை தெளிவாக காணலாம். காங்கரீட்டால் அந்த சிலுவையை செய்து குன்று ஒன்றின் உச்சியில் அதை நிறுத்தியிருக்கின்றனர்.

1997, 1998 ஆகிய இரண்டு வருடங்களும் நாங்கள் அந்த சிலுவையின் அடிவாரம் சென்று அங்கிருந்து பித்தோராகார்



பட்டணத்தையும், அப்பால் தெரிகின்ற பனி மலைகள், மற்றும் அநேக சின்னஞ்சிறு மலைக்கிராமங்களையும் கண்குளிர கண்டு களித்தோம். நாங்கள் 1998 ஆம் ஆண்டு அந்த சிலுவைக்கு சென்றபோது சிலுவையின் உச்சியில் ஒரு பெரிய குரங்கு மிகவும் சாவதானமாக உட்கார்ந்து இருப்பதை நாங்கள் கண்டோம். அந்த சிலுவையிலிருந்து நாங்கள் அந்த குரங்கை துரத்த எவ்வளவோ முயற்சித்தும் கூடாது போயிற்று. சிலுவைக்கு அருகில் கீழே கிடந்த கற்களை எடுத்து அதின் மீது

வீசினாலும் அது அதைவிட்டு ஓடுவதைப் போல தெரியவில்லை. அந்த சிலுவை மேட்டில் அப்பொழுது வீசிக்கொண்டிருந்த இதமான காற்றை அது ஆனந்தமாக அனுபவித்துக் கொண்டிருந்தது. அந்தக் காட்சியை நீங்களும் காண வேண்டும் என்பதற்காக நான் புகைப்படம் எடுத்து வந்தேன். அது இந்தச் செய்தியில் இடம் பெற்றுள்ளது.

அந்தக் காட்சியை கண்ட எனக்கு திடீரென ஒரு காரியம் மனதில் தென்பட்டது. "ஒருவன் என்னை பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்" (மத் 16 : 24) என்று தேவனுடைய வார்த்தை கூறுகின்றது. ஆனால், லோக மாந்தர் சிலுவையை சுமப்பதற்கு பதிலாக சிலுவை மீது ஆனந்த சவாரி போட்டுக் கொண்டு செல்லுகின்ற ஒரு கூட்டம் மக்களை இந்த கடைசி காலத்தில் நாம் காணலாம். எப்படி மேலே கண்ட குரங்குக்கு காங்க்ரீட் சிலுவை ஆனந்தமான இடமாக இருந்ததோ, அதைப்போன்று சிலுவையை தங்களது சொகுசான இடமாகக் கண்டு அதின் மீது மக்கள் சந்தோச சவாரி செய்து கொண்டிருக்கின்றனர்.

தங்களுடைய அழகிய தாய் நாடுகளையும், தாய் தந்தையர், உடன்பிறப்புகள், உற்றார் உறவினரை உதறித்தள்ளி நம் இந்திய நாடு வந்து, தாங்க முடியாத வெப்பம் காரணமாக எத்தனையோ கடும் இன்னல்களை அனுபவித்து தங்கள் உயிரையே தியாக பலிபீடத்தில் சமர்ப்பணம் செய்து திருச்சபைகளையும், வானுற உயர்ந்து நிற்கும் அழகான தேவ ஆலயங்களையும், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் போன்றவற்றையும் கட்டி எழுப்பிய பரிசுத்த மிஷினரிகள் தங்கள் அன்பின் கர்த்தருக்கு உத்தமமான இருதயத்தோடு பாரச் சிலுவை சுமந்து ஆத்தும ஆதாயம் செய்த இடத்தில் இன்று வேற்று ஆட்கள் ஓய்யாரமாக அமர்ந்துள்ளனர்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளாத இந்த மக்களுக்கு எந்த ஒரு அர்ப்பணிப்பும் கிடையாது. சிலுவை சுமந்து கொண்டு எருசலேம் வீதி வழியாக சென்ற தேவ மைந்தனாம் இயேசுவுக்கும் இவர்களுக்கும் எந்த ஒரு தொடர்பும் கிடையாது. தேவ ஊழியத்துக்கென்று கர்த்தருடைய திட்டமான அழைப்பைப் பெறாமல் அரசாங்க உத்தியோகமும் வேறு எந்த ஒரு

வேலையும் கிடையாத காரணத்தால் குருவானவர் வேலையை நிர்ப்பந்தத்தின் பேரில் தங்கள் கரங்களில் எடுத்து சபைகளில் பணி புரிகின்றனர். தங்களுக்கு கை நிறைய நல்ல சம்பளம், மனைவிக்கு வீட்டை ஒட்டிய மிஷன் பள்ளியில் அரசாங்க சம்பளத்துடன் ஆசிரியை வேலை, குடியிருக்க இலவசமான மிஷன் வீட்டு வசதிகள், இன்னும் பல வசதிகளோடு ஆடம்பரமாக வாழ்கின்றனர்.

தேவனுடைய மந்தையைப்பற்றி இவர்களுக்கு ஆத்தும பாரமோ, அக்கறையோ கிடையாது. வார நாட்கள் முழுவதும் டி.வி. நிகழ்ச்சிகளை கண்டு களித்து ஆனந்தித்துவிட்டு எந்த ஒரு ஜெப ஆயத்தமுமில்லாமல் ஓய்வுநாளில் துணிச்சலோடு பிரசங்க மேடை ஏறி பிரசங்கிக்கின்றனர். வேத வசனத்துடன் ஆரம்பமான அவர்களின் பிரசங்கம், குருவானவரின் வீட்டுக் கதை, நாட்டுக் கதை எல்லாம் சேர்ந்து வேடிக்கை கதையாக எங்கேயோ ஒரு கோணத்தில் நிர்ப்பந்தமாக முடிவுபெறுகின்றது. 6 நாட்களும் குடும்ப பாரம், துன்ப துயர பிரச்சினைகள், பற்பலவிதமான பாடுகளோடு உழன்ற திருச்சபை மக்கள், கர்த்தர் தங்களுக்கு எந்த ஒரு ஆறுதலான செய்தியை தரப்போகின்றார் என்று மிகுந்த எதிர்பார்ப்போடு ஓய்வுநாளில் ஆலயத்துக்கு வரும் மக்கள், குருவானவரின் தாறுமாறான செய்தியால் மனமுடைந்து துக்கத்தோடு தங்கள் வீடு திரும்புகின்றனர்.

வாரத்து நாட்களில் ஐசுவரியவான்களுடைய வீடுகளைத் தவிர வேறு எந்த ஒரு வீட்டையும் குருவானவர் சந்தித்து ஜெபிப்பதில்லை. திருச்சபையின் மக்கள் தங்களுடைய வீடுகளுக்கு ஜெபிக்கும்படியாக அவரை அழைத்தால் "உங்கள் வீட்டில் பிறந்த நாள் விருந்து வையுங்கள். அதில் நான் வந்து கலந்து கொண்டு ஜெபிக்கின்றேன்" என்று கூறுகின்றனர். இந்த குருவானவர்களை நாம் குற்றம் சொல்ல என்ன இருக்கின்றது? மனந்திரும்பி, தேவனுடைய இரட்சிப்பின் நிச்சயத்தை பெறாத ஒரு குருவானவரும், எல்லா பாவங்களும் குடிகொண்டுள்ள ஒரு ஜென்ம சுபாவ பாவ மனிதனும் ஒன்றுதானே!

உலகத்தில் தேவனுடைய சிலுவையை சுமந்து அவருக்கு பரிசுத்தத்தோடும், நடுக்கத்தோடும் தேவ ஊழியம் செய்ய வேண்டிய இந்த குருவானவர்களை சிலுவை தனது தோள் மேல் வைத்து துயரத்தோடு சுமந்து செல்கின்றது. சிலுவை அவர்களை சுமந்து செல்லுவதால் அந்த

ஆனந்த களிப்பில் அவர்கள் மிதக்கின்றனர். சுகபோகமான, உடலை அதிகமாக அலட்டிக் கொள்ளாத நிம்மதியான வாழ்க்கை இந்த குருவானவர்களுக்கு இந்த உலகத்தில் உள்ளது. பெரிய நிலச் சுவான்தார்கள், ஜமீன்தார்கள் கூட தங்கள் பண்ணை நிலங்களுக்குச் சென்று தங்களுடைய வேலையாட்களுடன் சேர்ந்து வியர்வை சிந்த உழைக்கின்றனர்.

இந்த குருவானவர்கள் பூர்வீக தேவ பக்தன் எழுதிய "சீர்திருந்திய குருவானவர்" என்ற ஆங்கில புத்தகத்தை கட்டாயம் வாங்கி வாசிக்க வேண்டும். சொகுசும், கஷ்டமும் இல்லாத வாழ்வுக்காகவும், எளிதும், துரிதமுமான பண சம்பாத்தியத்துக்காகவும் தேவ ஊழியங்களை தங்கள் கரங்களில் எடுப்போருக்கு ஐயோ! என்று அவர் எழுதியுள்ளார். உடனடியாக அவர்களுக்கு அதின் எதிர்மறை விளைவுகள் தெரியாவிட்டாலும் காலப்போக்கில் அந்த மக்கள் தேவனுக்கு விரோதமான தங்களுடைய செயல்களுக்காக கடும் தண்டனை அனுபவிப்பார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

திருச்சபைகளில் பணி புரியும் மனந்திரும்பாத, இரட்சிப்பின் நிச்சயமில்லாத குருவானவர்களை மாத்திரம் நான் இங்கு குறிப்பிடவில்லை. தேவனுடைய மகா மேன்மையான பரிசுத்த ஊழியத்தை உலகப் பிரகாரமான ஒரு தொழிலாக எடுத்து எந்த ஒரு ஆத்தும பாரமும், மெய்யான தேவ அன்பும் இல்லாமல் தங்களுடைய சுய லாபத்துக்காக பக்தியுள்ளவர்கள் போல நடித்து ஊழியம் செய்கின்ற எல்லா ஊழியர்களையும் நான் இங்கு கோடிட்டு காட்டுகின்றேன்.

திருநெல்வேலி மாவட்ட எங்கள் கிராமத்திலே நான் சிறுவனாக இருந்தபோது எனது கிராமத்து சக நண்பர்களோடு சேர்ந்து கழுதை சவாரி செய்யப் போவதுண்டு. காட்டிலே மேய்ந்து கொண்டிருக்கும் சலவைத் தொழிலாளியின் கழுதைகளை அவருக்குத் தெரியாமல் தந்திரமாக பிடித்துக்கட்டி அதிலே சவாரி செய்வது எங்களுக்கு தனி மகிழ்ச்சியாகும். ஆனால், அந்த ஆனந்த சவாரியின் இறுதி முடிவு மிகவும் துயரமாக இருக்கும். சில ஆனந்தமான சவாரிகளை எங்களுக்குத் தந்த பின்னர் அந்த கழுதைகள் எங்களை ஏதாவது ஒரு வேலி முள்ளில் திடீரென தள்ளிவிடும். அல்லது எங்கள் கால்களை ஒரு பனைமரத்துடன் சேர்த்து வைத்து உராய்ந்து நசுக்கி இரத்தம் வடிய செய்து விடும்.

மற்கண்ட இரண்டு தண்டனைகளுக்கும் துஷ்ட சிறுவர்களான நாங்கள் நப்பி விட்டால் தனது பின்னங்கால்களால் நல்ல உதை கொடுத்துவிட்டு ஓடிவிடும். அதைப் போலவே தேவ ஊழியத்தை உலக ஆதாய சொகுசான தொழிலாக தங்கள் கரங்களில் எடுத்துள்ள மக்கள் நாங்கள் கழுதைகளில் ஆரம்பத்தில் அனுபவித்த சில ஆனந்த சவாரிகளை அனுபவித்தது போல அனுபவித்தாலும் அவர்களுடைய பிற்கால வாழ்க்கைகளில் தங்களுடைய இமாலய தவறுகளுக்கு பெருங்கிரயம் செலுத்தியாக வேண்டும். அது இரத்தக் கண்ணீரின் கிரயமாக அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஏனெனில் "தேவன் தம்மைப் பரியாசம் பண்ண வொட்டார், மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலா 6 : 7) "கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனை தண்டியாமல் விடார்" (யாத் 20 : 7)



The men of mighty prayer are men of spiritual might. Prayers never die. Brainerd's whole life was a life of prayer. By day and by night he prayed. Before preaching and after preaching he prayed. Riding through the interminable solitudes of the forest he prayed. On his bed of straw he prayed. Retiring to the dense and lonely forests he prayed. Hour by hour, day after day, early morn and late at night, he was praying and fasting, pouring out his soul, interceding, communing with God. He was with God mightily in prayer, and God was with him mightily, and by it he being dead yet speaketh and worketh, and will speak and work till the end comes, and among the glorious ones of that glorious day, he will be with the first.

மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்பதற்கு பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் (லூக்கா 21 : 36)

கர்த்தருக்குள் எனக்கு மிகவும் அன்பானவர்களே,

நேற்றும், இன்றும், என்றும் மாறாத நம் அருமை இரட்சகர் இயேசுவின் பரிசுத்த நாமத்தில் உங்களை வாழ்த்துகின்றேன்.

கர்த்தாவின் அளவற்ற இரக்க கிருபையாலும், புண்ணியத்தாலும், தேவ மக்களாகிய உங்களுடைய உருக்கமான ஜெபங்களின் காரணமாகவும் கர்த்தருடைய பரிசுத்த ஊழியங்களை அவருக்கு மகிமையாக மிகுந்த ஜெபத்தோடு செய்து முடித்துவிட்டு சகோதரன் நார்ட்டன் அவர்களும் நானும் சுகமாக இங்கு வந்து சேர்ந்தோம். எங்களுடைய ஊழியங்களுக்காக உள்ளத்தின் பாரத்தோடு ஜெபித்த மற்றும் தியாக அன்போடு உதவி செய்த எல்லா தேவ பிள்ளைகளையும் அன்பின் கருணாகர தேவன் தமது மகிமையின் ஐசுவரியத்தின்படி சம்பூரணமாக ஆசீர்வதிப்பாராக.

முந்தைய ஆண்டுகளைவிட இந்த தடவை கூடுதலான நாட்கள் நாங்கள் வடக்கே தேவ ஊழியம் செய்ய கர்த்தர் உதவி செய்தார். ஊழியத்தின் பாதையில் பெரும்பாலான நாட்கள் இமயமலைகளில் கழிந்தது. கடந்த இரண்டு ஆண்டுகள் நாங்கள் சந்தித்த அதே ஆத்துமாக்கள் சிலரை இந்த ஆண்டும் சந்தித்தோம். எங்களுடைய பிரயாசங்கள் கர்த்தருக்கு மகிமையாக பலன் அளித்திருப்பதை கண்கூடாக கண்டு கர்த்தருக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுத்தோம்.

இமயமலைகளிலுள்ள பித்தோராகார் என்ற பட்டணத்திற்கு சமீபமாக உள்ள பாண்டா கிராமத்தில் நாங்கள் 1997 ஆம் ஆண்டு சந்தித்த ஆர்யா என்ற இந்து மனிதர் முழுமையாக ஆண்டவருடைய அன்புக்குள் வந்து அவருடைய அடியானாகிவிட்டார். எல்லா துதி, கனம், மகிமை கர்த்தர் இயேசுவுக்கே உண்டாவதாக. அதுபற்றிய விபரமான செய்தியை நீங்கள் இந்த இதழின் பிறிதொரு பக்கத்தில் காணக்கூடும்.

இமயமலைகளிலுள்ள அல்மோரா பட்டணத்திற்கு அருகிலுள்ள மால் என்ற கிராமத்தில் ஒரு அன்பான குடும்பத்தோடு 1997 ஆம் ஆண்டு எங்களுக்கு ஒரு அற்புதமான தொடர்பு கிடைத்தது. அந்த சந்திப்பை உருவாக்கிக் கொடுத்தவர் நம் தேவனே. அந்த ஆண்டில் நான் மால் கிராமத்துக்கு சென்றிருந்தேன். அங்கு கிராமத்துக்கு மேலே மலைமேல் ரஸ்தா ஓரமாக ஒரு டீ கடை இருந்தது. அதின் உரிமையாளர் லீலாதர் என்பவராவார். நான் அவரை சந்தித்து தேவனுடைய சுவிசேஷ பிரதிகளை ஜெபத்தோடு கொடுத்தேன். அதை அன்புடன் பெற்றுக்கொண்ட அவர் கீழே கிராமத்தில் உள்ள தனது வீட்டுக்கு வரும்படி என்னை வருந்தி அழைத்தார். அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. சகோதரன் நார்ட்டன் அவர்கள் உடல்நலக்குறைவு காரணமாக நாங்கள் அல்மோராவில் தங்கியிருந்த லாட்ஜிலேயே இருந்துவிட்டார்கள்.

நான் மட்டும் தனித்து லீலாதருடைய வீட்டுக்கு சென்றேன். அவர் ஒரு ஐசுவரியவான் என்பதும் அத்துடன் அவர் ஒரு வைராக்கியமான இந்து புரோகிதர் என்பதுவும் அவரது வீட்டுக்கு போன பின்னர்தான் எனக்கு தெரிய வந்தது. அவருக்கு 2 வாலிப பெண்களும் ஒரு வாலிப மகனும் இருக்கின்றனர். வீட்டிற்குச் சென்ற என்னை அன்புடன் ஏற்று அருமையாக உபசரித்தனர். வீட்டில் அவருடைய மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் என் மீது அலாதி அன்பு ஏற்பட்டது. சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு என் கைவசமிருந்த தேவனுடைய பிரசுரங்களை எல்லாம் வகைக்கு ஒன்றாக அந்த வாலிப பெண் மக்களுக்கு கொடுத்தேன்.

ஆனால் அவர்கள் அவைகளை அத்தனை வாஞ்சையோடு படிப்பதை என்னால் காண இயலவில்லை. நான் கொடுத்த தேவனுடைய புத்தகங்கள், பிரதிகளை எல்லாம் தங்கள் வீட்டுக்குள் சற்று உயரமாக இருந்த அலமாரியில் மறைவாக அவர்கள் வைத்துவிட்டதை நான் கவனித்தேன். அது எனது மனதுக்கு துக்கமாக இருந்தபோதிலும் அதைக்குறித்து நான் அதிகமாக கவலை கொள்ளவில்லை. காரணம், அந்தக் குடும்பத்தின் தலைவன் லீலாதர் எத்தனையோ தலைமுறை தலைமுறையாக இந்து மனிதர். அத்துடன் அவர் ஒரு புரோகிதரும் (பூஜாரி) கூட. வீட்டுக்கு முன்னாலேயே சிறிய விக்கிரக கோயில், அதற்கு முன்னால் அவர்கள் வணங்கும் துளசி செடி தெய்வம் உள்ளது. நாம் என்ன சொல்ல இருக்கின்றது? ஒரே இரவோடு இரவாக அவர்

கிறிஸ்தவனாகிவிட வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பது எத்தனை வியப்பான காரியம்!

ஒரு ஆண்டு முழுவதும் நான் கடித தொடர்பு கொண்டும், தேவனுடைய நற்செய்தி பிரசுரங்களை அவர்களுக்கு அனுப்பிக்கொண்டும் இருந்தேன். 1998 ஆம் ஆண்டு கடைசியில் திரும்பவும் அந்த குடும்பத்தினரை நாங்கள் அல்மோரா போய் சந்தித்தோம். அந்த சமயத்திலும் நாங்கள் கொடுத்த சுவிசேஷ பிரசுரங்களை முன்பு போல தங்கள் வீட்டு அலமாரியிலேயே படிக்காமல் வைத்துவிட்டனர். அது எனக்கு மகா விசனத்தை அளித்தது.

வடக்கே ஊழியத்தை முடித்து வீடு வந்ததும் வாலிப பெண்மக்கள் இருவருக்கும் சற்று கண்டிப்பான கடிதம் ஒன்று இந்தி மொழியில் எழுதி அனுப்பினேன். நெல்லை மாவட்டம் நெய்வினை யிலுள்ள நம் அருமை சகோதரனும் இந்தி பண்டிதருமான தேவசகாயம் அவர்கள் அந்த கடிதத்தை எழுதியிருந்தார்கள். நமக்கு வரும் இந்திக் கடிதங்கள் யாவுக்கும் பதில் எழுதுபவர்கள் அந்த தேவபிள்ளைதான்.



கர்த்தர் இயேசுவுக்காக அதை ஓர் தேவ ஊழியமாக செய்து வருகின்றார்கள். தேவன் தாமே அவர்களை ஆசீர்வதிப்பாராக. கடிதத்தின் சாராம்சம் இதுதான் "நான் உங்களுக்கு தந்த ஆண்டவருடைய பிரசுரங்கள் எதனையும் நீங்கள் வாசிப்பதே இல்லை. அவைகளை நீங்கள் அப்படியே உங்கள் வீட்டு மாடி அலமாரியிலேயே போட்டு

வைத்துவிடுகின்றீர்கள். உங்களை இந்து மார்க்கத்திலிருந்து கிறிஸ்தவர்களாக்க வேண்டுமென்பது எங்கள் நோக்கம் அல்ல. ஆனால், நீங்கள் ஆண்டவர் இயேசுவை உங்கள் வாழ்வில் அறிந்து அவர் தரும் உலகம் தரக்கூடாத சமாதானத்தை நீங்கள் எப்படியாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை நாங்கள் வெகுவாக விரும்புகின்றோம்" என்று எழுதினேன்.

சில தினங்களில் லீலாதரின் அருமையான பெண் மக்கள் கஞ்சனும், ஹேமாவும் எனக்கு இவ்விதமாக பதில் கடிதம் எழுதினார்கள். "அங்கிள், நீங்கள் எழுதியபடி உங்கள் புத்தகங்களை நாங்கள் வீணாக்குவதில்லை. படிக்காமலும் இருப்பதில்லை. அந்த புத்தகங்களை



எல்லாம் நாங்கள் பத்திரமாக வைத்திருந்து ஒழுங்காக படித்து வருகின்றோம். அவைகளை படிப்பதால் எங்களுடைய உள்ளத்துக்கு மிகுந்த சமாதானம் கிடைக்கின்றது. நீங்கள் எங்களுக்கு கொடுத்த இந்த இந்த புத்தகம் இப்படி இப்படி இருந்தது என்று எழுதி தொடர்ந்து இயேசு இரட்சகருடைய புத்தகங்களை அனுப்பி தாருங்கள்" என்று எனது மனம் மகிழ ஒரு அருமையான கடிதம் எழுதியிருந்தனர். கஞ்சனும், ஹேமாவும் அல்மோராவிலுள்ள கல்லூரியில் படிப்பவர்கள்.

நான் உடனடியாக பிள்ளைகளுக்கு மற்றொரு கடிதம் எழுதினேன். அதாவது "நீங்கள், தேவனுடைய பிரகாரங்களை ஒழுங்காக படிப்பவர்களானால் முசோரி பட்டணத்திலிருந்து உங்களுக்கு வரும்

தபால் மூலம் வேத பாடத்தின் முதல் பாடத்திட்டமான "இரட்சிப்பின் வழி" என்ற பாடத்திட்டத்தை முடித்து அவர்கள் தரும் சான்றிதழை பெற்று நான் உங்கள் வீட்டுக்கு அடுத்த தடவை வரும்போது அதை என்னிடம் காண்பிக்க வேண்டும்" என்று எழுதினேன். இதற்கிடையில் உத்திர பிரதேசத்திலுள்ள முசோரி பட்டணத்துக்கு கடிதம் எழுதி "இரட்சிப்பின் வழி" பாடத்திட்டத்தை இந்தி மொழியில் கஞ்சனுக்கும், ஹேமாவுக்கும் அனுப்பும்படியாக அங்குள்ள புகழ்பெற்ற "ஜீவன் ஜோதி" என்ற தபால் மூலம் வேத பாடங்களை அனுப்பும் பள்ளிக்கு கடிதம் எழுதினேன். அவர்களும் உடனடியாக தங்கள் வேதபாடங்களை அனுப்பினார்கள். பெண் மக்கள் அவைகளை ஒழுங்காக எழுதி அனுப்பி சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டு இந்த முறை நாங்கள் சென்றிருந்தபோது மகிழ்ச்சி பொங்க அவைகளை எங்களிடம் காண்பித்தனர். இப்பொழுது அவர்கள் 32 வேத பாடங்களைக் கொண்ட "உலக இரட்சகர் இயேசு" என்ற பாடத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

கர்த்தர் இந்த பாடத்திட்டத்தின் மூலமாக கஞ்சன், ஹேமா என்ற மேற்கண்ட வாலிப இந்து பெண் மக்களோடு பேச நீங்களும் தொடர்ந்து அன்பாக ஜெபித்து வாருங்கள். வைராக்கியமான இந்து பிராமண புரோகிதருடைய வாலிப பெண்கள் இவ்வண்ணமாக ஆண்டவருடைய வசனங்களை வாசித்து வேதபாட வகுப்புகளிலும் சேர்ந்து எழுதி சான்றிதழ்கள் பெறுவது என்பது அத்தனை எளிதான காரியம் அல்ல. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

3 ஆண்டுகள் நாங்கள் இந்த குடும்பத்தை தொடர்ந்து சந்தித்துவிட்டபடியால் அவர்களின் வீடு எங்களுக்கு சொந்த வீடு போல ஆகிவிட்டது. எங்களுடைய வருகை அவர்களுக்கு மிகுந்த சந்தோசத்தை அளிக்கின்றது. எங்களுக்கு விருந்து செய்து மகிழ்விப்பதில் அவர்கள் அலாதி பிரியம் காண்பிக்கின்றனர். நாங்கள் ஓராண்டு கால இடைவெளிக்கு பின்னர் அவர்கள் வீடு சென்றதும் வீட்டின் தலைவன் லீலாதர் (கிருஷ்ணன்) அவர்கள் எங்களை மார்புற கட்டித் தழுவி மகிழ்ந்தார். அவரது மனைவியும், பெண் மக்கள் இருவரும் பாவிகளாகிய எங்களுடைய பாதங்களை தொட்டு கும்பிட்டு தங்கள் அன்பை காண்பித்தனர். தங்களுடனேயே நாங்கள் தங்கியிருந்து தேவ ஊழியத்தை செய்யும்படியாக எங்களுடன் போருக்குத்தான் நின்றனர். அடுத்த முறை அவர்கள் வீட்டில் தங்கியிருந்து அல்மோரா பகுதியில் தேவ ஊழியம்

செய்வதாக கூறி வந்தோம். அந்த அன்பான குடும்பம் இரண்டு நாட்கள் எங்களுக்கு விருந்தளித்து ஆனந்தித்தனர். லீலாதர் பிராமண குலத்தை சேர்ந்தவராதலால் எங்களுக்கான அறுசுவை உண்டியை தவசுப் பிள்ளையாக அவரே முன் நின்று செய்து எங்களை மகிழ்வித்தார். கர்த்தர் தாமே அந்த அன்பான குடும்பத்தை ஆசீர்வதிப்பாராக. தங்கள் அருமை தாய் தந்தையரோடு பெண் மக்கள் கஞ்சனும், ஹேமாவும் நின்று கொண்டிருக்கும் ஒரு புகைப்படத்தையும், கஞ்சனும், ஹேமாவும் ஒன்றாக நிற்கும் மற்றொரு புகைப்படத்தையும் நீங்கள் இந்த தலையங்க செய்தியில் காணலாம். இந்த அன்பான குடும்பம் கர்த்தரை தங்கள் தெய்வமாக கொண்ட ஒரு கிறிஸ்தவ குடும்பமாக மாற அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.


பாகேஷ்வரில் கடைக்காரர் மோகன்லால்

இமயமலைகளிலுள்ள பாகேஷ்வர் என்ற சிறிய பட்டணத்துக்குச் சென்று கடைக்காரர் மோகன்லாலை இந்த வருடமும் நாங்கள் சந்தித்தோம். அவரது கடைக்குச் சென்றதும் எங்கள் கண்களுக்கு தென்பட்டது அவரது கடையில் தொங்கிக் கொண்டிருந்த இந்தி மொழி தங்கவசன காலண்டர்தான். அந்த காலண்டரை நாங்கள் அவருக்கு இங்கிருந்து அனுப்பி வைத்திருந்தோம். அவருடைய கடைக்கு வரும் இந்து மக்கள் யாவரும் அந்த ஜீவனுள்ள தேவ வசனங்களை வாசித்து பயன் அடைந்திருப்பார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கடைக்காரர் மோகன்லால் தேவனுடைய வார்த்தைகளை அதிகமாக நேசிப்பதை எங்களால் காண முடிந்தது. முதலாவது அவர் தேவனுடைய வசனங்கள் அடங்கிய இந்தி தங்கவசன காலண்டரை தைரியமாக தனது கடையில் யாவரும் வாசிக்கும்படியாகவும், பார்க்கும்படியாகவும் தொங்க வைத்திருப்பதுதான். அடுத்தபடியாக, நாங்கள் இதுவரை நேரிலும், தபால் மூலமாகவும் அனுப்பிய இந்தி மொழி வேதாகமம், புதிய ஏற்பாடு, அநேக விதமான சுவிசேஷ துண்டு பிரசுரங்கள், சிறு புத்தகங்கள் அனைத்தையும் பத்திரமாக ஒரு வெள்ளைத் துணியில் வைத்து கட்டி அவைகளை அவ்வப்போது ஒழுங்காக படித்து வருகின்றார். நாங்கள் சென்றதும் அந்த மூட்டையை எடுத்து பிரித்து அவைகளை தான் எப்படி நேசிக்கின்றேன் என்பதையும், வாசித்து

வருகின்றேன் என்பதை குறித்தும் கூறி ஆனந்தித்தார். அவைகள் தனக்கு தரும் சமாதானத்தையும் கூறி மகிழ்ந்தார்.

கடைசியாக ஒரு காரியம், இப்போது அவர் தபால் மூலம் வேதபாடம் கற்கும் ஜீவன் ஜோதி வேதாகம பாடசாலையிலிருந்து "இரட்சிப்பின் வழி" வேத பாடங்களை நிரப்பி அனுப்பி படித்து வருகின்றார். நாங்கள் அவரண்டை சென்றபோது அந்த பாடங்களை எங்களுக்கு காண்பித்து சந்தோசப்பட்டதுடன் கடைசியாக தனக்கு கிடைத்த வேதாகம பாடத்தில் தான் தவறாக 3 பிழைகள் போட்டுவிட்டதாக கூறி மிகவும் விசனம் அடைந்தார். தேவன் இந்த வேதாகம பாடங்கள் மூலமாகவும், ஏற்கெனவே தனது கைவசம் வைத்து படித்து வரும் தேவனுடைய வசனங்கள் மூலமாகவும் பேசி அவரை தனது சொந்த பிள்ளையாக்க நீங்களும் அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.



1999 ஆம் ஆண்டின் முதல் இதழில் (வாழை மரம் போட்ட முகப்பு அட்டை இதழ்) மோகன்லாலையும் அவரது மனைவி மான்சி தேவி படத்தையும் 35 ஆம் பக்கத்தில் பார்த்தீர்கள். அவர்கள் இருவரின் படத்துக்கு பின்னாலுள்ள மணிகளின் கம்பம் இன்று அவர்கள் வீட்டில் கிடையாது. அவர்கள் தாங்கள் வழிபடும் கடவுளை விழிப்படையச் செய்ய அந்த மனிகளை அடித்து வந்தனர். இப்பொழுது நாங்கள் செல்லும்போது அந்த மணிகளின் கம்பம் வேரோடு பிடுங்கப்பட்டு ஒரு கரையில் ஒதுக்கித் தள்ளப்பட்டிருப்பதை கவனித்தோம். மோகன்லால் இருதயத்தில் தேவன் ஏதோ கிரியை நடத்தியிருக்கிறார் என்பதை நாங்கள் யூகித்தோம். இந்த தடவையும் அவருடைய குடும்பத்தை புகைப்படம் எடுத்தோம். அந்த புகைப்படத்தை நீங்கள் இந்த செய்தியில் காணக்கூடும்.

கடைக்காரர் மோகன்லாலை கர்த்தர் எப்படியும் சந்திப்பார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எங்களுக்குள்ளது.

3 வருடங்கள் நாங்கள் தொடர்ந்து இந்த குடும்பத்தை சந்தித்து விட்டபடியால் நாங்களும் அவர்கள் குடும்பத்தில் ஒரு அங்கமாகி விட்டோம். மோகன் எங்களைக் கண்டதும் தனது மார்புற தழுவி மகிழ்வதும், மனைவியும், அவரது சிறு பிள்ளைகளும் எங்கள் பாதங்களை அவர்கள் இமயமலை கிராம கலாச்சாரத்தின்படி தொட்டு கும்பிடுவதும் வழக்கமாகிவிட்டது. எங்களை அதிகமாக நேசிப்பது, உபசரிப்பது, விருந்துக்கு அழைப்பது எல்லாம் நடைமுறையாகிவிட்டது. கர்த்தர் அந்த குடும்பத்தை ஒரு கிறிஸ்தவ குடும்பமாக மாற்ற வேண்டும் என்பதே எங்கள் இதயக் கதறுதலாகும். அதுவே உங்களுடைய கதறுதலாக இருக்க தேவன் கிருபை செய்வாராக.

கோர விபத்திலிருந்து எங்களை பாதுகாத்த தேவ கரம்

கடந்த தடவைகளைப் போல இந்த தடவையும் இமயமலைகளிலுள்ள குமான், கட்வால் பகுதிகளில் தேவனுடைய சுவிசேஷத்தின் பாதையில் நாங்கள் நீண்டதும், பயங்கரமுமான மலைப்பாதைகளில் பயணம் செய்ய வேண்டியதாக இருந்தது. சாநிழலின் பள்ளத்தாக்கு பாதைகளான அவைகளில் பயணம் செய்து வந்த மக்களுக்கேயன்றி அவைகளைக் குறித்த காரியம் வேறு எவருக்கும் தெரியாது. பாகேஷ்வர் என்ற இடத்திலிருந்து அப்பொழுது நாங்கள் 52 கி.மீ. தொலைவிலுள்ள குவால்தம் என்ற இடத்துக்கு பேருந்தில் சென்று கொண்டிருந்தோம். குவால்தம் 6000 அடி உயரத்திலுள்ள ஒரு சின்னஞ்சிறிய பட்டணம். எங்கள் பேருந்து வளைந்து, வளைந்து மலைகள் ஏறி குவால்தம் ஊரை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் குவால்தம் ஊரில் இருந்து கீழ் நோக்கி வந்து கொண்டிருந்த ஒரு ராணுவ டிரக் எங்கள் பேருந்துடன் ஒரு வளைவில் மிக பலமாக பக்கவாட்டில் மோதி நின்றது. ராணுவ டிரக் மோதிய வேகத்தில் எங்களது பேருந்து கீழே பள்ளத்தில் உருண்டு விழும் நிலைக்கு சாய்ந்து அதின் சக்கரங்கள் ரஸ்தாவை விட்டு மேலே எழும்பிவிட்டன. தேவனுடைய அதிசயமான பாதுகாவலின் கரம் அந்த மாலை நேரம் நாங்கள் சடுதியான கோர மரணத்தை சந்திக்காமல் எங்களை அற்புதமாக பாதுகாத்துக் கொண்டது. ராணுவ டிரக் பலமாக மோதிய எங்களது பேருந்தின் வலது

பக்கத்திலிருந்து எழுந்து சில நிமிடங்களுக்கு முன்னர்தான் நான் பேருந்தின் இடது பக்கத்திற்கு மாறிச் சென்று உட்கார்ந்தேன். ஒருக்கால் நான் அதே வலது பக்கத்தில் அமர்ந்திருந்தால் அந்த பலமான அதிர்ச்சி ஒலி எனக்கு பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும்.

எல்லாம் தேவ மக்களாகிய உங்களது உருக்கமான ஜெபங்கள் தான் தேவசமூகத்தில் கேட்கப்பட்டு எங்களுக்கு பாதுகாப்பை அளித்தது. அக்டோபர் மாதம் நிகழ்ந்த அந்த சம்பவசமயத்தில் ஒரு கர்த்தருடைய பிள்ளை ஒரு நாள் நள்ளிரவு சமயம் எங்களுக்காக வெகுவாக போராடி ஜெபித்ததாக எழுதியிருந்தார்கள். அன்று இரவு தேவ ஆவியானவர் அவர்களை தூங்கவொட்டாமல் எங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்க தூண்டிக் கொண்டே இருந்ததாக தங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். ஆம், உங்கள் உருக்கமான ஜெபங்கள் தான் எங்களுக்கு நிச்சயமான தேவ பாதுகாவலையும், ஊழியத்தின் பாதையிலே மிகுந்த ஆசீர்வாதங்களையும் அள்ளிக் கொண்டு வந்தது.

தீட்டுள்ளதும், அருவருப்பையும், பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை.

இமயமலைகளிலுள்ள குவால்தம் என்ற ஊரிலே நாங்கள் 3 நாட்கள் தங்கியிருந்து சுற்றியுள்ள இடங்களில் தேவனுடைய ஊழியத்தை செய்தோம். ஊருக்கு அப்பால் நானா திசைகளிலும் இமயமலைத்




)தாடர்கள் கம்பீரமாக மதில் சுவர்கள் போல் நிற்கின்றன. அதின் ரிவுகளில் ஆங்காங்கு ஏராளமான மலை கிராமங்கள் கண்களுக்குத் தென்படுகின்றன. குவால்தம் ஊரின் ஒரு பக்கத்தில் வெள்ளிப் பனி மலைகளான நந்தா தேவியும், திரிசூலமும் வானத்தை தொட்டுக் கொண்டு காவலர்களாக நின்று கொண்டிருக்கின்றன. ஆண்டவரின் அந்த அழகான படைப்பை நாம் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல தெரிகின்றது.

இந்த குவால்தம் என்ற இடத்திற்கு எங்களை அழைத்துக் கொண்டு வந்து எங்களை அங்கு ஊழியம் செய்யும்படியாக வழிநடத்தினவர் நம் தேவன் ஒருவர்தாமே. இந்த இடத்தை குறித்து நாங்கள் இதற்கு முன் கேள்விப்பட்டதே கிடையாது. இந்த இடத்திற்கு வந்து ஊழியம் செய்ய வேண்டுமென்ற எந்த ஒரு எண்ணமும் எங்களுக்கு இல்லாதிருந்தது.

இந்த இடத்தில் ஒரு பழத்தோட்டமும், ஆட்டுப்பண்ணை, முயல்பண்ணை ஆகிய மூன்றும் உள்ளன. அவைகள் அனைத்தும் உத்திர பிரதேச அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றன. பழத்தோட்டத்தோடு இணைந்து ஒரு பூந்தோட்டமும் உள்ளது. அதுவும் அரசாங்கத்தை சேர்ந்ததுதான். நாங்கள் அங்கு சென்ற சமயம் குளிர்காலமானபடியால் பழத்தோட்டத்தில் பழங்களையோ, மலர்த்தோட்டத்தில் பூக்களையோ காண இயலவில்லை. அந்த குளிர் காலத்தில் மலரக்கூடிய இமயமலை செண்டு பூக்கள் மற்றும் ஒருவித சாமந்தி மலரை மாத்திரம் கண்டோம். இந்த இடங்களுக்கெல்லாம் வந்து தேவனுடைய சுவிசேஷ நற்செய்தியை கொடுக்க கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார்.

பழத்தோட்டம், பூந்தோட்டம், ஆட்டுப்பண்ணை, முயல் பண்ணையில் பணிபுரியும் அதிகாரிகளுக்கும் வேலையாட்களுக்கும் தேவனுடைய சுவிசேஷ பிரசுரங்களை நாங்கள் ஜெபத்தோடு கொடுத்தோம். அவர்கள் அவைகளை ஆசை ஆவலோடு வாங்கி வாசித்தனர். ஆட்டுப் பண்ணையில் பணிபுரியும் கல்வாதி தேவி தேவனுடைய பிரசுரங்களை வாங்கி வாசிப்பதில் அதிக ஆர்வம் காட்டினாள். தனது ஆடுகளுடன் நிற்கும் கல்வாதி தேவியை நீங்கள் இந்த செய்தியில் காணக்கூடும். அழகு குலுங்கும் குவால்தம் ஊரின் ஒரு இடத்தின் காட்சியும் இந்த செய்தியில் இடம் பெற்றுள்ளது.

குவால்தம் என்ற இடத்திலுள்ள முயல் பண்ணையை நாங்கள் காணச் சென்றிருந்தோம். அங்குள்ள முயல்கள் யாவும் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்தவைகளாகும். ஒரு முயலின் விலை ரூபாய் 700 என்று



கூறினார்கள். 6 மாதங்களுக்கு ஒரு தடவை முயல்களின் ரோமம் கத்தரிக்கப்பட்டு அந்த ரோமத்தால் அழகான கோட்டுகள் மற்றும் சட்டைகள் எல்லாம் நெய்யப்படுவதாக கேள்விப்பட்டோம். அடுக்கடுக்கான இரும்புக்கூண்டுகளில் முயல்களை வைத்து வளர்க்கின்றனர். ஒரு கூண்டுக்கு ஒரு முயல் மட்டுமே என்ற விகிதாச்சாரத்தில் வைத்துள்ளனர்.

அந்த முயல் பண்ணையை நாங்கள் காண விரும்பியபோது அந்த பண்ணையின் மேலாளர் எங்களை அழைத்துச் சென்று சுண்ணாம்பு கொட்டி வைக்கப்பட்டுள்ள ஓரிடத்தில் சற்று நேரம் நிற்கும்படி செய்து எங்களை முயல்கள் வளர்க்கப்படும் பெரிய அறைக்குள் அழைத்துச் சென்றார். ஏன் அப்படிச் செய்தார் என்று நினைக்கிறீர்களா? எங்களுடைய செருப்புகளின் மூலமாக முயல்களுக்கு தீங்கு செய்யக்கூடிய கொடிய பாக்டீரியாக்கள் முயல்களின் அறைக்குள் சென்றுவிடக்கூடாது என்பதற்காகத்தான். நாங்கள் சுண்ணாம்பில் நின்ற சிறிது நேரத்தில் எங்கள் செருப்புகளிலிருந்த விஷ கிருமிகள் அனைத்தும் மாண்டு போயின.

அந்த சம்பவத்தை நான் சிந்தித்தபோது வெளி 21 : 27 ஆம் வசனம்தான் என் நினைவுக்கு வந்தது. தீட்டும், அருவருப்பும், பொய்யும் மற்றும் வேறு எந்த ஒரு துர்க்குணமும் உடையோர் பரலோகத்துக்குள் பிரவேசிக்க இயலாது. பரலோக பேரின்ப வீட்டில் வாசம் பண்ணும் நம் பரிசுத்த கர்த்தரை தரிசித்து அவரோடு சதாகாலமும் நாம் வாழ வேண்டுமானால் எந்த ஒரு பாவத்தீட்டும், மாசும் நம்மில் காணப்படக் கூடாது. "கைகளில் சுத்தமுள்ளவனும், இருதயத்தில் மாசில்லாதவனும், தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக் கொடாதவனும், கபடாய் ஆணையிடாதவனும் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறி, அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் அவரோடு என்றும் நிலைத்திருப்பான்" (சங் 24 : 3,4) என்று சங்கீதக்காரர் சொல்லுவார்.

எனது கரங்களுக்கு கிடைத்த இரு அருமையான புத்தகங்கள்

இந்த தடவை தேவ ஊழியத்தின் பாதையில் வடக்கே சென்றிருந்த போது 2 அருமையான புத்தகங்கள் எனது கரங்களில் வந்து கிடைக்க தேவன் கிருபை செய்தார். **"சாது சுந்தர் சிங் - ஒரு புதிய வாழ்க்கை சாயல்"** என்ற ஒரு புத்தகமும் **"அர்ப்பணிக்கப்பட்டதும் பரிசுத்தமுமானதொரு வாழ்க்கை"** என்ற பிறிதொரு புத்தகமுமாகும். அவை இரண்டும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டவை. அவைகள் எனது ஆத்துமாவுக்கு தேனிட்ட பரலோக மன்னாவாக இருந்தன. பிந்தைய புத்தகம் 303 பக்கங்களை கொண்டது. அதை நான் 5 நாட்களில் படித்து முடித்தேன். "வில்லியம் லா" என்ற பூர்வீக தேவபக்தன் அதை எழுதியிருந்தார். முந்தைய புத்தகம் நான் முதன்முறையாக படித்த புத்தகமாயினும் அதிலுள்ள பெரும்பாலான செய்திகளை நான் ஏற்கெனவே படித்திருக்கின்றேன். பக்த சிரோன்மணி சாது சுந்தர்சிங்கை குறித்து எழுதப்பட்ட அந்த புத்தகத்தில் நான் இதுவரை படித்திராததும், கேள்விப்பட்டிராததுமான சில ஆச்சரியமான நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தன. கர்த்தருடைய நாம மகிமைக்காகவும், உங்களுடைய ஆவிக்குரிய வாழ்வின் ஆசீர்வாதத்துக் காகவும் அவைகளில் சிலவற்றை இந்த தலையங்கத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

பெயர், புகழ் விரும்பாத தேவ பக்தன் சாது சுந்தர்சிங்

உலகப்பிரகாரமான வாழ்க்கைகளிலும், கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கைகளிலும் மனிதர்கள் தங்கள் பெயர், புகழுக்காக போராடிக் கொண்டிருப்பதை நாம் தாராளமாக இந்தக் கடைசி நாட்களில் எங்கும் காணலாம். பிரசங்கிமார்களாகிய நாம் நமது உருவப்படமும், நாம் பிரசிங்கிக்கும்போது நமக்கு முன்பாக அமர்ந்திருந்து நமது தேவசெய்தியை திரளான மக்கள் ஆவலோடு கேட்கும் பாவனையில் உள்ள படங்களான "வால்போஸ்டர்கள்" பட்டணத்து சுவர்களில் எல்லாம் ஒட்டப்பட நாம் துடிதுடித்து ஆசைப்படுகின்றோம். அந்த அழகான வால்போஸ்ட்டர்களை நாமே நமது செலவில் பலவித வர்ணங்களில் அச்சிட்டு முன்கூட்டியே நாம் பிரசங்கிக்கப்போகும் ஊர்களுக்கு அனுப்பி விடுகின்றோம்.

இந்தவிதமான காரியங்கள் சாதுசுந்தர் சிங்குக்கு முற்றும் விருப்பமற்ற காரியங்களாகும். அவர் அதை உக்கிர பகையாக பகைத்தார். "மேலை நாடுகளை ஜெயித்த மனிதர்" என்று ஒரு கூட்டம் கிறிஸ்தவ மக்கள் சாதுவைக் குறித்து வர்ணித்து அவரது வரவுக்காக சென்னையில் ஆவலோடு காத்திருந்து ஒரு மாபெரும் வரவேற்பு அவருக்கு கொடுப்பதற்காக ஆயத்தங்களை செய்து கொண்டிருந்தனர். இந்த ஏற்பாட்டைக் குறித்த காரியத்தை சாது ஐரோப்பாவிலிருந்து கிளம்பி இலங்கை வந்தபோது கேள்விப்பட்டார். **"உலகப்பிரசித்தி பெற்ற சாது"** என்று பெரிய அச்சரமான எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருந்த ஒரு நோட்டீஸையும் இது சம்மந்தமாக இலங்கையில் அவர் பார்க்க நேர்ந்தது. இதைக் குறித்து சாது தமது ஆவிக்குரிய மிக நெருக்கமான நியூஜிலாந்து நண்பர் ரிட்டல் என்பவரிடம் பின் வந்த ஆண்டுகளில் கூறும்போது "நான் அந்த நோட்டீசைப் பார்த்தபோது மிகவும் வெட்கமும் துக்கமும் அடைந்தேன். அந்த நோட்டீஸைப் படிக்கையில் என் உடல் முழுவதும் பயத்தாலும், நடுக்கத்தாலும் வியர்த்துக் கொட்டிவிட்டது" என்று சொன்னார்.

தன்னை தங்கள் தலைக்குமேல் வைத்து சென்னை கிறிஸ்தவ மக்கள் தூக்கி நடப்பார்கள் என்று எண்ணி பயந்து நடுங்கி யாருக்கும் தெரியாமல் இலங்கையிலிருந்து பம்பாய் சென்று அங்கிருந்து சிம்லா

மலைகளிலுள்ள தனது வீடு அமைந்திருந்த சுபத்துவுக்கு சென்றுவிட்டார். பம்பாயில் சாதுவை சந்தித்தது அவரது மொழி பெயர்ப்பாளனான வின்சென்ட் டேவிட் மாத்திரமே. அவரை மட்டும்தான் பம்பாய் துறைமுகத்துக்கு அவர் அழைத்திருந்தார். சாது தமது ஐரோப்பிய சுவிசேஷ பிரயாண நடபடிகள் அனைத்தையும் வின்சென்ட் டேவிட்டிடம் கூறினார். என்னே, சாதுவின் பெயர், புகழ் விரும்பாத ஒப்பற்ற தேவ பண்பு!

இங்கிலாந்து மகாராணியிடமிருந்து சாதுவுக்கு வந்த அழைப்பு

இங்கிலாந்து தேசத்தின் தலைநகரான லண்டன் மாநகரில் சாதுசுந்தர்சிங் இருந்தபோது அரச அரண்மனையான பக்கிங்காம் பாலஸ்ஸிலிருந்து மகாராணி நமது சாதுவை தன்னுடன் அரண்மனையில் தேயிலை பானம் அருந்த அழைத்திருந்தார்கள். ராணி அழைத்திருந்த நாள், நேரத்தை சாது பார்த்தபோது அந்த நாளில் அதே மணி நேரத்தில் 2 ஆயிரம் மக்கள் கூடவிருந்த ஒரு கூட்டத்தில் அவர் தேவனுடைய செய்தியை கொடுக்க வேண்டியதாக இருந்தது. அதின் காரணமாக சாது சுந்தர்சிங் உலகை ஆளும் மகாராணியின் அன்பான அழைப்பை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். இக்காலத்திய பிரசங்கிகளாகிய நாம் என்றால் முதலாவது ராணியின் அரண்மனைதான் என்று அதற்கு முன்னுரிமை அளித்து அதின் காரணமாக எத்தனை ஆயிரம் மக்கள் கூடும் கூட்டமானாலும் துணிந்து ஏமாற்றத்துக்குள் தள்ளிவிட தயங்கமாட்டோம்.

உலகை ஆண்ட மகா ராணியார் தன்னை அரண்மனைக்கு அழைத்த அந்த சம்பவத்தை சாது சுந்தர்சிங் வெகு அபூர்வமாகவே தனது பிரசங்கங்களில் குறிப்பிடுவார். ஆனால், அவர் அடிக்கடி குறிப்பிட்ட ஒரு காரியம் யாதேனில், தன்னை ஒரு தபால் பெட்டி என்று நினைத்து தனது கடிதத்தை போட வந்த ஒரு மூதாட்டியை பற்றிய நிகழ்ச்சி அது. அந்த நாட்களில் லண்டன் மாநகரம் அடிக்கடி அடர்த்தியான மேக மூட்டத்தால் முற்றுமாக மூடப்படும். அப்படி அடர்த்தியான வெண் மேக மூட்டம் மூடியிருந்த ஒரு நாளில் சாது ஒரு ரஸ்தாவை கடப்பதற்காக அதின் ஓரமாக நின்று கொண்டிருந்தார். உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் காவி அங்கி அணிந்திருந்த அவருடைய உருவத்தை

நிச்சயமாகவே ஒரு தபால்பெட்டி தான் என்று எண்ணி ஒரு வயதான தாயார் தான் கொண்டு வந்திருந்த கடிதத்தை அதில் போட முன்னும், பின்னுமாக எவ்வளவோ முயற்சித்து இறுதியில் தான் நினைத்தது தவறு என்பதை அந்த தபால் பெட்டி மேக மூட்டம் விலகியதும் மெதுவாக முன் நோக்கி நகர்ந்தபோது தான் கண்டு கொண்டார்கள். இந்த சம்பவத்தை சுந்தர் தனது பிரசங்கங்களில் அடிக்கடி கூறினதுண்டு.

மாராமன் கன்வென்ஷனில் ஒரு தாழ்மையின் சொரூபம்

இக்காலத்து பிரசங்கிகளாகிய நமக்கு பிரசங்க மேடையில் கவர்னருக்கு கூட கொடுக்கப்படாத ராஜ நாற்காலி பிரத்தியேகமாக கொடுக்கப்பட்டாக வேண்டும். மற்றவர்களிடமிருந்து மக்கள் நம்மை வேறு பிரித்து பார்க்க அதிகமாக வாஞ்சிக்கின்றோம். ஆனால், காவி உடைக்காரரான சாது சுந்தர்சிங் வெகு அற்புதமான ஒரு மனிதராவார். கேரளாவில் ஆண்டுதோறும் நடைபெறும் பிரமாண்டமான மாராமன் கன்வென்ஷனிலே அந்த குறிப்பிட்ட ஆண்டு அவரை பேச அழைத்திருந்தனர். ஒரு வாரம் முழுவதும் அந்த திரள் கூட்டத்தினருக்கு தேவ செய்திகளை கொடுத்து வந்த அவரது செய்தியை கேட்க கடைசி நாளில் மட்டும் 32,000 மக்கள் திரண்டனர். ஜனப்பெருக்கத்தை எண்ணி பந்தல்களை புதிதாக போட்டுக் கொண்டே இருந்தனர். பேசுவதற்கு அவர் அமைதியாக எழுந்து நின்று தமக்கு முன்பாக அமர்ந்துள்ள மக்கள் வெள்ளத்தை சற்று நேரம் அப்படியே பார்த்தார். தேவனுடைய பிரசன்னத்தால் நிறைந்த அந்த பிரகாசமான உருவம் நிற்பதை பார்த்ததுமே மக்கள் தங்கள் கண்களை அப்படியே அவர் மீது பிரமிப்பால் பதித்துக் கொண்டனர். இப்படிப்பட்ட பக்த சிரோன்மணி அந்த பிரசங்க மேடையில் எந்த இடத்தில் எப்படி அமர்ந்திருந்தார் என்று நீங்கள் கேள்விப்பட்டால் ஆச்சரியத்தால் நிச்சயமாக திகைப்படைந்து விடுவீர்கள்!

பெரும் பேராயர்கள், பேராயர்கள், ஆயர்கள் யாவருக்கும் முன்பாக தரையிலே தனது இரு கால்களையும் மடக்கி சம்மணம் போட்டு உட்கார்ந்து தனது கரத்தில் தனது வேதாகமத்தை பிடித்தவராக தேவனுடைய பிரசன்னத்தின் ஒளியில் அமர்ந்திருந்தார். சாதுவின் மனத்தாழ்மையை என்னவென்று சொல்லுவது!

எனது கரங்களுக்கு கிடைத்த அடுத்த புத்தகத்தில் ஒரு கிறிஸ்தவனுக்கு இருக்க வேண்டிய பரிசுத்த குண நலன்கள் பலவும் எடுத்துக்காட்டப்பட்டிருந்தன:-

ஒரு கிறிஸ்தவன் தனது பூவுலக யாத்திரை முழுமையிலும் தன்னை ஒரு பரதேசியாக மனதில் எண்ணி வாழ வேண்டும். (சங் 119 : 19) என்றும், அவன் இந்த மாய உலகத்திலும், உலகத்தில் உள்ளவைகள் யாதொன்றிலும் அன்புகூறக் கூடாது (1 யோவான் 2 : 15 - 17) என்றும், தனது கிறிஸ்தவ வாழ்வில் தனது அன்பின் ஆண்டவருடைய தாழ்மையை தரித்தவனாக வாழ வேண்டும். (பிலி 4 : 6-8) என்றும், அவன் மிகுந்த அன்புள்ளவனாக இருக்கவேண்டும். (யோ 13 : 34-35) என்றும், அவன் தனது ஜென்ம பகையாளிகளான சத்துருக்களைக்கூட சிநேகிக்க வேண்டும் (மத் 5 : 44) என்றும் ஜெபத்துக்குள்ள மாபெரும் வல்லமையை தேவனே வெளிப்படுத்தியுள்ளதின் மூலமாக நன்கு புரிந்து (ஆதி 20 : 7, யோபு 42 : 8) ஜெப மாந்தனாக இருக்க வேண்டும் என்றும் அந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு கிறிஸ்தவன் தன் தேவனுக்கு அதிகமாகவும், எப்பொழுதும் நன்றி ஸ்தோத்திரம் ஏறெடுத்துக் கொண்டிருக்க வேண்டும். (சங் 34 : 1) என்றும் தேவனுக்கு அவன் ஏறெடுக்கும் துதி ஸ்தோத்திரங்கள் அவனது ஜெப மணி நேரங்களை தாண்டி நிற்க வேண்டும் என்றும் புத்தகத்தின் ஆக்கியோன் வில்லியம் லா எழுதுவதுடன் அந்த புத்தகத்தை அவர் கீழ்க்கண்டவாறு முடிக்கின்றார்:-

"நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டி தமது வலது கரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்தினவராக ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே வீற்றிருக்கும் மனுஷகுமாரனுடைய சிரசும், மயிரும் வெண் பஞ்சைப் போலவும், உறைந்த மழையைப் போலவும் வெண்மையாக இருக்கின்றது. அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப் போல உள்ளது. அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போல காணப்படுகிறது. அவருடைய சத்தம் பெரு வெள்ளத்து இரைச்சலைப் போல இருக்கின்றது. அந்த மனுஷ குமாரனுடைய வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்படுகின்றது. அவருடைய முகம் வல்லமையாய் பிரகாசிக்கிற சூரியனைப் போல பிரகாசிக்கின்றது. இப்படிப்பட்ட மகத்துவமும், பயங்கரமுமான தேவனும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவருமான சர்வ வல்லவரை கண்கூடாக கண்ட

அப்போஸ்தலன் செத்தவனைப் போல அவருடைய பாதங்களில் விழுகின்றார்." (வெளி 1 : 13- 17)

இப்படிப்பட்ட மாட்சியும், மகிமையும், பயங்கரமுமான ஆண்டவருக்கு முன்பாக நீ தைரியமாக நிற்கக் கூடுமா? அப்படி நிற்கவேண்டுமானால் நீ எத்தனை மாசில்லாதவனாக இருத்தல் வேண்டும்? கைகளில் சுத்தமுள்ளவனும், இருதயத்தில் மாசில்லாதவனும், தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக் கொடாதவனும், கபடாய் ஆணையிடாதவனும், உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து மனதார சத்தியத்தை பேசி, தன் நாவினால் புறங்கூறாமல், தன் அயலான் மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமல், கர்த்தருக்கு பயந்தவர்களை கனம் பண்ணி, ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருந்து, குற்றமில்லாதவனுக்கு விரோதமாய் பரிதானம் வாங்காமல் இருக்கிறவன் கர்த்தர் வாழும் பரிசுத்த பர்வதத்தில் அவருடைய கூடாரமாகிய மோட்ச வீட்டில் அவரோடு கூட வாழுவான் (சங் 24 : 4, சங் 15 : 2-5)

உனக்கு தகுதி உள்ளதா என்பதை தேவசமூகத்தில் ஆராய்ந்து பார். சகலவிதமான கசப்பு, கோபம், மூர்க்கம், கூக்குரல், தூஷணம் போன்ற அனைத்து துர்க்குணங்கள் உன்னை விட்டு நீங்கிவிட்டதா? (எபே 4 : 31) மனந்திரும்பி சிறு குழந்தையாகிவிட்டாயா (மத் 18 : 3) வாயிலே கபடமின்றி மாசில்லாதவனாகிவிட்டாயா? (வெளி 14 : 5) தேவனுடைய ராஜ்யம் உனக்குள் வந்துவிட்டதா? (லூக் 17 : 21) எருசலேமின் வாழ்வு உன்னில் மலர்ந்துவிட்டதா? (சங் 128 : 5) (வில்லியம் லா)

பாம்பின் வாய் நோக்கி சென்ற பேதை அடைக்கலான் குருவி.

சாத்தானுடைய மகா தந்திரங்களில் ஒன்று நாம் நம் ஆண்டவரை அண்டி நெருங்கி வாழவிடாமல் அவருடைய சமூகத்திலிருந்து நம்மை தூரமாக விலக்கி வைப்பதுதான். அவனுடைய தந்திரமான ஆலோசனைக்கு நாம் செவி சாய்த்தால் நாட்கள் கடந்து செல்ல, செல்ல நமக்கும் ஆண்டவர் இயேசுவுக்கும் எந்த ஒரு உறவும் இல்லாமலே போய்விடுவதுடன் நாம் சாத்தானுடைய முழுமையான ஆதிக்கத்துக்குள்ளும் அவனது வாய்க்கு நேராகவும் சென்று கொண்டிருப்பதை கண்டு அங்கலாய்த்து கதறுவோம்.

பகல் முழுவதும் ஆண்டவருடைய பணிகளில் ஈடுபட்டிருக்கும் நான் இடை இடையே எனது அறையிலிருந்து வெளியே வந்து வீட்டுக்கு ஓரமாக உள்ள தோட்டத்தில் சற்று நேரம் நின்று வெளிக்காற்றை சுவாசித்த பின்னர் வீட்டிற்கு வந்து திரும்பவும் எனது பணிகளைத் தொடருவேன்.

ஒரு நாள் நண்பகல் 2 மணி இருக்கும். வெயில் நன்கு காய்ந்து கொண்டிருந்தது. நான் எங்களது வீட்டின் குளியலறை கதவை திறந்து கொண்டு வெளியே வந்தேன். நான் எனது கண்களை ஏறெடுத்து பார்த்தபோது ஒரு பக்கம் அதிர்ச்சியும், அடுத்த பக்கம் ஆச்சரியமும் அடைந்தேன். ஒரு பாம்பு தனது தலையை உயர்த்திய நிலையில் தனது இரண்டாக பிரிந்த பெரிய நாவை வெளியே அடிக்கடி செலுத்திய வண்ணமாக இருப்பதையும், அதினுடைய வாய்க்கு நேராக ஒரு அழகான ஆண் அடைக்கலான் குருவி விரைவாக தத்தி, தத்தி ஓடி வருவதையும் கவனித்தேன். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பாம்பின் முழு உருவமைப்பும் எனக்கு எதிராக இருந்த சிமெண்ட் திட்டின் மறைவில் இருந்தமையால் பாம்பை முழுமையாக என்னால் பார்க்க இயலவில்லை. இன்னும் சில நொடிப்பொழுதுக்குள்ளாக அடைக்கலான் குருவியை பாம்பு தனக்கு இரையாக்கிவிடும் என்ற அச்சத்தால் பாம்பின் வாய்க்கு நேராக வந்து கொண்டிருந்த குருவியை பின்னால் இருந்த வண்ணமாக கை அசைத்து சூ.. சூ.. வென்று மெதுவாக குரல் கொடுத்து நான் காப்பாற்ற முயன்றேன். எனினும், அடைக்கலான் எனது குரலுக்கு செவி கொடாமல் இன்னும் பாம்பை நெருங்கிக் கொண்டிருந்தது. உடனே, நான் தைரியமாக முன் சென்று எனது சத்தத்தை சற்று உயர்த்தி குருவியை துரத்தினேன். என்னையும், எனது சத்தத்தையும் கேட்ட பாம்பு நொடிப்பொழுதில் அந்த இடத்திலிருந்து ஓட்டம் பிடித்தது. ஆ, அது எத்தனை பெரிய பாம்பு என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? அதின் முழு உருவத்தையும் பார்த்த நான் அதிர்ச்சியடைந்தேன். ஒரு விசித்திரமான சத்தத்துடன் அந்த இடத்திலிருந்து ஓடி முன்னால் இருந்த தண்ணீர் கால்வாயில் விழுந்து விரைந்து ஓடிவிட்டது.

நான் கண்ட இந்த நிகழ்ச்சியை ஒரு சகோதனிடம் நான் சொன்னபோது அவர்கள் இவ்வாறு கூறினார்கள். "அந்த பெரிய பாம்பினிடம் அந்த அடைக்கலான் குருவி தானாகவே தத்தி, தத்தி வந்த காரணம் யாதெனில் அந்த பாம்பு தனது இரையை கவர்ந்து

இழுக்கத்தக்கதான ஒரு மதுரமான சுவாசக்காற்றை அந்த குருவிக்கு நேராக வீசச்செய்திருக்கும். அந்த இன்பமான காற்றின் மயக்கத்தில் அடைக்கலான் குருவி இழுப்புண்டிருக்க வேண்டும்" என்றார்கள். அவர்களது வார்த்தை எனக்கு உண்மையாகவே தெரிந்தது. படுத்துக்கிடந்த ஒரு பெரிய பாம்பின் வாய்க்கு நேராக ஒரு தவளை ஒன்று தானாகவே குதித்து, குதித்து சென்று இரையானதை பார்த்ததாக தேயிலைத் தோட்டத்தில் அதிகாரியாக பணி ஆற்றிய ஒரு சகோதரன் பல்லாண்டு காலத்துக்கு முன்னர் என்னிடம் சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

வானில் பறந்து செல்ல வண்ண இறக்கைகளைக் கொண்டுள்ள ஒரு அடைக்கலான் குருவி மண்ணில் ஊர்ந்து செல்லும் ஒரு பாம்பின் வாய்க்கு தானாகவே வலிய சென்று இரையாகி கொள்ளுவதை குறித்து நான் பெரிதும் வியப்படைந்தேன்.

டி.வி. என்ற கருநாகத்துக்கு முன்னால் பேதை அடைக்கலான்கள்

மேலே கண்ட அடைக்கலான் குருவியைப் போல ஏராளமான மக்கள், குறிப்பாக கிறிஸ்தவ மக்களும் கூட இந்த இறுதி நாட்களில் டி.வி. என்ற கருநாகத்துக்கு முன்னால் அமர்ந்து தங்களுடைய பொன் போன்ற காலத்தை பாழாக்கி டி.வி. நிகழ்ச்சிகளை கண்டு களித்து வருகின்றனர். வயதாகி தங்கள் பணிகளிலிருந்து ஓய்வுபெற்ற அநேக கிறிஸ்தவ தம்பதியினருக்கு இந்த டி.வி பெட்டிதான் அரணும், அடைக்கலமுமாக இருக்கின்றது. நல்ல விலையுயர்ந்த கலர் டி.வி. பெட்டி அத்துடன் கேபிள் டி.வி. கனெக்ஷனும் வாங்கி வைத்துக் கொண்டு விடுகின்றனர். அதின் பின்னர் சொல்லவே வேண்டாம். வேலைக்காரி மூலமாக நேரத்துக்கு நேரம் வழங்கப்படும் ஆகாரத்தை சாப்பிட்டுவிட்டு டி.விக்கு முன்னால் அமர்ந்து ரிமோட் கண்ட்ரோல் மூலமாக விதவிதமான இந்திய



நிகழ்ச்சிகளையும், உலகத்து நிகழ்ச்சிகளையும், டிராமா, சினிமா, சர்க்கஸ் யாவையும் கண்கள் கடுத்து நோவு எடுக்கும் வரை பார்த்து தங்கள் நேரத்தை பாழ்க்கடித்து வருகின்றனர்.

தங்களுக்கு முன்பாக முடிவில்லாத நித்தியம் தனது வாயை "ஆ" வென்று திறந்திருப்பதை உணராமலும், தங்களுடைய நித்தியம் மோட்சத்திலா அல்லது நரகத்திலா செலவிடப்படும் என்பதை குறித்து கிஞ்சித்தும் யோசித்துப் பார்க்காமலும், சிந்தனை செய்யாமலும் துணிகரமாக தங்களுடைய இறுதி காலத்தை பாழாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

ஆண்டவர் இயேசுவோடு பரலோகில் வாழ நான் தகுதி பெற்றுவிட்டேனா? தேவனுடைய ராஜ்யம் எனக்குள் ஆரம்பமாகி விட்டதா? (லூக் 17: 21) என்ற வினாக்களை எழுப்பி மோட்ச வீட்டுக்கு கண்ணீரோடும், புலம்பல்களோடும் மார்பில் அடித்து ஆயத்தமாக வேண்டிய தேவ ஜனம் இரவில் தூங்கப் போகும் நேரம் வரை டி. வி. நிகழ்ச்சிகளை கவனமாக பார்த்த வண்ணமாக இருக்கின்றனர். கர்த்தர் தான் இந்த மக்களுக்கு இரங்க வேண்டும்.

உலகில் உயிர் வாழப்போகும் மீதமுள்ள நாட்கள் இத்தனைதான் என்று மருத்துவர்களால் முத்திரை குத்தப்பட்ட நிலையிலும் ஒரு கிறிஸ்தவ மனிதர் தனது படுக்கையில் படுத்தவாறே அந்த நாட்களில் நடந்து கொண்டிருந்த உலக கால்பந்து போட்டியை தனது டி. வி. பெட்டியில் மிகுந்த விளையாட்டு வெறி உணர்வோடு பார்த்துக் கொண்டிருப்பதை நான் துக்கத்தோடு கவனித்தேன். கண்ணை மூடினால் அவியாத அக்கினி கடலில் கண் விழிக்க வேண்டும். எந்த ஒரு ஆயத்தமும் கிடையாது. தேவனோடு இன்னும் ஒப்புரவாகவில்லை. மரணத்தை சந்திக்க கொஞ்சமும் தான் ஆயத்தமில்லை. அவருடைய உறவினர்கள் கல்லறைத் தோட்டத்தில் அவரை அடக்கம் செய்ய வேண்டிய இடம் எல்லாம் ஏற்கெனவே தெரிந்து கொண்டு விட்டனர். இப்படியான ஒரு கொடிய சூழ்நிலையில் தந்திர சாத்தான் அந்த மனிதரின் மனக்கண்களை எப்படியாக குருடாக்கிவிட்டான் பாருங்கள்! அவர் வெகு விரைவில் மரித்தார். அடக்கம் பண்ணப்பட்டார். தான் அன்று டிவி. இல் பார்த்த உலக கால் பந்து போட்டிகளை இன்று அந்த ஆத்துமா நரக பாதாளத்தில் கிடந்து சபித்து சாபம் போட்டுக் கொண்டு கிடக்கும். காலம் கடந்த பின்

இடும் சாபத்தால் யாது பயன்? உயிரோடு இருக்கும் போதே சாபமிட்டு ஜீவன் தப்ப டி. வி. பெட்டியிலிருந்து ஓட்டம் பிடித்திருக்க வேண்டுமே! இப்பொழுது வெள்ளம் அணையை கடந்துவிட்டதே! குதிரை தனது லாயத்திலிருந்து ஓடிப்போய்விட்டதே! ஐயகோ, முடிவில்லாத நித்திய முத்திரை குத்தப்பட்டாயிற்றே!

எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் (லூக் 21 36)

கிறிஸ்தவ மக்கள் உணர்வில்லாதவர்களாய் வாழ்வதை நாம் காண்கின்றோம். "மாடு தன் எஜமானனையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும், இஸ்ரவேலோ அறிவில்லாமலும், என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது" (ஏசா 1 : 3) என்றார் நம் தேவன். கண்களை நிரந்தரமாக இந்த உலகத்தில் மூடினால் காலக்கடிகாரமில்லாத முடிவில்லா நித்தியத்தில் கண் திறக்க வேண்டுமே! மனந்திரும்பாத, நஷ்டப்பட்ட பாவியாக நான் எனது கண்களை நித்தியத்தில் திறந்தால் எனது நிலை என்ன என்பதை குறித்து துளிதானும் கவலையில்லாமல் மக்கள் மிகுந்தத இறுமாப்பாய் வாழ்கின்றனர்.

தனி ஜெபமோ, குடும்ப ஜெபமோ எதுவுமே கிடையாது. தேவனுடைய வேதபுத்தகம் அவர்களுக்கு மனமகிழ்ச்சியை அளிப்பதில்லை. ஆண்டவர் இயேசுவோடு தனித்து சில நிமிட நேரத்தை கூட அவர்களால் செலவிட முடியாது. ஆண்டவர் இயேசுவுக்கும், அவர்களுக்கும் உள்ள இடைவெளி மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமாகும். "தேவனே நீர் என்னுடைய தேவன்" (சங் 63: 1) என்றும் "என் ராஜாவும் என் தேவனுமாகிய சேனைகளின் கர்த்தாவே" (சங் 84: 3) என்றும் "என்னுடைய" "என்" என்று இரட்சகர் இயேசுவை அவர்களால் உரிமை கொண்டாடி, சொந்தம் பாராட்டி பேச இயலாது. "என் ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்_____ அவரை வைத்த இடத்தை சொல்லும், நான் போய் அவரை எடுத்துக் கொள்ளுவேன்" (யோ 20 : 13 - 15) என்ற தனிப்பட்ட எல்லையற்ற தேவ அன்பு அவர்கள் கிறிஸ்தவ வாழ்வில் பொங்கி வழிவதில்லை. அந்த மக்களின் பாடல், ஜெபம், துதி, ஆராதனைகள் யாவும் ஆண்டவர் சொன்னது போல வாயிலும், உதட்டிலும் இருக்குமே தவிர இருதயத்தின் ஆழத்திலிருந்து

வருவதே இல்லை. (ஏசா 29 : 13) அவர்களுக்கும், ஆண்டவர் இயேசுவுக்கும் எந்த ஒரு சம்பந்தமுமே கிடையாது.

வாசிக்கும் தேவ ஜனமே, ஜாக்கிரதையாக இருந்து மனந்திரும்பு. உனக்கும், உன் ஆண்டவருக்கும் உள்ள பரலோக உறவு எப்படி உள்ளது? ஆண்டவருடைய பரிசுத்த பாதங்களில் நீ ஜெபத்தில் செலவிடும் மணி நேரங்கள் பக்தன் பாடியது போல "ஆ, இன்ப காலமல்லோ, ஜெபவேளை ஆனந்த காலமல்லோ" என்பதாக இருக்கின்றதா? கர்த்தருடைய வேதம் உனக்கு பரலோக மன்னாவாக உள்ளதா? அப்படி இல்லையெனில், கண்ணீரோடு தேவ சமூகத்துக்கு வந்து நீ உன்னை ஆராய்ந்து உன் ஆண்டவரோடு ஒப்புரவாகிக்கொள். "உங்கள் அரைகள் கட்டப் பட்டதாகவும், உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும், தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது உடனே அவருக்கு திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள்" (லூக் 12 : 35- 36)

உன்னுடைய ஆத்துமாவுக்கு நீயே உத்திரவாதி. உனது ஆத்துமத்தினிமித்தம் உனது மனைவியோ பிள்ளைகளோ, இன ஜனங்களோ தேவனுக்கு கணக்கு சொல்லி உன் ஆத்துமாவை விடுவிக்க இயலாது. தேவனுடைய நியாயாசனத்துக்கு முன்பாக நீ தனித்தே நின்று கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும். "கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய் சமாதானத்தோடே கர்த்தர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" (2 பேதுரு 3 : 14) என்ற பரிசுத்த அப்போஸ் தலனுடைய வார்த்தையின்படி சமாதானத்தோடு தேவனை சந்திக்க ஆயத்தமாவோம். அத்துடன் "மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்க பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்." (லூக் 21 : 36) என்ற தேவ குமாரனின் எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு அடி பணிந்து நமது மரணமோ அல்லது கர்த்தாவின் வருகையோ எது நம்மை முன்கூட்டியே சந்திப்பதாக இருந்தாலும் மிகுந்த மகிழ்ச்சியோடே அதை சந்தித்து ஆண்டவர் இயேசுவை அண்டிக் கொள்ள தேவன்தாமே உங்களுக்கும், எனக்கும் கிருபை செய்வாராக. ஆமென்.

MARKS OF A CHRISTIAN

1. If you prize Christ and His truth so as you will sell all and buy Him, and suffer for it.
2. If the love of Christ keep you back from sinning, more than the law, or fear of hell.
3. If you be humble, and deny your own will, wit, credit, ease, honour, the world and the vanity and glory of it.
4. Your profession must not be barren, and void of good works.
5. You must in all things aim at God's honour, you must eat, drink, sleep, buy, sell, sit, stand, speak, pray, read, and hear the word, with a heart-purpose that God may be honoured.
6. You must show yourself an enemy to sin, and reprove the works of darkness, such as drunkennes, swearing, and lying, albeit the company should hate you for so doing.
7. Keep in mind the truth of God, that you heard me teach, and have nothing to do with the corruptions and new guises entered into the house of God.
8. Make conscience of your calling, in covenants, in buying and selling.
9. Acquaint yourself with daily praying, commit all your ways and actions to God, by prayer, supplication, and thanksgiving, and count not much of being mocked, for Christ Jesus was mocked before you.

(SAMUEL RUTHERFORD)

இருளிலிருந்து தேவனுடைய ஆச்சரியமான ஒளிக்குள்

(ஒரு முகமதிய மனிதரின் அனுபவ சாட்சி)

1996 ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் நாள். அது ஒரு புதன்கிழமை. இஸ்லாமிய அராபிக் காலண்டரின்படி ஷாவால் மாதத்தின் 15ஆம் தேதி அது. முகமதியர்கள் அல்லாவிடமிருந்து ஒரு நெருக்கமான இணக்கத்தையோ அல்லது ஆழமான அனுபவத்தையோ எதிர்பார்க்கும் நாள் அதுவாகும். அன்றைய தினம் மாலை 6 மணியிலிருந்து நள்ளிரவு வரை தொடர்ச்சியாக நான் 6 மணி நேரம் தொழுகையையும், பம்பாய்க்கு அருகிலுள்ள மும்ப்ரா என்ற இடத்திலுள்ள மசூதிக்கு வந்தவர்களுக்கு பிரசங்கங்களையும் செய்து முடித்திருந்தேன். அதற்கு பின்னர் விடியற்காலம் 4 மணிக்கு அதிகாலை தொழுகையை நான் நடத்தவேண்டியதாக இருந்தமையால் அந்த மசூதியிலேயே நான் படுத்து தூங்கினேன். நான் ஒருக்காலும் எதிர்பார்த்திராத ஒன்று அன்றைய தினம் எனது வாழ்வில் நிகழ்ந்தது.

அந்த பரம தரிசனம்

நான் எனது நித்திரையில் ஆழ்ந்திருந்த சமயம் இரண்டு மனிதர்கள் என்னன்டை வந்து என்னை மென்மையான அன்பொழுக எழுப்பினார்கள். அவர்கள் என்னை அங்கிருந்து அழைத்துக் கொண்டு சென்று மசூதிக்கு அப்பாலுள்ள ஒரு பெரிய விஸ்தாரமான மண்டபத்துக்கு வழிநடத்தி சென்றனர். அப்படிப்பட்ட ஒரு விசாலமான மண்டபத்தை அதற்கு முன்போ அல்லது அதற்கு பின்போ நான் கண்டதே இல்லை. அந்த மண்டபத்தின் மத்திய பகுதியில் ஒரு சிறிய மேஜை போடப்பட்டிருந்தது. என்னை எனது தூக்கத்தில் இருந்து எழுப்பிய அந்த இரண்டு மனிதர்களும் என்னை அந்த மேஜைக்கு அருகாமைக்கு அழைத்துச் சென்று இவ்விதமாக என்னிடம் கூறினார்கள். "உனக்கென்று நிர்ணயிக்கப்பட்ட இடம் இதுவேதான். நீ இங்கே நின்று கொண்டிரு" என்று சொல்லி என்னை அங்கேயே விட்டுவிட்டு சென்றுவிட்டனர். அந்த ஆச்சரியமான பெரிய மண்டபத்தில் என்ன நடக்கப் போகின்றதோ என்ற எதிர்பார்ப்பில் நான் நின்று கொண்டிருந்தேன். திடீரென ஒரு

பிரமாண்டமான திரை எனக்கு முன்பாக தொங்கிக் கொண்டிருப்பதை நான் பார்த்துக் கொண்டிருந்தபோது அது கொஞ்சம் கொஞ்சமாக அங்கிருந்து விலகத் தொடங்கிற்று. திரை முற்றுமாக விலகி மறையவும் அந்த பெரிய மண்டபம் பரலோகத்தின் மாபிரகாசமான வெளிச்சத்தால் முழுமையாக நிறைந்தது. அப்படிப்பட்ட ஒரு ஜெகஜோதியான ஒளிப் பிரளயம் இருப்பதை நான் அன்றுதான் கண்டேன். அந்த பரலோக தேவ ஒளி பிரளய பிரவாகத்தில் நான் முற்றும் மூழ்கித்திளைத்தேன்.

அந்த இன்பமான மனமகிழ்வின் நேரத்தில் பிழையோ, கொச்சையோ இல்லாத சுத்தமான உருது மொழியில் "நான் உன்னை நேசிக்கின்றேன். நீ என்னிடம் வா. நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் உன்னை தெரிந்து கொண்டேன். மனந்திரும்பு, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது. நீ என்னை பின்பற்றினால் பரலோகத்தில் ஒரு பெரும் பொக்கிஷம் உனக்கு உண்டு" என்று ஒரு குரல் தொனித்தது. அந்த பரலோக சத்தத்தை கேட்ட நான் பெரும் அதிர்ச்சியில் வாயிலிருந்து ஒரு வார்த்தை கூட பேச இயலாத நிலைமையில் ஸ்தம்பித்து நின்றேன். சிறிது நேர இடைவெளிக்கு பின்னர் நான் என்னை சுதாகரித்துக் கொண்டு "நீங்கள் யார்?" என்று கேட்டேன். அதற்கு மாறுத்தரமாக "நானே உன் மேசியா" என்று பதிலுரைத்தது.

அதின் பின்னர் ஒரு கோப்பை தண்ணீர் எனக்கு முன்பாக இருந்த மேஜையின் மேல் வைக்கப்பட்டிருப்பதை நான் கண்டேன். "இந்த கோப்பையின் தண்ணீரை நீ பானம் பண்ணு" என்று ஒரு குரல் கேட்டது. நான் அந்த தண்ணீரை குடித்தபோது எனது உள்ளத்திலிருந்து ஒரு பெரிய பாரம் நீங்கிப்போவதையும், உலகம் தரக்கூடாததும், மகிமையால் நிறைந்ததுமான தேவ சமாதானம் என் இருதயத்தை ஆட்கொண்டது. இறுதியாக "உலகம் முழுமைக்கும் எனது வார்த்தைகளை பிரசங்கம் பண்ணு" என்று ஒரு சப்தம் தொனித்தது. அந்த விசாலமான மண்டபத்தில் நடைபெற்ற பரலோக காட்சியின் அனுபவம் அத்தனை அழகாகவும் என்னால் மறக்க முடியாததுமான ஒரு மாட்சியின் பொங்கிவழியும் அனுபவமாகும். அங்கு நிகழ்ந்த காரியத்தை அப்போஸ்தலனாகிய பரிசுத்த பேதுருவுடைய பாஷையில் நான் சொல்லவேண்டுமானால் "சொல்லி முடியாததும், மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோசத்தை" அன்று நான் பெற்று களிகூர்ந்தேன்.

என்னுடைய பெயர் சையத் முகமது பிலால் என்பதாகும். 1946 ஆம் ஆண்டு வட இந்திய பட்டணமான லக்னோ என்ற இடத்தில் சன்னி பிரிவை சேர்ந்த முகமதிய குடும்பத்தில் நான் பிறந்தேன். உருது மற்றும் அராபிக் மொழிகளில் நான் புலமை பெற்றிருந்ததுடன் பெர்சிய மொழியிலும் எனக்கு நல்ல தேர்ச்சி இருந்தது. குரானில் நான் சிறப்பாக பாண்டித்தியம் பெற்றிருந்தமையால் மசூதிகளில் தொழுகையை குறித்து போதித்தேன். இஸ்லாத்தில் நான் 6 புத்தகங்கள் எழுதியுள்ளேன். நான் மூன்று வருடங்கள் மௌலவியாகவும், ஒரு வருடம் "ஆலிப்" ஆகவும் , அடுத்த ஒரு வருடம் "காமீல்" ஆகவும் "ஆலிம் "ஆக 5 வருடங்களும், "ஃபாசில்" ஆக ஒரு ஆண்டும், "மஃப்தி" ஆக இரண்டு வருடங்களும் இருந்தேன். பம்பாயிலுள்ள மூன்று மசூதிகளில் 16 வருட காலமாக இமாமாக நான் பணி செய்தேன். 3 தடவைகள் புனித ஹஜ் யாத்திரை போய் வந்தேன். எனது இஸ்லாமிய தீவிர பற்று மற்றும் புலமைக்காக சவூதி அரேபிய அரசாங்கம் எனக்கு கருப்பு தலைப்பாகையையும், அங்கியையும் (ஜஃபி, பகாடா) அளித்தது. நான் திருமணமாகி 5 குழந்தைகளுக்கு தந்தையாவேன்.

என்னில் காணப்பட்ட குழப்பம்

அந்த இரவு காலத்தில் எனக்கு கிடைத்த தரிசனம் என்னை ஒரு குழப்பமான நிலைக்கு தள்ளி வைத்திருந்தது. நான் கண்ட தரிசனத்தின் பொருள் என்ன என்று நான் எனக்குள்ளாக தொடர்ந்து கேள்வி எழுப்பிக் கொண்டே இருந்தேன். அந்த இரவு காலத்தில் நான் அந்த தரிசனம் காணும்போது என்னோடு கூட மசூதியில் இருந்த பலருக்கும் நான் பார்த்ததும், கேட்டதுமான காரியங்கள் எதுவும் தெரியாது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை குறித்து நான் அறிந்திருந்ததெல்லாம் அவர் ஒரு தீர்க்கதரிசி என்பது மாத்திரமே. குரானில் அவர் "ருகுல்லா" அல்லது அல்லாவின் ஆவி என்று அழைக்கப்படுகின்றார். ஆச்சரியத்துக்குரிய காரியம் என்னவெனில், நான் கண்ட எனது தரிசனம் நான் எனது முழுமையான சுயநினைவோடு பார்த்த ஒரு தரிசனமாகும். ஏதோ ஒரு கற்பனை உலகிலோ அல்லது ஒரு மயக்கமான நிலையிலோ நான் அந்த தரிசனம் காணவில்லை. இந்த தரிசனத்துக்குப் பின்னர் நான் எழுந்து மெதுவாக எனது மசூதிக்குள்ளாகவே என்னில் ஆழமாக வேர்க்கொண்டிருந்த விசுவாசத்தோடு ஆனால் நிறைய சந்தேகங்களோடு

நடந்து கொண்டிருந்தேன். திடீரென எனக்குள்ளாக ஒரு வித்தியாசமான அனுபவத்தை உணரவே அந்த நாளின் அதிகாலை தொழுகையை என்னால் நடத்தக்கூடாமல் எனது உதவி ஆளை (மௌசின்) அந்த தொழுகையை நடத்தும்படியாக கேட்டுக்கொண்டேன். நான் எனது வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்று நான் கண்ட தரிசனத்தின் பொருளை எனக்கு விளக்கும்படியாக தேவனுக்கு முன்பாக என் உள்ளத்தை உடைத்து ஊற்றி கதறி அழுதேன்.

நான் அந்த பெரிய மண்டபத்தில் கண்ட மாட்சியான தரிசனத்தோடு காரியம் முற்றுப் பெறவில்லை. அதன் பின்னரும் அநேக தரிசனங்களை நான் தொடர்ந்து கண்டு வந்தேன். அந்த தரிசனங்கள் யாவிலும் "மேசியா" மற்றும் "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கின்றேன்" என்ற அசரீரி வார்த்தைகள் மிக தெளிவாக இடம் பெற்றன. நான் தரிசனங்களை கண்டு அக்காட்சிகளை மறந்தபோதினும் சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் நான் ஆண்டவராகிய இயேசுவை எனது இருதயத்தில் எனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். என்னை மிகவும் குழப்பமுற பண்ணிய கேள்வி என்னவெனில் "நான் எவ்விதமாக கிறிஸ்தவனாக மாற்றம் பெறுவது?" என்பதுதான். காரணம், தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளுபவர்கள் கிறிஸ்தவ மார்க்கத்துக்கு இழிவை கொண்டு வரும் விதத்தில் ஜீவித்து வந்ததுதான். நான் கிறிஸ்தவர்களை குறித்து எப்பொழுதும் கொண்டிருந்த அபிப்பிராயம் யாதெனில் அவர்கள் மதுப்பழக்கத்துக்கும், நடனத்துக்கும் தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள் என்பதே. அத்துடன் புதிதாக கிறிஸ்தவ மார்க்கத்துக்கு வருபவர்களை பழைய கிறிஸ்தவர்கள் பன்றி மாமிசம் சாப்பிட வலுக்கட்டாயமாக வற்புறுத்துவார்கள் என்பதையும் நான் கேள்விப்பட்டு வைத்திருந்தேன். பன்றி மாமிசம் சாப்பிடுவதை இஸ்லாம் வன்மையாக தடை செய்து வைத்துள்ளது.

நான் கண்ட எனது தரிசனங்களை குறித்து எனது மனைவியிடத்திலும், எனது இஸ்லாமிய பண்டிதர்களிடத்திலும், எனது நண்பர்களிடத்திலும் நான் பேசினேன். அதைக் கேட்ட அவர்கள் நான் சாத்தானுடைய பிடியில் அகப்பட்டிருப்பதாகவும், நான் கண்ட எனது சொப்பனங்கள் எல்லாம் பிசாசினுடையவைகள் என்றும் கூறினார்கள். எனது மனைவியே எனக்கு பைத்திய கோளாறு இருப்பதாகவும், ஒரு நல்ல மனநோய் வைத்திய நிபுணரை அணுகி மருத்துவம் பெற்றுக்

கொள்ளுமாறும் மிகுந்த கவலையோடும், குடும்பத்தின் கடமை உணர்வோடும் சொன்னாள். எனது தரிசனங்களை குறித்து எனது இஸ்லாமிய மக்கள் எவருக்காவது ஒருவருக்கு கூறி அவரை சம்மதிக்கப் பண்ணுவது என்பது கிஞ்சித்தும் எனக்கு முடியாத காரியமாக இருந்தது. எனது தரிசனங்களை சொல்லக்கேட்ட எனது இஸ்லாமிய ஜனங்கள் என்னை இழிவாக பேசி என்னை பரிகசிக்கத் தொடங்கினர். நான் அவர்களுக்கு கேலிப் பொருளானேன்.

இரட்சிப்பு

இந்த சமயம் ஒரு நண்பனின் உதவியால் மறுபடியும் பிறந்த ஒரு கிறிஸ்தவ சகோதரனோடு எனக்கு தொடர்பு கிடைத்தது. அவரை சந்தித்தது முதல் கிறிஸ்தவர்களை குறித்து நான் கொண்டிருந்த எனது தவறான அபிப்பிராயங்கள் எல்லாம் விலகிச் சென்றன. கிறிஸ்தவனாவது என்பது ஒருவன் வானத்தையும், பூமியையும் படைத்த சர்வ வல்ல தேவனுடன் நேரிடையாக பேசி அவருடன் தனிப்பட்ட விதத்தில் பரலோக உறவுகொண்டு இணைந்து வாழ்வதே தவிர வெறுமையான மதச்சார்பான சடங்குகளையும், ஆச்சாரங்களையும் கைக்கொண்டு நடப்பது அல்ல என்பதை நான் திட்டமாக கண்டு கொண்டேன்.

முதல் முதலாவதாக நான் எனது வேதாகமத்தை பெற்றுக் கொண்டபோது நான் அடைந்த ஆனந்தத்துக்கு எல்லையே கிடையாது. உடன்தானே நான் அதை ஆசை ஆவலோடு வாசித்தேன் என்று சொல்லுவதைவிட நான் அதை அடித்து முழுவதுமாக புசித்து ஆரவாரித்தேன் என்றுதான் எனது பாஷையில் சொல்ல வேண்டும். அந்த அற்புதமான தேவனுடைய வேத புத்தகம் நான் கண்ட எனது பல தரிசனங்களுக்கும் எனது சந்தேகங்களுக்கும் சலனமில்லாத தெளிவான விடைகளை எனக்குக் கொடுத்தது.

இதைத் தொடர்ந்து நான் உடனடியாக மசூதியிலிருந்து எனது இமாம் பணியை ராஜிநாமா செய்துவிட்டு கர்த்தராகிய இயேசு இரட்சகர் மேலுள்ள எனது விசுவாசத்தை எனது இஸ்லாமிய சமூகத்துக்கு வெளிப்படுத்த முடிவெடுத்தேன். எனது தீர்மானத்தின் விபரம் காட்டுத்தீ போல எனது முகமதிய நண்பர்களிடத்திலும், இனஜன பெந்துக்

களிடமும் வேகமாக பரவிற்று. இதன் காரணமாக அவர்கள் எல்லாரும் என்னை வெறுத்து ஒதுக்கி என்னை துன்புறுத்த ஆரம்பித்தனர். எனது மசூதியின் ஆளுகை கமிட்டி நிர்வாகிகள் என்மேல் கடுங்கோபம் கொண்டனர். அவர்களுடைய பார்வையில் நாஸ்தீகனாகிப் போன என்னை கொலைசெய்ய சதித்திட்டம் தீட்டினார்கள். எனக்கு அவர்கள் கொலைத் தீர்ப்பு அளித்தனர் (ஃபட்வா). ஒரு நாள் இரவு கொலைகாரர்கள் பயங்கரமான ஆயுதங்கள், கத்திகள், கம்புகளோடு எனது வீட்டை சூழ்ந்து கொண்டனர். நான் அப்பொழுதுதான் ஆராதிக்கத் தொடங்கியிருந்த எனது சர்வவல்ல தேவன் அந்த கொலை பாதகர்களிடமிருந்து நான் ஜீவன் தப்பி ஓடிவிட கிருபை செய்தார். எனது மனைவி மற்றும் எனது ஐந்து பிள்ளைகளுடன் நாங்கள் அப்பொழுது உடுத்தியிருந்த உடைகளைத் தவிர வேறொன்றையும் எடுத்துக் கொள்ளாமல் எங்கள் வீட்டைவிட்டு நாங்கள் ஓடினோம். அந்த வீட்டுக்கு நாங்கள் அதற்கப்பால் திரும்பிச் செல்லவே இல்லை. எங்கள் வீடு கொலைகாரர்களால் முற்றும் சூறையாடப்பட்டது. எங்கள் முழு உடமைகளையும் நாங்கள் இழந்தோம்.

உலக உடமைகளை நாங்கள் இழந்துவிட்டிருந்தபோதினும் நாங்கள் ஆதாயம் பண்ணியவைகளும் உண்டு. அந்த ஆதாயத்தை உலகப் பிரகாரமான அளவுகோலால் அளவிடமுடியாது. உலகப் பொருட்களுடன் அதை ஒப்பிடவும், சம்மந்தப்படுத்தவும் கூடாது. அதில் முதலாவது நான் தேவனுடைய இரட்சண்யத்தை பெற்றுக் கொண்டதுதான். அடுத்தபடியாக நித்திய ஜீவனுக்கான பரலோக நம்பிக்கையை நான் பெற்றுக்கொண்டேன். தேவன் எனக்கு உண்மையுள்ளவராக இருந்து தமது ஜீவ பாதையில் என்னை வழி நடத்தி வருகின்றார். இப்பொழுது நான் எனது முகமதிய சகோதரர்களுக்கே ஆண்டவராகிய இயேசுவின் இரட்சிப்பை கூறி அறிவித்து வருகின்றேன். எனது பிள்ளைகள் 5 பேரும் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுவிட்டனர். ஆனால் எனது மனைவி அந்தக் காரியத்தை செய்ய மிகவும் தயக்கம் காண்பித்து வருகின்றாள். அவள் இன்னும் முஸ்லீம் பெண்ணாகவே இருந்து வருகின்றாள்.

ஒரு முகமதியனாக நான் இருந்தமையால் கர்த்தராகிய இயேசுவைக் குறித்து குரானில் எழுதப்பட்டுள்ள வார்த்தைகள் பலத்த சந்தேகங்களை எனக்குள் எழுப்பி என்னை வெகுவாக குழம்பிக்

கொண்டிருந்தன. ஆனால். நான் ஆண்டவராகிய இயேசுவை எனது ஆத்தும மணவாளனாக ஏற்றுக்கொண்டு அவருக்கு நான் அடிமையானபோது அந்த சந்தேகங்கள் எல்லாம் பகலவனை கண்ட பனிபோல முற்றும் விலகி மறைந்தது. பரிசுத்த வேதாகமம் தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தைகள் என்பதை இப்பொழுது நான் முழு நிச்சயத்தோடு நம்புகின்றேன்.

(சையத் முகமது பிலால்)

(மேலே கண்ட சாட்சி பம்பாயிலிருந்து வெளியாகும் "ஹார்வெஸ்ட் டைம்ஸ்" என்ற கிறிஸ்தவ ஆங்கில பத்திரிக்கையிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டதாகும். இந்த சாட்சி சம்மந்தமாக மேலும் விபரம் பெற விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

HARVEST TIMES
Udyog Bhavan, 250 - D, Worli,
Bombay - 400 025
India



You can as well hear without ears, and live without food, and fight without hands, as you are able to live without prayer. A little grace will yield a man a heaven hereafter, but a great deal of grace will yield us a heaven here.

Grace and glory differ very little, the one is the seed, the other is the flower, grace is glory militant, glory is grace triumphant.

Cold prayers always freeze before they reach heaven.

Oh, then, be ashamed, christians, the worldlings are more studious to make sure of pebbles than you are to make sure of pearls.

They usually thrive best who meditate most. You may read much and hear much, yet without meditation you will never be excellent, you will never be eminent Christians.

Every temptation proves a strong alarm to prayer. When Paul was in the school of temptation, he prayed thrice, that is, often (2 Cor. 12 : 8,9)

(THOMAS BROOKS)

பரதேசியின் மோட்ச பிரயாணம் - 17

பிரயாணிகள் திரவியகிரி சேருதல்

அப்பால் நான் என் சொப்பனத்தில் கண்டது என்னவென்றால், கிறிஸ்தியானும், திடநம்பிக்கையும் எட்டி நடந்து ஒரு மைதானத்தில் சேர்ந்தார்கள். அதற்கு **முசிப்பாற்றி** (இது சபை சமாதானத்தோடிருக்கும் காலத்தை குறிக்கிறது) என்று பெயர் வழங்கப்பட்டது. அங்கே வெகு சந்தோஷமாய் வழிநடந்து போனார்கள். அந்த வனம் மகா சுருக்கமானதாய் இருந்ததால் அவர்கள் சீக்கிரமாய் அதைக் கடந்து விட்டார்கள். அந்த மைதானத்தின் முடிவில் ஒரு பரம்பு இருந்தது. அதற்கு **திரவியகிரி** என்று பெயர். (திரவியகிரி என்பது லோக ஆதாயத்தை குறிக்கிறது. பண ஆசையினால் உண்டாகும் நஷ்டம் இன்னதென்று (1 தீமோ 6 : 10) ல் சொல்லப்பட்டிருக்கின்றது) திரவியகிரியிலே ஒரு வெள்ளிச்சுரங்கம் இருந்தது. அதின் சிறப்பைப் பார்க்கும்படியாக ஆசைகொண்டு, அவ்வழியாய் முன்னே போன பலர், சுரங்கத்தின் விளிம்புமட்டும் போனதில், அதன் கீழுள்ள மண் எல்லாம் குடைந்து போடப்பட்டதால் இடிந்து விழுந்து அவர்களில் சிலர் மாண்டார்கள். சிலர் கால், கை ஒடிந்து பழைய சீருக்கு வராமல் சாகுமட்டும் முடவராய் போய்விட்டார்கள்.

அந்தப் பாதைக்குச் சற்று துரத்தில் வெள்ளிச்சுரங்கத்திற்கு எதிராக பிரபுவைப் போல் காணப்பட்ட **தேமாஸ்** என்ற ஒரு மனிதன் பிரயாணிகள் வெள்ளிச் சுரங்கத்தை வந்து பார்க்கும்படியாக கூப்பிடுகிறதற்கு நின்று கொண்டு இருந்ததை நான் என் சொப்பனத்தில் கண்டேன். (தேமாஸ் என்பவன் பவுல் அப்போஸ்தலனோடு சில காலம் தேவ ஊழியம் செய்து வந்து அப்புறம் லோக ஆதாயத்தை நாடி அதை விட்டுவிட்டான். இந்தக் காலத்தில் அநேகர் சர்க்கார் உத்தியோகத்தையும் அதின் சம்பளத்தையும் நாடி சுவிசேஷ ஊழியங்களுக்கடுத்த வேலைகளை விட்டுவிடுகிறார்கள். இப்படிச் செய்தவர்கள் தாங்கள் மாற்றிக் கொண்ட உத்தியோகம் மகா நிர்ப்பந்தமானது என்று கடைசியாக உணருவார்கள்) தேமாஸ் கிறிஸ்தியானையும், அவன் கூட்டாளியையும் கண்டவுடனே, ஏகோ-கோ-ஓகோ-வாருங்கோ-வந்து பாருங்கோ! அதிசயம் காட்டுவேன் திரும்புங்கோ என்று சத்தமிட்டுக் கூப்பிட்டான்.

கிறிஸ்தியான் :- அப்படி வழியை விட்டுத் திரும்பி வந்து பார்க்கும்படியான அதிசயம் என்ன இருக்கிறது?

தேமாஸ் :- இங்கே ஒரு வெள்ளிச்சுரங்கம், சுத்த வெள்ளிச் சுரங்கம் இருக்கிறது. அநேகர் புதையல் எடுக்கும்படி தோண்டுசிறார்கள். நீங்களும் வந்து கொஞ்சம் கஷ்டப்பட்டுத் தோண்டினால் கோடீஸ்வரர் ஆகிவிடுவீர்கள் என்றான்.

திடநம்பிக்கை :- அப்படியானால் போய் பார்ப்போமே என்று திடநம்பிக்கை சொன்னான்.

கிறி :- நான் வரமாட்டேன். இந்த இடத்தை குறித்து நான் முன்னமே கேள்விப்பட்டிருக்கிறேன். அங்கே மாண்டவர்களுக்கு கணக்கில்லை. அதுவும் அல்லாமல் அந்தப் புதையலைத் தேடிப் போகிறவர்களுக்கு அதுவே கண்ணியாய் இருக்கிறது. ஏனெனில் அவர்கள் பிரயாணத்துக்கு அது மெத்தத் தடையாய் இருக்கிறது என்று சொன்னான். அப்புறம் கிறிஸ்தியான் தேமாசைக் கூப்பிட்டு; அந்த இடம் மோசமானதல்லவா? இது அநேக பிரயாணிகளை மோட்சம் செல்லாதபடி தடைசெய்து போட்டதல்லவா? என்று சொன்னான் *(ஓசியா 4 : 16-19)*

தேமா:- அப்பொழுது தேமாஸ் - கவலையீனமாய் இருக்கிறவர்களுக்குத் தவிர, மற்றவர்களுக்கு அது அவ்வளவு மோசமானது அல்லவென்று மகா சத்தத்தோடு சொன்னான்.

கிறி: - கிறிஸ்தியான் திடநம்பிக்கையைப் பார்த்து - நாம் நமது வழியே போவோமாக, அங்கே ஒரு அடி முதலாய் எடுத்து வைக்க வேண்டாம் என்று சொன்னான்.

திடநம்பி: - உபாயி இவ்விடம் வரும்போது, தேமாஸ் நம்மைக் கூப்பிட்டது போல அவனையும் கூப்பிடுவது மெய்யானால், அவன் போய் அதை பாராமல் இருக்க மாட்டான் என்று நான் சத்தியம் செய்யக் கூடும்.

கிறி :- அதற்குச் சந்தேகமில்லை. அவன் கருத்து அந்த வழியாக அவனைக் கொண்டுபோகும் என்பது நிஜம். அங்கேயே அவன் சாவான்

என்பது முக்காலே மூன்று வீசம் நிஜமே நிஜம் என்று நாம் நிச்சயமாக கூறலாம்.

தேமா: - அப்புறம் தேமாஸ் - நீங்கள் வந்து பார்த்துவிட்டுப் போகமாட்டீர்களாக்கும் என்று மறுபடியும் கேட்டான்.

கிறி: - அப்போது கிறிஸ்தியான், நீ செம்மை மார்க்கமாகிய இவ்வழிக்கு ஆண்டவரின் விரோதியாயிருக்கிறாய். அவருடைய நியாயாதிபதிகளில் ஒருவரால் நீ முன்னமே ஆக்கினைத் தீர்ப்படைந்து இருக்கின்றாய் (2 தீமோ 4 : 10) எங்களையும் அந்த அழிவுக்கு வரும்படி ஏன் அழைக்கின்றாய்? அதுவும் அன்றி நாங்கள் வழியைவிட்டு அக்கம்பக்கம் விலகினால், ஆண்டவராகிய ராஜா அதைக் கேள்விப்படுவார். அங்கே அவருக்கு முன்பாகத் தைரியமாய் நிற்கக்கூடிய நாங்கள், அவரால் வெட்கத்துக்கு உட்படவேண்டியதாய் இருக்கும் என்று தெளிவாய் சொன்னான்.

தேமா:- அதற்கு தேமாஸ் - நானும் உங்களோடு சேர்ந்த ஒரு மோட்ச பிரயாணிதான். சற்றே தாமதித்தால் நானும் உங்களுடன் கூடிவருவேன் என்று சொன்னான்.

கிறி :- அப்பொழுது கிறிஸ்தியான் - உன் பெயரென்ன? தேமாஸ் தானே.

தேமா: - ஆம், என் பெயர் தேமாஸ்தான். நான் ஆபிரகாமின் புத்திரனுமாயிருக்கின்றேன் என்று கூறினான்.

கிறி: - உன்னை அறிவேன், அறிவேன். யூதாஸ் உன் தகப்பன். கேயாஸ் உன் பாட்டன் அல்லவா? அவர்களுடைய வழிகளை நீ பின்பற்றியிருக்கிறாய். இப்பொழுது நீ செய்கிற உபாய தந்திரங்கள் பிசாசுக்கடுத்தவைகள். உன் தகப்பன் குரு துரோகத்தால் தூக்கப்பட்டான். நீயும் அதற்கே பாத்திரனாயிருக்கின்றாய். (2 இரா 5 :20-27) நாங்கள் பரலோக ராஜ தரிசனை பெறும்போது நீ செய்த மோசத்தை குறித்து திட்டமாய் சொல்லுவோம் என்று அறிந்து கொள் என்று சொல்லி விட்டு தங்கள் வழியே போய்விட்டார்கள்.

இதற்குள்ளாக உபாயியும், அவனது தோழரும் வருகிறது தூரத்தில் தெரிந்தது. அவர்களை தேமாஸ் கூப்பிட்டான். முதல் சத்தம் கேட்டவுடனே அவர்கள் தேமாசண்டை போனார்கள். அவர்கள் சுரங்கத்தின் கரையோரத்தில் போனவுடனே அது இடிந்து விழுந்துதான் மாண்டார்களோ அல்லது உள்ளே போய் வெள்ளிச்சுரங்கத்தின் புதையலைத் தான் தோண்டினார்களோ, அல்லது அதின் அடியிலிருந்து எழும்புகிற திரண்ட புகையினாலேதான் திக்குமுக்காடி செத்தார்களோ என்பதைப்பற்றி எனக்கு ஒன்றும் தீர்மானமாய் தெரியாது. ஆனால் ஒன்றை மாத்திரம் கவனித்தேன். அவர்கள் மறுபடியும் வழியில் தலைகாட்டவே இல்லை. அப்புறம் கிறிஸ்தியான் :-

உபாயி என்பவனுமே
வெள்ளி நேசத் தேமாவோட
பங்குபெறப் புதையலில்
ஒத்து இணங்கிப் போனார்கள்,
தேமாவும் நின்று கூப்பிட்டான்
அவனும் விரைந்தோடினான்
அதுவே முடிவாயிற்று
அப்பாலே செல்லார் முக்திக்கு

என்று பாடினான்.

இப்பொழுது நான் என் சொப்பனத்தில் கண்டது என்னவென்றால்; இந்த மைதானத்திற்கு அப்பால் ராஜவீதியோரமாய் நின்ற ஒரு பழைய ஞாபகச் சிலையண்டை பிரயாணிகள் இருவரும் வந்து சேர்ந்தார்கள். அந்தச் சிலையின் உருவம் அவர்களுக்கு மகா விந்தையாகத் தோன்றினதால் அதைக் கண்டவுடன் இருவருக்கும் கலக்கம் உண்டாயிற்று. ஏனெனில் ஒரு ஸ்திரி ஸ்தம்ப ரூபமாய் மாறிப் போனது போல் அது தோற்றமளித்தது. ஆகையால் அவர்கள் அதன் ஓரம் நின்றுகொண்டு அதை ஏறிட்டுப் பார்த்து பிரமித்து, அதன் தாற்பரியம் என்னவென்று அறிந்துகொள்ளக்கூடாமல் இருந்தார்கள். கடைசியாக அதின் நெற்றியில், கை பழகாத ஒருவனால் எழுதப்பட்டதுபோல் காணப்பட்ட சில எழுத்துக்களைத் திடநம்பிக்கை என்பவன் கண்டான். அவன் கல்லாதவனாய் இருந்தபடியால். படித்து தேறின வித்துவானாய் இருந்த கிறிஸ்தியானை கூப்பிட்டு, எவனாவது அதன் கருத்தைக் கண்டு

பிடிப்பானா என்று கேட்டான். கிறிஸ்தியான் வந்து அந்த எழுத்துக்களை ஒவ்வொன்றாய்க் கூட்டிப் பார்த்து: "லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்" என்று எழுதப்பட்டு இருக்கிறதாக வாசித்தான். உடனே அவர்கள் இருவரும் ஓகோ, லோத்து சோதோமில் இருந்து துரத்தப்பட்டபோது, அவன் மனைவி பொருள் ஆசையினால் பின்னிட்டு திரும்பி உப்புத்தூண் ஆனாளே, அந்த உப்புத்தூண் இதுதான் என்று திட்டமாய் அறிந்து கொண்டார்கள். சடுதியாக காணப்பட்ட இந்த விந்தையான காட்சி பின்வரும் சம்பாஷனைக்கு ஆதாரமாயிற்று.

கிறிஸ்தியான்: - ஆ, என் சகோதரனே, இது காலத்துக்கு ஏற்ற சாட்சிதான். திரவியகிரியை பார்க்கும்படி தேமாஸ் நம்மை கூப்பிட்ட சமயத்துக்குத் தகுந்தாற்போல இங்கே இது காணப்படுகின்றது. அவன் நம்மை விரும்பி அழைத்தபடிக்கும், என் சிநேகிதனே நீ போகவேண்டும் என்று விரும்பிக் கூப்பிட்டபடிக்கும் நாம் போயிருந்தது மெய்யானால், நமக்கு பின் வருகின்றவர்களுக்கு எச்சரிப்பு உண்டாக நாமும் இப்படியே நிறுத்தப்பட்டு இருப்போம் என்று நான் நன்றாய் அறிவேன் என்று சொன்னான்.

திடநம்பிக்கை :- நான் அத்தனை புத்தியீனனாய் இருந்ததை யிட்டு மிகவும் துக்கப்படுகிறேன். லோத்தின் மனைவியைப் போல நான் சபிக்கப்பட்ட ஒரு ஸ்தம்பம் ஆகாமல் போனதை நினைத்து அதிசயப்படுகிறேன். ஏனெனில், அவள் பாவத்துக்கும் என் பாவத்துக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? அவள் பின்னிட்டு மாத்திரம் திரும்பினாள். நானோ போய் பார்க்கும்படி ஆசைப்பட்டேன். தேவ கிருபைக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. இப்படிப்பட்ட ஆசை என் மனதில் வந்ததால் நானே வெட்கப்படுவேனாக என்று சொல்லி விசனப்பட்டாள்.

கிறி :- அதற்கு கிறிஸ்தியான்: - இனி நாம் எச்சரிக்கையாய் நடந்து கொள்ளத்தக்கதாக இப்போது பார்க்கிறவைகளை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுவோமாக. இந்த ஸ்திரீ ஒரு தண்டனைக்குத் தப்பினாள், மறு தண்டனைக்குள் அகப்பட்டாள். ஏனெனில் சோதோமின் அழிவுக்குத் தப்பின இவள் நாம் பார்க்கிறபடி இங்கே உப்புத்தூணாய் நிற்கிறாள் என்று சொன்னான்.

திடநம்பி :- மெய், இவள் நமக்கு எச்சரிப்பும், அடையாளமுமாய் இருக்கலாம். நாம் அவளுடைய பாவத்துக்கு விலகிக் கொள்ளும்படிக்கு எச்சரிப்பாகவும், அந்த எச்சரிப்பை உணர்ந்து கொள்ளாதவர்களுக்கு வரும் தண்டனைக்கு அடையாளமாகவும் அவள் நிறுத்தப்பட்டிருக்கிறாள். அப்படியே கோராகு, தாத்தான், அபிராம் என்பவர்களும், அவர்களுடைய பாவத்திலே அதமான 250 பேரும் மற்றவர்களுக்கு எச்சரிப்பாய் இருக்கும்படியான அடையாளமாய் அல்லது திருஷ்டாந்தமாய் இருக்கிறார்கள். ஆனால் எல்லாவற்றிலும் என்னை பிரமிக்கச் செய்கிற ஒரு விசயம் இருக்கிறது. அது என்னவென்றால், இந்த ஸ்திரீ தான் திரும்பிப்பார்த்த இடத்துக்கு அப்பால் ஒரு அடி முதலாய் எடுத்து வைக்கவில்லையே, அந்த இடத்திலேயே உப்புத்தூணாய் போனாளே! அப்படி இருக்க இந்த தேமாசும் அவனுடைய தோழரும் வெள்ளிச்சுரங்கத்தை பார்க்கும்படி இவ்வளவு தைரியத்தோடு நாடிப்போகிறார்களே, அதிலும் விசேஷமாக, அவள் யாவருக்கும் திருஷ்டாந்தமாக உப்புத் தூணான இந்த ஸ்தம்பம் அவர்கள் கண் எட்டிப் பார்க்கும் தூரத்துக்குள்ளேதான் இருக்கிறது. அவர்கள் சற்றே தங்கள் தலையை நிமிர்த்திப் பார்த்தார்களானால் இதைக் கண்டு கொள்ளக் கூடுமே, இதுதான் என் மனதுக்கு பலத்த யோசனையாய் இருக்கிறது.

கிறி: - அது அதிசயப்படத்தக்க ஒரு காரியமாய்த்தான் இருக்கிறது. இந்தக் காரியத்தில் அவர்கள் இருதயம் முற்றிலும் சீர்கெட்டுப் போயிற்றென்றே வெளியாகிறது. இவர்களை யாருக்கு ஒப்பிடலாம் என்றால் நியாயாதிபதிக்கு முன்பாக நின்று முடிச்சு அவிழ்க்கிற திருடருக்கும், கழுமரத்தின் கீழ் நின்று கத்தரிக்கோலால் பணப்பைகளைக் கத்தரிக்கிற கள்ளருக்கும்தான் ஒப்பிடவேண்டியது. சோதோம் பட்டணத்தார் பஞ்சமாபாவிகள் என்று காட்டும்படியாக அவர்களுடைய பாவம் கர்த்தருடைய சமூகத்தில் பெரிதாய் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது அவர் அவர்களுக்குப் பல கிருபைகளை செய்திருந்தும், அவருடைய முகத்துக்கு முன்பாக பாவஞ்செய்தார்கள். ஏனெனில் சோதோமின் பூமி முன் இருந்த ஏதேன் என்னும் சிங்காரத்தோப்புப் போல இருந்தது (ஆதி 13: 10-13) இதுவே தேவ கோபத்தை அவர்கள் மேல் அதிகரிக்கச் செய்து, கர்த்தருடைய அக்கினி வானத்தில் இருந்து வந்தால் எவ்வளவு அழிவை உண்டாக்கக்கூடுமோ அவ்வளவு பெரிய வாதைகள் அவர்கள் மேல் இறங்கிற்று. தேமாசும் அவன் கூட்டாளிகளும் தங்கள் கண்களுக்கு

முன்பாக எச்சரிப்புக்கென்று நாட்டப்பட்டிருக்கின்ற இவ்வகையான அடையாளங்களை எல்லாம் அசட்டை பண்ணி அவர்களைப் போல பாவஞ்செய்கின்றபடியால், இவை போலொத்த கடூரமான தண்டனைகளை அடையப் பாத்திரராயிருக்கிறார்கள் என்று திட்டமாகச் சொல்லலாம் என்று சொன்னான்.

திடநம்பி: - அதற்கு திடநம்பிக்கை - சந்தேகமில்லாமல் நீர் சத்தியத்தையே சொன்னீர் என்பது நிஜம். ஆனால் நீராவது, விசேஷமாக நானாவது இந்த திருஷ்டாந்தமாய் இராதது எவ்வளவு பெரிய இரக்கம்! இந்த ஞாபகசிலை நாம் தேவனை ஸ்தோத்தரிக்கவும், அவருக்கு அஞ்சி நடக்கவும், எப்பொழுதும் லோத்தின் மனைவியை நமக்கு நினைப்பூட்டவும் ஏதுவாய் இருக்கிறது என்று சொன்னான்.

பிரயாணிகள் தேவநதி சேருதல்

அப்புறம் நான் என் சொப்பனத்தில் கண்டது என்னவென்றால், பிரயாணிகள் இருவரும் தங்கள் வழியே நடந்து ஒரு இன்பமான ஆற்றண்டை வந்து சேர்ந்தார்கள். அந்த ஆறு தாவீது அரசனால் "தேவ நதி" என்றும் (சங் 65 : 9) யோவான் அப்போஸ்தலனால் "ஜீவ தண்ணீருள்ள நதி" என்றும் (வெளி 22 : 1) அழைக்கப்பட்டிருக்கின்றது. பிரயாணிகளின் பாதை அந்த ஆற்றங்கரை மேலே சென்றது. (ஜீவ தண்ணீருள்ள நதி : இது ஞான ஜீவனின் ஊற்றாகிய பரிசுத்த ஆவியைக் குறிக்கலாம். அதில் பானம்பண்ணினார்கள் என்பது, பரிசுத்தமான அன்பினாலும் சந்தோஷத்தினாலும் நிறைந்திருப்பதையும், இவ்வுலத்தின் கவலை களையும் வருத்தங்களையும் தாண்டியிருப்பதையும் உணர்த்துகிறது) கிறிஸ்தியானும் அவன் தோழனும் ஜீவ தண்ணீருள்ள நதிக்கு ஓரமாக நடக்கையில் அவர்களுக்கு உண்டான சந்தோசங்களுக்கு ஒரு அளவு இல்லை. அவர்கள் அந்த ஆற்றின் தண்ணீரைக் குடித்தார்கள். அதின் காரணமாக இளைத்த அவர்கள் ஆவி தழைத்துப் பலப்பட்டது. அதுவும் அல்லாமல் அந்த நதியின் இரு கரைகளிலும் பலவித கனிகளைக் கொடுக்கும் அநேக விருட்சங்கள் பச்சை பசேலென்று நின்று கொண்டிருந்தன. அதின் இலைகளை அவர்கள் பிடுங்கி தின்று பல நோய்களையும், வழிப்பிரயாணத்தால் உண்டாகும் இரத்தக்கொதிப்புகளையும் தீர்த்துக் கொண்டார்கள். அதுவும் அல்லாமல் நதியின் இரு பக்கங்களிலும் லீலியா புஷ்பங்கள் நிறைந்த புல்

மைதானங்களும் இருந்தன. அது வருஷமெல்லாம் பசுமையாகவே காணப்பட்டது. இங்கே படுத்துக்கொள்ள வசதியாய் இருந்தபடியால் அவர்கள் இந்த மைதானத்தில் படுத்துத் தூங்கினார்கள் (சங் 23 : 2) விழித்து எழுந்தவுடனே அந்த மரத்துக் கனிகளைப் பிடுங்கித் தின்று, ஆற்றின் தண்ணீரைக்குடித்து மறுபடியும் படுத்துத் தூங்கினார்கள். அவர்கள் அநேக இரவையும் அநேக பகலையும் இப்படியே கழித்தார்கள். அந்த இடத்தில் இருக்கும்போது அவர்கள் பரவசங்கொண்டு,

1. மா இன்ப நதிதான்
ஓடுதே பார்!
பளிங்கொளி போலத்தான்
தோன்றுதே பார்!
ராஜபாதையாக
நடப்பவர்க்காக
மா இன்ப நதிதான்
ஓடுதே பார்!

2. மைதானம் பச்சென்று
காணுதே பார்!
பூமணம் கம்மென்று
வீசுதே பார்!
ஆற்றோரத்து மரக்
கனி இலைகள் மகா!
ஆரோக்கியம் தரும்
அவிழ்தமாம்

3. அவ்வின்பம் கண்டவன்
இப்பூமியை
வாங்க தனக்குள்ள
எல்லாம் விற்பான்,
ராஜபாதையாக
நடப்பவருக்காக
மா இன்வ நதிதான்
ஓடுதே பார்!

என்று பாடினார்கள். இம்மட்டோடு அவர்கள் பயணம் முடியவில்லை. அவர்கள் மறுபடியும் பிரயாணம் பண்ண ானங்கொண்டபோது, புசித்துக்குடித்துப் புறப்பட்டார்கள்.

பிரயாணிகள் பக்கத்து வழி மைதானம் திரும்புதல்

அவர்கள் கொஞ்ச தூரம் போகவே, வழி ஆற்றைவிட்டுப் பிரிவதைப்போலக் கண்டார்கள். அதினால் அவர்களுக்கு உண்டான ஆயாசம் கொஞ்சம் அல்ல. என்றாலும் வழியைவிட்டு விலகவோ அவர்கள துணிந்ததில்லை. ஆற்றுக்கு அப்பால் அந்த வழி மிகவும் கரடுமுரடாய் இருந்தது. இம்மட்டும் அவர்கள் நெடுந்தூரம் செய்த பிரயாணத்தினால் பாதம் தொய்ந்து போயிருந்தது போலவே, இந்த வழியையிட்டும் அவர்கள் மனம் தோய்ந்து போயிற்று. ஆதலால் அவர்கள் போகப்போக நல்ல பாதை கிட்டாதா என்று எண்ணிக் கொண்டே போனார்கள். போகவே பாதையின் இடது பக்கத்தில் ஒரு வயல்வெளியும், அதற்குப் போகும் ஒரு படிக்கட்டுப் பாதையும் காணப்பட்டது. அந்த வயல்வெளிக்குப் **பக்கத்துவழி மைதானம்** என்று பேர். அந்தப் பாதையைக் கண்டபோது கிறிஸ்தியான் தன் தோழனைப் பார்த்து : இந்த மைதானம் நமது வழியின் ஓரத்தில் இருக்குமானால் அதைக் கடந்துபோவோமேன் என்று சொல்லிக் கொண்டு அதை அறியும்படி படிக்கட்டு பாதையண்டை போனான். அங்கே வேலிக்கு அப்பால் ஒரு பாதை தாங்கள் போகிற வழிக்கு அருகாமையில் போயிற்று. அதைக்கண்ட கிறிஸ்தியான் தன் தோழனைப் பார்த்து, நான் நினைத்தபடியே இங்கே வழி இருக்கிறது, திடநம்பிக்கையே வாரும், இந்த இலகுவான பாதை வழியாகவே போவோம் என்று கூப்பிட்டான். (பக்கத்து வழி மைதானம் என்பது, சத்திய பாதையிலிருந்து விலகுகிறதைக் குறிக்கிறது. மெய்க்கிறிஸ்தவர்கள் முதலாய் துன்ப காலத்தில் சிலவேளை மருளும்படியான சோதனைக்குள்படுகிறார்கள்)

திடநம்பி :- ஒருவேளை இந்தப் பாதை நம்மை வழியைவிட்டு விலகிப்போகப்பண்ணினால் என்ன செய்கிறது? என்று திடநம்பிக்கை சொன்னான்.

கிறி :- அப்படி நாம் வழிவிலகிப்போவோம் என்பது போல தோன்றக் காணோம். அதோ பாரும், இந்தப் பாதை வேலி ஓரமாய்த்தானே நம்முடைய பாதையும் போகின்றது என்று காட்டினான்.

அப்படியே திடநம்பிக்கை தன் சிநேகிதன் பேச்சுக்கு இணங்கி அவன் பின்னாலே சென்று படிக்கட்டை கடந்து போனான். அவர்கள் வேலியோரமாய் போன பாதையில் சேர்ந்து அந்த வழி கால்நடைக்கு வெகு லேசாய் இருந்தபடியால் மெத்த சந்தோசத்தோடு நடந்து போனார்கள். சற்று தூரம் போகவே, தங்களைப் போல வேறொரு பிரயாணியும் அவ்வழியாய் முன்னுக்கு நடந்து போகிறதை அவர்கள் கண்டார்கள். அவனுக்கு **வீணுறுதி** என்று பெயர். (வீணுறுதி என்பது, இருதயத்தில் தேவகிருபை இல்லாமலும், வெளியரங்கமாய் பாவ வழியில் நடந்தும், நாங்கள் மோட்சத்துக்குத்தான் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு சாங்கோபாங்கமாய் காலங்கழிக்கிறவர்களை குறிக்கிறது) வீணுறுதியை அவர்கள் கூப்பிட்டு இது எவ்விடத்துக்கு போகிற வழி அப்பா என்று கேட்டார்கள். "இது உச்சிதப்பட்டணத்தின் அலங்கார வாசலுக்கு போகிற பாதை" என்று அவன் சொன்னான். பார்த்தாயா? நான் சொன்னது சரி ஆயிற்றா? இதனாலே நாம் நேர் பாதையில்தான் இருக்கிறோம் என்று அறிந்து கொள்ளுகிறோம் என்று கிறிஸ்தியான் திடநம்பிக்கையைப் பார்த்துச் சொன்னான். அவ்வழியே முன்னே போன வீணுறுதி பிறகாலே இவர்களும் நடந்து போனார்கள். இங்கே பொழுதும் அஸ்தமித்தது. காரிருளும் மூடினது. முன்னே போனவனை பின்னே போனவர்கள் காணக்கூடாமற் போயிற்று.

வீணுறுதி முன்னே நடந்து போகவே வழிதெரியாமல் தனக்கு முன் வெட்டப்பட்டிருந்த ஒரு ஆழமான குழியில் பொதீர் என்று விழுந்தான். வீண் மகிமை கொண்ட மதிகேடரைப் பிடிக்கும்படியாகவே இப்படுகுழி அந்த மைதானத்துக்கு சொந்தக்கார எஜமானனால் வெட்டி வைக்கப்பட்டிருந்தது. அவன் விழுந்த விசையில் எலும்பு வேறு சதைவேறாய்ச் சிதறிப் போனான்.

அவன் விழுந்த சத்தத்தை கிறிஸ்தியானும் திடநம்பிக்கையும் கேட்டார்கள். உடனே அவர்கள் ஏது விசேஷம் என்று சத்தமிட்டு கூப்பிட்டு கேட்டாலும், ஏங்கல்களையும், பெரு மூச்சையுமேயன்றி வேறொரு மறுமொழியையும் கேட்கவில்லை. அப்போது திடநம்பிக்கை தன் தோழனைப் பார்த்து : நாம் இப்போது எங்கே இருக்கின்றோம் என்று கேட்டான். கிறிஸ்தியானோ : ஐயோ நாம் இவனை வழிவிலகப் பண்ணி இப்படி மோசமான இடத்துக்கு கொண்டு வந்து விட்டோமே என்று கலங்கி, ஒன்றும் பேசாமல் மௌனமாய் இருந்தான். இந்த வருத்தத்தோடு வருத்தமாய் அச்சமயத்தில் பெருங்காற்று அடித்தது.

கார்மேகங்கள் திரண்டன. மின்னல்கள் பளிச்சென்று வீசின. இடிகள் மடமடவென்று முழங்கின. கடைசியாக கனத்த மழையும் பெய்தது. வெள்ளமும் புரண்டோடினது.

அப்பொழுது திடநம்பிக்கை :- ஆ! நான் என் வழியைவிட்டுப் பிரியாதிருந்தேன் இல்லையே என்று சொல்லி பெருமூச்சுவிட்டான்.

கிறி :- இந்த வழி இப்படி நம்மை மோசம்பண்ணும் என்று யார் நினைத்தது?

திடநம்பி :- ஆரம்பத்திலேயே இந்த வழியைப்பற்றி எனக்கு அச்சம் தோன்றிற்று. ஆகையால்தான் சாந்தத்தோடு நான் உம்மை ச்சரித்தேன். நீர் என் வயதுக்கு மூத்தவராக இராதிருந்தால் அதைவிட ண்டிப்பாய் பேசியிருப்பேன்.

கிறி: - நல்ல சகோதரனே, கோபித்துக் கொள்ள வேண்டாம். உன்னை வழிவிலகச் செய்ததற்காகவும், இவ்வளவு மோசமான நிலைமையில் சேர்த்ததற்காகவும் நான் மிகவும் துக்கப்படுகின்றேன். சகோதரனே, எனக்கு மன்னிக்கும்படி உன்னை வேண்டுகின்றேன். நான் தகாத நோக்கத்தோடு இப்படிச் செய்ததே இல்லை.

திடநம்பி:- என் சகோதரனே, நீர் உமது மனதில் அதைக் குறித்துக் கலக்கமடைய வேண்டாம். நான் மன்னித்து விட்டேன். இதுவும் நமக்கு ஒரு நன்மையாக இருக்கலாம்.

கிறி:- இவ்வளவு தயாள குணமுள்ள ஒரு சகோதரன் என்னோடிருக்கிறதற்காக நான் சந்தோசப்படுகின்றேன். இனி நாம் இவ்விடத்தில் நிற்கலாகாது. திரும்பி போகலாம் வாரும்.

திடநம்பி:- என் உத்தம நேசனே, நான் முந்தி நடக்கிறேன், நீர் என் பின்னாலே வாரும்.

கிறி:- அல்ல, அல்ல, உமக்கு மனமானால் நான் முந்திப் போகிறேன். ஏதாவது ஒரு மோசம் இருந்தால் நான் உம்மை வழியை விட்டு விலக்கினபடியால், எனக்கு அது முதலாவது சம்பவிப்பது நியாயமாய் இருக்கும்.

திடநம்பி:- அப்படி அல்ல, நீர் முந்திப் போகக்கூடாது. ஏனெனில் உமது மனதில் இப்பொழுது கலக்கம் இருக்கிறபடியால்,

மறுபடியும் பாதையைவிட்டு விலகிவிடுவீர் என்று சொல்லிக் கொண்டிருக்கிற சமயத்தில் "நீ நடந்த வழியாகிய பாதையின்மேல் உன் மனதை வை, திரும்பு, இந்த உன்னுடைய பட்டணங்களுக்கே திரும்பு" என்று அவர்களுக்கு தைரியம் உண்டாகும்படி பேசின ஒரு சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். இதற்குள்ளாக வெள்ளம் பெருகி வழியை மறைத்து விட்டதால் அப்புறம் போவது அதிக மோசத்துக்கு ஏதுவானதாக காணப்பட்டது. என்றாலும் அவர்கள் திரும்பி நடக்கும்படியாக துணிந்து பிரயாசப்பட்டார்கள். ஆனால் கனத்த இருளினாலும், கழுத்தளவு ஜலம் பெருகினபடியாலும், ஒன்பது பத்து தடவை அமிழ்ந்தே போகிறது போல காணப்பட்டார்கள். அவர்கள் என்ன பிரயத்தனப்பட்டாலும் அன்றிரவு படிக்கட்டைக் கண்டு பிடித்துக் கொள்ளக்கூடாமல் போயிற்று. ஆகையால் விடியட்டும் என்று ஒரு அற்ப ஒதுக்கிலே உட்கார்ந்து சற்று இளைப்பாறினார்கள். அவர்கள் அந்த இரவெல்லாம் பட்ட வருத்தங்களின் ஆயாசத்தால் அப்படியே தூங்கிவிட்டார்கள்.

இமயமலைகளின் பித்தோராகார் பட்டணத்தில் நடைபெற்ற தேவ ஊழியம்.

பித்தோராகார் பட்டணம் நோக்கிய பயணத்தின் பாதையில்...

கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு துதி உண்டாவதாக. பழைய டில்லி ரயில் நிலையத்தில் இரவு 11 மணிக்கு புறப்படும் ராணிகேத் எக்ஸ்பிரஸ் இரயிலில் நாம் ஏறினால் மறு நாள் காலை 6 மணிக்கெல்லாம் இமயமலைகளின் அடிவாரத்தில் உள்ள காதகோடம் இரயில் நிலையத்தை நாம் வந்தடைந்து விடலாம். இந்த ரயில் நிலையத்துடன் ரயில் பாதை முற்றுப் பெறுகின்றது. இங்கிருந்துதான் புகழ்பெற்ற மலைவாசஸ்தலங்களான நைனிடால், ராணிகேத், அல்மோரா போன்ற பட்டணங்களுக்கெல்லாம் ரஸ்தா மார்க்கமாக செல்ல வேண்டும்.

காதகோடத்திலிருந்து 90 கி.மீ. தொலைவில் அல்மோரா பட்டணம் உள்ளது. அங்கிருந்து 117 கிமீ. தூரத்தில் பித்தோராகார் என்ற இமயமலை பட்டணம் உள்ளது. பட்டணம் என்று சொல்லுவதைவிட

பேரூராட்சி நகரியம் என்று சொல்லலாம். பித்தோராகார் பட்டணத்தை சுற்றிலும் சிறு சிறு கிராமங்கள் பரவிப் பரந்து கிடக்கின்றன.

அல்மோரா பட்டணத்திலிருந்து இந்த இடத்துக்கு வரும் பேருந்து பாதை பயங்கரமான ஒன்றாகும். காலையில் அல்மோராவிலிருந்து புறப்பட்டால் பித்தோராகார் வந்து சேர மாலைப் பொழுதாகிவிடுகின்றது. மலைப்பாதை வளைந்து வளைந்து அபாயகரமான இடங்களின் வழியாக வருவதால் பேருந்து மிகவும் நிதானமாகத்தான் வருகின்றது. பித்தோராகார் பட்டணம் வந்து சேரும் வரை ஒரே செங்குத்து ஏற்றத்தில் தான் பேருந்து வருகின்றது.

பேருந்து, பித்தோராகார் பட்டணத்தை இறுதியாக வந்து சேருவதற்கு முன்னால் நமது இரத்தத்தையே பயத்தால் உறைய வைக்கக்கூடிய பயங்கரமான வளைவுகளை அடுத்தடுத்து கடந்து வருகின்றது. கொண்டை ஊசி வளைவுகளில் டிரைவர் வாகனத்தை முற்றுமாக ஒடித்து திருப்பும்போது சற்று கவனக்குறைவானாலும் அல்லது வாகனத்தில் ஒரு சிறிய பழுது ஏற்படினும் பேருந்திலுள்ள ஒருவர் கூட உயிர் தப்பிப் பிழைப்பது கூடாத காரியமாகிவிடும். அனைத்து வளைவுகளையும் கடந்து பேருந்து உச்சி மலைப்பகுதிக்கு வந்ததும் பல நூற்றுக்கணக்கான சிறிதும், பெரிதுமான வெண்கல மணிகளைக் கொண்ட ஒரு இந்து கோயில் உள்ளது. பேருந்திலுள்ள பயணிகள் எல்லாரும் அங்கு இறங்கி ஆபத்தான வழிப்பயணத்தில் தங்களைக் காத்த கடவுளுக்கு நன்றி செலுத்தும் முகமாக கோயிலின் மணிகளை ஒலித்து காணிக்கைகளை படைத்து தங்கள் தெய்வங்களை வணங்கி வருகின்றனர்.


அந்த இடத்திலிருந்தும் பேருந்து சுமார் ஒரு மணி நேரம் ஆபத்தில்லாத மலைப்பாதையிலும், சமதரைப்பரப்பிலும் ஓடி பித்தோராகார் பட்டணத்தை வந்தடைகின்றது.

பித்தோராகார் பட்டணம்

பித்தோராகார் பட்டணம் ஒரு மலை உச்சியில் தான் உள்ளது. 5400 அடி உயரத்தில் உள்ள இந்த இடத்திற்கு வட திசையில் சீன எல்லையான தீபெத்தும், கிழக்கு திசையில் நேப்பாள நாட்டின் எல்லையான டார்ச்சுலாவும் உள்ளது. நாங்கள் நேப்பாள எல்லைக் கோட்டை நேரில் சென்று பார்த்து திரும்பினதுடன் அதை ஒட்டிய

இந்திய கிராமத்தில் 3 தினங்கள் தங்கி தேவ ஊழியமும் செய்தோம். அப்படியே, சீன தேசத்துக்கு (தீபெத்) செல்லும் மார்க்கத்தில் தவாகாட் என்ற கிராமம் வரை சென்று ஊழியம் செய்தோம். கைலாச மலை செல்லுபவர்கள் இந்த தவாகாட் கிராமத்தை கடந்துதான் செல்ல வேண்டும். இனி, அந்த மகா பயங்கரமான இடத்துக்கு எங்களால் போக முடியும் என்று நான் நினைக்கவில்லை.

இந்த பித்தோராகார் என்ற இமயமலை பட்டணத்துக்கும் நமது தியாக மிஷனரிகள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து வந்து மெதடிஸ்ட்




சபையை உருவாக்கி ஒரு சிறிய தேவாலயத்தையும் கட்டியுள்ளனர். பாட்கோட் என்ற ஒரு சிறிய மலைப்பகுதி முழுவதுமே கிறிஸ்தவ மக்கள் வாழும் பகுதியாக உள்ளது. தேவாலயம், ஒரு உயர்நிலைப்பள்ளி, குருவானவருடைய வீடு, மற்றும் கிறிஸ்தவ வீடுகள் எல்லாம் சேர்ந்து "மிஷன் காம்பவுண்ட்" ஆகவே அழைக்கப்படுகின்றது.

ஆனால், மிகவும் துக்ககரமான காரியம், அந்த சிறிய கிறிஸ்தவ சமுதாயத்திலும் இப்பொழுது நாம் எங்கும் காண்பது போல சாட்சியின் ஜீவியம் கிடையாது. பட்டணத்தில் எந்த ஒரு திருட்டு, கற்பழிப்பு வேறு எந்த ஒரு தீச்செயல் நடந்தாலும் குற்றவாளிகளைத் தேடிக்கொண்டு காவல் துறையினர் பாட்கோட் மிஷன் காம்பவுண்டுக்குத்தான் முதலாவது வருவார்களாம். நாங்கள் அந்த மிஷன் காம்பவுண்டுக்குள் போய் அங்குள்ள மக்களுக்கும் சுவிசேஷ பிரதிகளை கொடுத்தோம். மிஷன் காம்பவுண்டுக்கு செல்லும் முகப்பிலேயே, தேவாலயத்துக்கு

அருகில் கிறிஸ்தவர்கள் மதுபானக் கடை வைத்து நடத்துவதைப் பார்த்து துக்கம் அடைந்தோம். அந்த கிறிஸ்தவ மிஷன் காம்பவுண்ட் பகுதியை நீங்கள் இந்த செய்தியில் காணலாம். அங்குதான் மெதடிஸ்ட் சிறிய தேவாலயமும் உள்ளது. கர்த்தர், இந்த கிறிஸ்தவ மக்களை தமது நாமத்தை மகிமைப்படுத்தும் உத்தம கிறிஸ்தவர்களாக எடுத்து நிறுத்த ஜெபித்துக் கொள்ளுங்கள்.

பித்தோராகார் என்ற இந்த பட்டணத்தின் வழியாகவே பக்த சிரோன்மணி சாது சுந்தர்சிங் கைலாச மலைகளுக்கு சென்றிருக்கின்றார் என்று கூறினால் நீங்கள் ஆச்சரியம் அடைவீர்கள். உண்மைதான், இந்தப்




பட்டணத்தின் வழியாகவே அவர் பிரயாணப்பட்டு போயிருக்கின்றார். இப்பொழுது இருக்கக் கூடிய நல்ல ரஸ்தா வசதிகள் இல்லாத அக்காலத்தில் பெருங்கானகங்கள் நிறைந்த அந்த நாட்களில் சுந்தர் மிகவும் கஷ்டத்தோடு இங்கு வந்திருக்க வேண்டும். பித்தோராகார் பட்டணத்திலிருந்து கைலாச மகாரிஷி வாழும் கைலாச மலை 300 மைல்கள் தொலைவில் இருப்பதாகவும், 7 நாட்களில் அவர் அந்த தூரத்தை மிக எளிதாக கடந்து சென்று விடுவதாக தமது புத்தகம் ஒன்றில் சுந்தர்சிங் எழுதியிருக்கின்றார். "சாதாரணமாக மற்ற மக்களுக்கு இந்த தூரத்தை கடந்து செல்ல முழுமையான ஒரு மாத காலம் தேவைப்படும். ஆனால், எனக்கு ஒரு வாரம் போதுமானது. 3 நாட்களில் நான் 100 மைல் தூரத்தை கஷ்டமின்றி கடந்து விடுவேன்" என்று பக்தன் மேலும் எழுதுகின்றார். எலியா தீர்க்கனின் மேல் கர்த்தருடைய கை

இருந்தமையால் வெகு வேகமாக ஓடக்கூடிய குதிரைகள் பூட்டிய ஆகாப் அரசரின் இரதத்துக்கு முன்பாக ஓடக்கூடிய தேவ வல்லமை அவருக்கு இருந்தது போல சாது சுந்தர்சிங் மேலும் தேவனுடைய கரம் இருந்தமையால் அவர் நிச்சயமாக ஒரு வார காலத்தில் 300 மைல்கள் தூரத்தை எளிதாக நடந்திருப்பார் என்று நாம் நம்பலாம். பித்தோராகார் பட்டணத்தின் மற்றொரு காட்சியையும் நீங்கள் இந்த செய்தியில் பார்க்க முடியும்.

சண்டாக் குஷ்ட்டரோக மருத்துவமனை

பித்தோராகார் பட்டணத்திலிருந்து 7 கி. மீ. தொலைவில் 6600 அடி உயரத்தில் சண்டாக் என்ற ஒரு சிறிய கிராமம் உள்ளது. இங்கு 92 ஏக்கர் நிலப்பரப்பில் இமயமலைகளின் மிகவும் அழகான பனிச் சிகரங்களின் பின்னணியத்தில் கிறிஸ்தவ குஷ்ட்டரோக மருத்துவனை ஒன்று உள்ளது. 1882 ஆம் ஆண்டு அமெரிக்காவின் கிர்க் என்ற




மிஷனரியால் இந்த குஷ்ட்டரோக மருத்துவமனை நிறுவப்பட்டது. அதை அமெரிக்காவைச் சேர்ந்த மேரி ரீட் என்ற மற்றொரு மிஷினரி தன் பொறுப்பில் எடுத்து ஒரு சிறந்த ஸ்தாபனமாக உருவாக்கி வைத்துள்ளார்கள். தனது அழகான அமெரிக்க தேசத்தையும், தாய் தந்தையரையும், சொந்த பந்தங்களையும் கர்த்தர் இயேசுவுக்காக அற்பமும் குப்பையுமாக விட்டுவிட்டு இந்தியாவின் ஒரு கடைக்கோடி எல்லையில் இருக்கின்ற சண்டாக் கிராமத்துக்கு வந்து மக்களாலும், சமுதாயத்தாலும் அருவெருத்து ஒதுக்கப்பட்ட குஷ்ட்டரோக மக்களுடன் ஒன்றாக

சிகிச்சைகளுடன் இரட்சகரின் சுவிசேஷத்தையும் அளித்து அங்கேயே மரித்து அங்குள்ள சிற்றாலயத்துக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். குஷ்ட்டரோக மருத்துவமனை வளாகத்திலுள்ள மேரி ரீட் அம்மையார் வாழ்ந்த வீட்டையும், அவர்களின் கல்லறையையும் நாங்கள் சென்று பார்த்து வந்தோம். அதை நீங்களும் இந்தச் செய்தியில் காணலாம்.

சண்டாக் கிராமத்தில் உள்ள மேற்கண்ட குஷ்ட்டரோக மருத்துவமனை நுழைவாயிலுக்குள் நாம் சென்றதும் கொஞ் தூரம் நடக்க வேண்டும். நமது நடை பாதையின் இருமருங்கிலும் பல நூற்றுக் கணக்கான பெரிய கேதுரு மரங்கள் வானளாவ கெம்பீரமாக வளர்ந்து நிற்பதை நாம் காணலாம். அந்த மரங்களின் வயது 100 ஆண்டுகளையும் கடந்திருக்கும். பள்ளத்தாக்கிலிருந்து வந்து கொண்டிருக்கும் இமயமலை பனிக்காற்று தேவதாரு மரங்களின் கிளைகளின் ஊடாக நொய்..... என்ற சத்தத்தை உருவாக்கி சென்று கொண்டிருக்கின்றது. அந்த கேதுரு மரச் சோலை வழியாக நாம் சென்றால் சற்று நேரத்தில் மேட்டின் மேல் குஷ்ட்டரோக மருத்துவமனையின் தலைமை மருத்துவர் டாக்டர் பிஸ்வாஸ் அவர்களின் வீட்டை நாம் காணலாம். மேற்கு வங்காளத்தை சேர்ந்த அவரும் அந்த குஷ்ட்டரோக் மக்களுக்காக தனது வாழ்வை அர்ப்பணித்து திருமணம் செய்து கொள்ளாமல் பணி ஆற்றி வருகின்றார். டாக்டர் பிஸ்வாசும் கர்த்தரை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட தேவனுடைய பிள்ளை. சகோதரன் நார்ட்டனும், நானும் செய்து வருகின்ற தேவ ஊழியத்தால் உள்ளங்கசிந்த அவர் எங்களை அதிகமாக நேசிப்பவர். அது குறித்து எழுதப்போனால் தேவ எக்காளத்தின் இன்னும் சில பக்கங்கள் அதற்காக போய்விடும். கர்த்தருக்கு மகிமையாக அது அப்படியே இருக்கட்டும்.


மருத்துவமனையின் முகப்பில் "கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கின்றது. அவரை சந்திக்க ஆயத்தப்படுங்கள்" என்ற எழுத்து கண்ணாடிச்சட்டமிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. மருத்துவமனையின் அறைகளிலும் தொழு நோயாளிகள் உள்ள வார்டுகளிலும் ஆண்டவர் இயேசுவின் மனுஷ அவதார காலத்தின் பற்பலவிதமான அழகான சாட்சிகள் கண்ணாடி சட்டமிடப்பட்டு சுவர்களில் மாட்டி வைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 41 தொழுநோயாளிகள் இருக்கின்றனர். அவர்களில் பாதிப்பேர் பெண்கள். இவர்கள் எல்லாம் ஒரு காலத்தில் தங்கள் சொந்த ஜனங்களாலும், கிராமத்தினராலும் ஊரைவிட்டு சுடந்த

ரத்தப்பட்டு அநாதைகளாக கன்மலை வெடிப்புகளிலும், கற்கால னிதர் போல குகைகளிலும் தனித்து வாழ்ந்தவர்கள் ஆவார்கள்.



மிஷனரி மேரி ரீட் அம்மையார் துரத்துண்ட அந்த அநாதை மக்களை எல்லாம் காடுகளிலும் மலைகளிலும் இருந்து கூட்டி அழைத்து வந்து இந்த மருத்துவமனையில் அவர்கள் தங்கி சமாதானத்துடன் வாழ உறைவிடமும் நல்ல போஷாக்கான உணவும் அளித்து அவர்களுக்கு மருத்துவ சிகிச்சையும் அளித்தார்கள்.

தொழு நோயாளிகள் எல்லாரும் பல்லாண்டு காலமாக இந்த குஷ்ட்டரோக மருத்துவமனையில் இருப்பவராவார்கள். தான் 18 வயது வாலிப பெண்ணாக இருந்தபோது மேரி ரீட் அம்மையாரால் கொண்டு வரப்பட்ட ஒரு தொழுநோயாளிப் பெண் இப்பொழுது 53 வயதினளாக



இருப்பதாக எங்களிடம் கூறினாள். தொழுநோயாளிகள் ல்லாருக்கும் நல்ல காற்றோட்டமான ஹால்கள் ஆண், பெண் ருபாலருக்கும் தனித்தனியாக கொடுக்கப்பட்டுள்ளன. மத்தியானம் றும் மாலை நேரங்களில் அந்த மக்கள் தங்கள் ஹால்களுக்கு முன்பாக மர்ந்து பள்ளத்தாக்கிலுள்ள அழகான குக்கிராமங்களையும் ண்டவரின் அழகான படைப்புகளான பனி மூடிய சிகரங்களையும் ர்த்தாலே அவர்களின் தொழுநோய் பாதி பறந்து போய் விடும்.

1997, 1998, 1999 ஆகிய மூன்று ஆண்டுகளும் நாங்கள் இந்த ிஸ்தவ தொழு நோய் மருத்துவமனைக்கு வந்து இங்குள்ள எல்லா ோயாளிகளுக்கும், நோயாளிகள் மத்தியில் பணி புரியும் மருத்துவ ணியாளர்களுக்கும் பிஸ்கட் பாக்கெட்டுகள் கொடுத்து இந்தி மாழியில் புதிய ஏற்பாடுகள், சிறு சிறு கிறிஸ்தவ புத்தகங்கள், கைப்பிரதிகள் எல்லாம் ஜெபத்தோடு கொடுத்துள்ளோம். பிரதி ஆண்டு அக்டோபர் மாதம் வந்தால் இந்த அன்பான தொழுநோயாளிகள் ாங்களது வரவை ஆவலுடன் எதிர்நோக்கி காத்திருக்கின்றனர். நாங்கள் கொடுக்கும் அற்பமான பிஸ்க்கட் பாக்கெட்டுகளுக்காக அல்ல, வித பிதமான தேவனுடைய சுவிசேஷ பிரதிகள், புத்தகங்கள் மற்றும் எங்களது ்தவ அன்பு நிறைந்த ஆறுதலான வார்த்தைகளுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். நாங்கள் சந்தித்த சில தொழு நோயாளிகளை நீங்கள் இந்த செய்தியில் காணக்கூடும். நாங்கள் ஆத்தும பாரத்தோடு கொடுத்துள்ள கர்த்தருடைய வார்த்தைகள் அடங்கிய பிரசுரங்களை தங்கள் வசம் பத்திரமாக வைத்து இந்த மக்கள் படித்து பயன் பெறுகின்றனர்.

இமயமலைகளிலுள்ள அல்மோரா பட்டணத்திலும் இவ்வகையான ஒரு குஷ்ட்டரோக மருத்துவமனை உள்ளது. அது இதைவிட மிகவும் சிறியதாகும். அதை தோற்றுவித்தவர் ஒரு ஜெர்மானியர் ஆவார். அங்கும் நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் ஒழுங்காக சென்று அங்குள்ள தொழு நோயாளிகளுக்கும் பிஸ்கட் பாக்கெட்டுகளும், தேவனுடைய வசனங்களும் கொடுத்து வருகின்றோம். வெறுமையாய் திரும்பாத தேவனுடைய ஜீவனுள்ள வசனங்கள் உலகத்தின் மற்ற மக்களுடன் சேர்ந்து வாழ இயலாமல் முற்றும் தனித்து புறக்கணிக்கப்பட்டவர்களாக வாழும் இந்த அன்பான மக்களுக்கு தேவனுடைய சமாதானத்தையும், பரலோக ஆறுதலையும், ஆன்ம இரட்சிப்பையும் அருள அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

பாண்டா கிராமத்தில் நடைபெற்ற தேவ ஊழியம்

பித்தோராகார் பட்டணத்திலிருந்து சுமார் 4 கி. மீ. தூரத்தில் பாண்டா என்றதோர் கிராமம் உள்ளது. ஊருக்கு சற்று தொலைவில் ஒரு பெரிய மலை உள்ளது. பாண்டா கிராமம் முழுவதும் விவசாயத்தை நம்பி வாழும் கிராமமாகும். 1997 ஆம் ஆண்டு நாங்கள் அந்த கிராமத்துக்கு தேவனுடைய ஊழியத்துக்காக சென்றிருந்தோம். அக்டோபர் மாத கடைசி வாக்கில் நாங்கள் அந்த கிராமத்துக்கு சென்றிருந்தமையால் விவசாய தொழில்கள் எல்லாம் நடந்து முடிந்து விட்டன. வயலில் கிடைத்த வைக்கோலை கிராமத்திலுள்ள எல்லா மரங்களின் மீதும் கிரமமாக கீழே விழாதவாறு கட்டி வைத்திருந்தார்கள். எந்த ஒரு மரத்தைப் பார்த்தாலும் அது ஒரு வண்டிக்கும் கூடுதலான பாரம் கொள்ளக்கூடிய வைக்கோலை தாங்கிக் கொண்டு நின்றது. அந்த காட்சி எங்களுக்கு நூதனமாக இருந்தது. இப்படித்தான் அந்த இடத்து மக்கள் தங்கள் மாடுகளுக்கான வைக்கோலை மரங்களில் கட்டி வைக்கின்றனர்.

பாண்டா கிராமத்தின் மையப் பகுதி வழியாக ரஸ்தா செல்லுகின்றது. ரஸ்தாவுக்கு மேல் பகுதியில் ஆங்காங்கு நிறைய வீடுகளும், கீழ்ப்பகுதியில் சற்று குறைவாகவும் வீடுகள் இருக்கின்றன. நாங்கள் ரஸ்தாவுக்கு கீழாக இருந்த ஒரு பண்ணை வீட்டுக்கு செல்ல கர்த்தரால் ஏவப்பட்டுச் சென்றோம். அந்த வீட்டின் தலைவாசல் முற்றத்தில் அவர்கள் வயலில் விளைந்த ராகிக் கதிர்கள் உலரப் போடப்பட்டிருந்தன. உள் வீட்டின் வராந்தாவில் விவசாய விளை பொருட்கள் பலவும் அறுவடை செய்யப்பட்டு வைக்கப்பட்டிருப்பதை கவனித்தோம். அந்த வீட்டைப் பார்த்ததும் அது முதல்தரமான ஒரு விவசாயியின் வீடு என்பதை நாங்கள் காண முடிந்தது.

வயலில் வேலை செய்து களைத்த நிலையில் ஒரு மனிதரும், வீட்டிற்கு முன்னர் 2 வாலிபர்கள், ஒரு வாலிப மகள், 2 ஸ்திரீகள் அந்த வீட்டில் இருந்தனர். எங்கள் இருவருடைய முகச்சாடைகளை அந்த பெரிய மனிதர் பார்த்ததும் அவருக்கு சந்தோசமாக இருந்தது. நாங்கள் இருவரும் தமிழ் பேசுவதை அவர் கவனித்தபோது அவருடைய மகிழ்ச்சி இன்னும் அதிகரிப்பதாக இருந்தது. காரணம் யாதெனில் , அந்த மனிதர் ராணுவத்தில் பணி ஆற்றியிருந்தமையால் தமிழ் மக்களுடைய தொடர்பு

அவருக்கு கிடைத்துள்ளது. அந்த மனிதர் எங்களை அன்புடன் ஏற்றுக்கொண்டு தனது வீட்டுக்குள் எங்களை அழைத்துச் சென்றார். சகோதரன் நார்ட்டன் அவர்களும் ராணுவத்தில் பணி செய்திருந்தமையால் அவர்கள் இருவரும் தங்களுடைய கடந்த கால ராணுவ அனுபவங்களை ஒருவருக்கொருவர் பரிமாற்றம் செய்து கொண்டனர். அதன் பின்னர், நாங்கள் எங்களுடன் கொண்டு சென்ற தேவனுடைய சுவிசேஷ பிரசுரங்கள், சிறு புத்தகங்கள் போன்றவற்றை வீட்டார் அனைவருக்கும் ஜெபத்துடன் கொடுத்தோம்.


அந்த மனிதரின் பெயர் ஆர்யா என்பதாகும். அவருக்கு ஒரே ஒரு குமாரன் தான். அவனது பெயர் சம்சேர் என்பதாகும். அவன் ஒரு படித்த வாலிபன். நாங்கள் ஜெபத்தோடு கொடுத்த தேவனுடைய வசனங்கள் ஏசா 55 :10 -11ன் படி ஆர்யாவின் உள்ளத்திலும், அவரது மகன் சம்சேருடைய உள்ளங்களிலும் கிரியை செய்துள்ளது.

இதற்கிடையில் நாங்கள் ஆர்யாவுடன் கடிதத் தொடர்பு கொண்டோம். இன்னும் பயனுள்ள நல்ல அருமையான கிறிஸ்தவ புத்தகங்கள், சிறு பிரதிகளை தபாலில் அனுப்பிக் கொடுத்ததுடன் டிசம்பர் மாதத்தில் இந்தி தங்க வசன காலண்டர்கள் அனுப்பி வைத்தோம். 1998 ஆம் ஆண்டில் நாங்கள் திரும்பவும் அவருடைய பாண்டா கிராமம் சென்றிருந்தபோது ஆர்யா என்பவரின் மனைவி எங்களைப் பார்த்து "நீங்கள் எங்கள் வீட்டுக்கு கடந்த ஆண்டு வந்து போனதிலிருந்து எனது மகன் சம்சேர் [illegible]
வணங்குவதில்லை" என்று கோ[illegible]
கூறினார்கள். சம்சேரை நாங்கள் [illegible]
அஞ்சல் வழி பாடத்திட்டத்திலும் சேர்த்து விட்டிருந்தோம். அப்பொழுதுதானே, ஆர்யா, தான் கிறிஸ்தவனாக விரும்புவதாக எங்களிடம் தனது விருப்பத்தை தெரிவித்தார். எங்களிடம் தேவனுடைய வசனங்களைப் பெற்று ஒரு ஆண்டு காலமாக அவைகளை அவரும், அவரது மகனும் படித்து வந்திருந்தனர் என்பதில் சந்தேகமில்லை. சம்சேர், தபால் மூலமும் வேதபாடம் கற்று வந்திருந்தான்.

பித்தோராகார் பட்டணத்திலுள்ள ஒரு சிறிய பெந்தேகோஸ்தே சபையின் போதகர் சாமுவேல் என்பவரிடம் ஆர்யா அவர்களின் விருப்பத்தை நாங்கள் தெரிவித்தோம். அவர் மிகவும் சந்தோசமடைந்து

எங்களுடன் வந்து பாண்டா கிராமத்தில் ஆர்யாவின் வீட்டில் ஒரு ஜெபக்கூட்டத்தையே வைத்து தேவனுடைய செய்தியையும் கொடுத்தார். அந்த சந்திப்பிலிருந்து ஆர்யா, அவ்வப்போது பெந்தேகோஸ்தே ஆராதனைகளில் கலந்து கொண்டு வந்தார்.

தேவன், ஆர்யாவின் உள்ளத்தில் பலமாக கிரியை செய்ய தொடங்கினார். கர்த்தருடைய சிலுவை, பாடு, மரணம், பாவிகளின் பாவ மீட்புக்காக அவர் மேற்கொண்ட மனுஷ அவதாரம் எல்லாம் அவரை வல்லமையாக தொட்டது. குறிப்பாக, நாங்கள் கொடுத்த இந்தி மொழி புதிய ஏற்பாடு அவருக்கு தெவிட்டாத தேனாக அமைந்தது. ராணுவ சேவைக்கு பின்னர் விவசாயத் தொழிலை தனது கரங்களில் எடுத்த அவர் தனது புதிய ஏற்பாட்டை எடுத்துக் கொண்டு தனது வயலுக்கு புறப்பட்டார். கோடை கால நாட்கள். தனது மாடுகளை மேய விட்டுவிட்டு குடையின் நிழலில் ஓரிடத்தில் அமர்ந்து கர்த்தாவின் சிலுவைக் காட்சியை அவர் வாசிக்க ஆரம்பித்ததும் கண்ணீர் அவரது கண்களிலிருந்து பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்தது. அவர் குழந்தையைப் போல தேம்பி தேம்பி அழுதார். இது பல நாட்களாக நீடித்தது. மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டு முடிந்ததும் தனது வீட்டுக்கு வந்ததும் தனது புதிய ஏற்பாட்டையே அவர் எப்பொழுதும் வாசித்துக் கொண்டிருந்தார். அவர் இத்தனை ஆர்வமாக வாசித்துக் கொண்டிருந்ததை பார்த்த அவரது மனைவி ஒரு நாள் "நீ, இத்தனையான ஆர்வத்தோடு வாசிக்கும் புத்தகத்திலிருந்து நானும் தெரிந்து கொள்ளும்படியாக அதில் எழுதப் பட்டவைகளை எனக்கும் வாசித்து காட்டு" என்று கூறினார்களாம். அப்படியே, அவர் தனது மனைவியிடமும் ஆண்டவர் இயேசுவின் மனுஷ அவதாரத்தின் எல்லையற்ற சிலுவை அன்பையும் எடுத்துக் கூறியிருக்கின்றார்.



காரியம் இத்துடன் முடிந்துவிடவில்லை. ஆர்யா, தனது மகன் சம்சேருக்கு பெண் எடுத்த குடும்பத்தினரிடமும் தேவனுடைய மகத்தான சிலுவை அன்பை கூறி தன் வசமிருந்த கிறிஸ்தவ பிரசுரங்களை அவர்களுக்கும் கொடுக்கவே அவர்களும் அதில் அதிக ஈடுபாடு காட்ட ஆரம்பித்தனர். "நீங்கள் கூறுவது எங்களுக்கும் மிகவும் சந்தோசம் தருகின்றது. நாங்களும் உங்களைப் போல இயேசுவின் மார்க்கத்தை பின்பற்றுவோம்" என்று கூறியிருக்கின்றனர். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. இந்த சாட்சியின் வார்த்தைகள் யாவையும் ஆர்யா அவர்களே எங்களிடம் பகிர்ந்து கொண்டவையாகும். கர்த்தருக்குள் வழிநடத்தப்பட்ட சகோதரன் ஆர்யா அவர்களை நீங்கள் இந்தச் செய்தியில் பார்க்கலாம்.

இந்த 1999 ஆம் வருடம் நாங்கள் திரும்பவும் பாண்டா கிராமம் சென்றபோது சகோதரன் ஆர்யா எங்களிடம் சொன்ன வார்த்தைகள் எங்களை கர்த்தருக்குள் ஆரவாரிக்கப் பண்ணுகின்றது. "எனது வீடு



பிராந்தி பாட்டல்களால் நிறைந்திருந்ததை நீங்கள் கடந்த முறை பார்த்திருக்கலாம். ஆனால், நான் இப்பொழுது மதுப்பழக்கத்தை முற்றுமாக விட்டுவிட்டேன். எங்கள் வீட்டின் சுவர்களில் மாட்டப்பட்டிருந்ததும், நாங்கள் வழிபட்டதுமான இந்து தெய்வங்களின் படங்கள், விக்கிரக சிலைகள் எல்லாம் போய்விட்டன. எனது மகன் சம்சேரும் அப்படியே இந்து தெய்வங்களின் வணக்கத்தை எல்லாம்

விட்டுவிட்டான். அவனது அறையில் நீங்கள் பார்க்கக் கூடியதெல்லாம் நீங்கள் எனக்கு அனுப்பிய கிறிஸ்தவ தங்கவசன காலண்டர் மாத்திரம்தான்" என்று கூறி எங்களை சம்சேர் படுக்கும் அறைக்கு அழைத்துச் சென்று அதை எங்கள் சொந்த கண்களால் காணும்படி செய்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

ஆர்யா, இப்பொழுது ஆண்டவர் இயேசுவுக்குள் வளர்ந்தவராகவும், சபை நடுவில் எழும்பி தனது பாவங்களிலிருந்து தன்னை விடுவித்த தன் ஆண்டவருக்கு சாட்சி சொல்லுபவராகவும் இருக்கின்றார். 1999 ஆம் ஆண்டு அவர் பம்பாய் பட்டணம் செல்ல வேண்டியதாக இருந்ததாம். பம்பாய் சென்ற தனது ரயில் பிரயாணத்தில் தனது மேல் "பெர்த்" தில் படுத்திருந்தவாறே தனது இந்தி மொழி புதிய ஏற்பாட்டைத்தான் எப்பொழுதும் படித்துக் கொண்டிருந்தாராம். வேறு எந்த ஒரு புத்தகத்தையும் படிக்க தனக்கு விருப்பம் இல்லாமல் போய்விட்டது என்று எங்களிடம் சந்தோசம் பொங்க சொன்னார். பம்பாயில் தான் இருந்த நாட்களில் ஓய்வுநாட்களில் தேவனுடைய ஆலயத்துக்கு ஒழுங்காக சென்றதாகவும் கூறினார். "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளாக இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" (2 கொரி 5: 17) என்று தேவனுடைய வார்த்தை அழகாக கோடிட்டு காண்பிக்கின்றது.

நாங்கள் இந்த ஆண்டு பித்தோராகார் படடணத்தில் இருந்தபோது சகோதரன் ஆர்யா அவர்கள் எங்களுடன் சேர்ந்து பாஸ்ட்டர் சாமுவேல் அவர்களின் பெந்தேகோஸ்தே சபையில் ஆராதனையில் கலந்துகொண்டு கர்த்தரை மகிமைப்படுத்தினார். அந்த ஓய்வு நாள் ஆராதனையில் சகோதரன் நார்ட்டன் அவர்களும், நானும் எங்களுடைய சாட்சிகளை கூற கர்த்தர் உதவி செய்தார். கர்த்தருடைய சுத்தக்கிருபையாலும் பாவிகளாகிய எங்களுடைய அற்பமான முயற்சிகளாலும் தேவனுடைய இரட்சிப்பின் சந்தோசத்துக்குள் வழி நடத்தப்பட்ட சகோதரன் ஆர்யா அவர்கள் ஒரு பரிசுத்த சபை நடுவே இருந்தது எங்களுக்கு பூரிப்பும் பரவசமுமாக இருந்தது. ஆர்யாவுடைய மனந்திரும்புதலில் தேவ மக்களாகிய உங்களது உருக்கமான ஜெபங்களும் முக்கியமான பங்கை பெற்றுள்ளது என்பதை நாங்கள் அன்போடு நினைப்பூட்ட விரும்புகின்றோம். எல்லா கனமும், துதியும் நம் ஆண்டவர் இயேசுவுக்கே உண்டாவதாக.

பெந்தேகோஸ்தே சபை பாஸ்ட்டர் சாமுவேல் அவர்களின் பெயரும் எனது பெயரும் ஒன்றேதான். அவரும் என். சாமுவேல், நானும் என். சாமுவேல். தேவனுடைய ஊழியர்களில் எனக்கு பக்த சிரோன்மணி சாது சுந்தர்சிங் அவர்கள் மேல் எத்தனை கொள்ளை விருப்பமோ அதே தாகமும், வாஞ்சையும்தான் சகோதரன் சாமுவேலுக்கும் உள்ளது. நான்



எப்படி சாது சுந்தர்சிங் ஊழியம் செய்ததைப் போல ஊழியம் செய்ய விரும்புகின்றேனோ அதே போலவேதான் சகோதரனும் காடுகள் மலைகளுக்கு சென்று கர்த்தருக்காக ஊழியம் செய்ய விரும்புகின்றார்.

சகோதரன் சாமுவேல் நம் தமிழ்நாட்டில் ஒசூரைச் சேர்ந்தவர்கள். வைராக்கியமான இந்து குடும்பத்திலிருந்து கர்த்தரை ஏற்றுக்கொண்டவர். ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள உதயபூர் பட்டணத்திலுள்ள ஒரு வேதாகம கல்லூரியில் வேதசாஸ்திரம் கற்று பெந்தேகோஸ்தே சபை பாஸ்ட்டராக இருக்கின்றார். நல்ல தேவ அன்பும், ஆத்துமபாரமும் உள்ள சகோதரன். அவருடைய மனைவி விஜயா சாமுவேல் "இருதயக் கண்ணாடி" அல்லது "மனுஷரின் இருதயம்" என்று அழைக்கப்படும் சிறு புத்தகத்தின் மூலமாக இரட்சிப்பை கண்டடைந்த சகோதரி. இரு சிறு பிள்ளைகள் உள்ளனர். இந்த தேவ ஊழியரின் அர்ப்பணிப்பான தேவ ஊழிய ஆசீர்வாதத்துக்காக நீங்களும் அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள். இந்த செய்தியில் பாஸ்ட்டர் என்.

சாமுவேலுடைய பெந்தேகோஸ்தே சபையையும், பாஸ்ட்டருடைய அன்பான குடும்பத்தையும் நீங்கள் காணக்கூடும்.

சகோதரன் ஆர்யா அவர்கள் கடைசி வரை கர்த்தருடைய அன்பில் நிலைத்திருக்கவும், அவருடைய மனைவியும், குடும்பத்தின் இதர மக்களும் தேவனுடைய மந்தைக்குள் வரவும் நீங்கள் அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

பித்தோராகார் பட்டணத்திலும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் கடந்த 3 ஆண்டு காலமாக நாங்கள் சுவிசேஷத்துடன் சந்தித்த மக்களும், குடும்பங்களும் பல உண்டு. அதின் விபரம் நான் இங்கு எழுதுவதானால் அது பல நூறு பக்கங்களுக்கு தேவ எக்காளத்தில் நீண்டு செல்லும். கர்த்தர் அந்த ஆத்துமாக்களோடு பேச ஜெபித்துக் கொள்ளுங்கள். எங்களுடைய சந்திப்பில் மிகுந்த ஆர்வம் காண்பித்த மக்களை சந்திக்கும்படியாக பாஸ்ட்டர் சாமுவேலிடம் நாங்கள் விபரம் கொடுத்துள்ளோம்.

"பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்" (சகரியா 4 : 6) "என்னை அல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (யோ 15: 5) "அவர் குதிரையின் பலத்தில் விருப்பமாயிரார், வீரனுடைய கால்களில் பிரியப்படார்"

(சங் 147: 10)

Study universal holiness of life. Your whole usefulness depends on this, for your sermons last but an hour or two, your life preaches all the week. If Satan can only make a covetous minister, a lover of praise, of pleasure, of good eating, he has ruined your ministry. Give yourself to prayer, and get your texts, your thoughts, your words from God. Luther spent his best three hours in prayer. .

(Robert Murray McCheyne)

இரக்கம், கருணை, அன்பற்ற ஒரு கல்நெஞ்சினனான அஞ்ஞானி ஒருவனுடைய மார்புக்கு நேராக ஒரு புறா பறந்து செல்லுகின்றது. காரணம் அதைப் பிடித்து பட்சிப்பதற்காக ஒரு வல்லூறு அதை வேகமாக துரத்திக் கொண்டு வருகின்றது. அதைக் காண்கின்ற அந்த மனிதன் "புறாவே, நீ என்னண்டை தைரியமாக பறந்து வரலாம். நான் உனக்கு முழுமையான அடைக்கலம் தருவேன். ஒருபோதும் நான் அந்த பொல்லாத பருந்தினிடம் உன்னை ஒப்புக்கொடுக்கமாட்டேன். நானும் உனக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டேன்" என்று பேசுகிறான். ஆச்சரியமாக இருக்கின்றதல்லவா!

ஒரு இரக்கமற்ற கல்நெஞ்சினனான மனிதன் தன்னண்டை அடைக்கலம் தேடி வரும் ஒரு புறாவுக்கு அப்படி சொல்லி அதை தனது மார்போடு அரவணைத்து வைத்துக்கொள்ளுவானானால் அன்பே உருவான தேவன் சாத்தானாம் பிசாசுக்கு தப்பும்படியாக தமது மார்புக்கு நேராக நித்திய புகலிடம் தேடி ஓடி வரும் ஏழை ஆத்துமாக்களுக்கு எத்தனை நிச்சயமாக புகலிடம் கொடுத்து தமது மார்போடு வைத்து அவர்களை தமது ஆணி கடாவுண்ட அன்பின் கரங்களால் அரவணைத்துக் காத்துக் கொள்ளுவார்.

"தேவனே, நான் சாத்தானாம் பிசாசால் பாவச் சோதனைகளால் தினமும் வேட்டையாடப்பட்டு வருகின்றேன். பாவச் சோதனைகள் என்னை அழித்துவிடுவது போன்று என்னை சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. நான் அந்த அழிவின் சோதனைகளை எனது சுயபெலத்தைக் கொண்டு வெற்றிக்கொள்ள இயலாது. எனது பெலத்தில் எனக்கு நம்பிக்கை கிடையாது. என்னை உமது நித்திய பெலத்தால் காத்துக் கொள்ளுவதும் அல்லது எனது ஆத்தும அழிம்பன் சாத்தானுக்கு கையளிப்பதும் உம்மைச் சார்ந்தது" என்று சொல்லி கர்த்தரின் கரங்களில் உன்னை சமூலமாக ஒப்புவிப்பாயானால் அவர் உனக்கு பாதுகாப்பான அடைக் கலமாவார். (எபி 6 : 17,18)

DEVA EKKALAM

REGISTERED NEWS PAPER
Regn. No. M : 8850 / 1970

121 ஆம் சங்கீதம் எனது தகப்பனாருக்கு மிகவும் பிடித்தமான சங்கீதமாகும். ஸ்காட்லாந்தைச் சேர்ந்த மக்கள் அதைப் "பயணிகளின் சங்கீதம்" என்று அழைக்கின்றார்கள். ஒரு குடும்ப உறுப்பினரோ, விருந்தாளியோ அல்லது நண்பரோ பயணமாய் புறப்படும்போது, குடும்ப ஜெபங்களில் இந்த சங்கீதம் வாசிக்கப்படுகின்றது. அல்லது பெரும்பாலும் பாடப்படுகின்றது. எனது தகப்பனார் ஓர் இளம் வாலிபனாக ஸ்காட்லாந்து தேசத்தை விட்டு அமெரிக்காவுக்கு புறப்பட்ட போது இந்தச் சங்கீதத்தைப் பாடி அவருக்கு விடை கொடுத்தார்கள்.

பல ஆண்டுகள் எனது தகப்பனார் இனிமையான நாட்களோடுகூட, இருண்ட வேளைகளையும் சந்திக்க வேண்டியதாகவிருந்தது. முதலாம் உலகப் போரின் போது அவர் இந்த சங்கீதத்தின் வார்த்தைகளோடு போருக்குச் சென்றார். குண்டு காயங்கள் பட்டவராக திரும்ப வந்து, கிட்டத்தட்ட ஒரு வருட காலம் மருத்துவமனையில் படுக்க நேரிட்டபோதும் இந்தச் சங்கீதம் அவருக்கு ஆறுதலைத் தந்தது.

தனது 87 ஆண்டு கால வாழ்க்கையில் என் தகப்பனார் அநேக "போக்கையும்" "வரத்தையும்" அனுபவித்தார். இறுதியாக அவர் மரண இருளின் பள்ளத்தாக்கில் இறங்கி, அக்கரையிலுள்ள தமது மோட்ச வீட்டுக்குப் பயணமாகச் சென்றபோதும்கூட அவர் 121 ஆம் சங்கீதத்தைப் பாடிக் கொண்டிருந்தார் என்று நான் நம்புகின்றேன்.

Edited and Published by N. Samuel

MAILING ADDRESS :- N. Samuel, Editor, "Deva Ekkalam",
Post Box No. 6, Kotagiri - 643 217, Nilgiris.

Coonoor Printing Press Ph : 30630